# துப்பறியும் ராஜ்

T.S.V. Nathan
1790
1790
1790

'மேதாவி'

எழுதிய துப்பறியும் நாவல்

பயங்கர நாவல்

SARASWATHI MAHAL LIBRARY + TANJORE +

பிரேமா

பிரசுரம்

சென்னை—24

பதிப்புரிமை வாய்ந்தது

விலை ரூ. 1—0—0

பிரேமா பிரசுரம்—20

பயங்கர நாவல் வரிசை—6

முதற் பதிப்பு : அக்டோபர், 1954
சகல உரிமைகளும் பெற்றது.

இந் நாவலில் வரும் பெயர்கள், சம்பவங்கள், சூழ்நிலைகள் அனைத்தும் கற்பனையே. இறந்தோர் இருப்போர் எவரையுமே குறிப்பிடுவன ஆகா.

அச்சிட்டோர் : ஸண்டே டைம்ஸ் பிரஸ், சென்னை—1.

# இந்த நாவல்

துர்ப்பாக்கியவசமாக ஒரு சிறுவன் தான் துப்பறிகிறான் என்றாலும் இந்த நாவல் சிறுவர்களுக்காக எழுதப்பட்டதல்ல.

## நாவலின் நோக்கம்

"பண ஆசைதான் சகல தீமைகளுக்கும் மூலவேர்"

—பைபிள்

பாபம் செய்யும் ஒவ்வோர் ஆத்மாவும் தனக்கே தீமையைச் சம்பாதித்துக் கொள்கிறது.

—திருக்குர் ஆன்

மற்ற ஜீவன்களைத் தன்னைப் போலக் கருதி ஒருவனும் கொல்லக் கூடாது; கொலைக்கு இசையவும் கூடாது

—புத்தர்

# பயங்கர அத்தியாயங்கள்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. அவசரத் தந்தி | .... | 5 |
| 2. சாவின் காரணம் என்ன ? | .... | 12 |
| 3. துரோகம் செய்தவன் | .... | 20 |
| 4. அப்பறிபவன் | .... | 31 |
| 5. புதியவளின் ரகசியம் என்ன ? | .... | 36 |
| 6. மூர்த்தி யார் ? | .... | 44 |
| 7. பாம்பாட்டி யார் ? | .... | 48 |
| 8. கொலைக் கருவி | .... | 52 |
| 9. இருட்டில் எமகிங்கரன் ? | .... | 55 |
| 10. மனச் சாட்சி | .... | 63 |
| 11. கொலை நடந்தபோது....? | .... | 70 |
| 12. சீதாவின் ரகசியம் | .... | 79 |
| 13. பிஞ்சிலே பழுத்தது | .... | 84 |
| 14. நீதி | .... | 91 |

# 1

## அவசரத் தந்தி



கொடைக்கானல் மலைச்சாரலுக்கு, தன் பள்ளித் தோழர்களோடு 'உல்லாஸ யாத்திரை'க்கு (எக்ஸ்கர்ஷன்) வந்திருந்த ராஜு, தனக்கு தந்தி வந்திருக்கிறதென்று கேள்விப்பட்டதும் திடுக்கிட்டுப் போனான். கைகள் ஏனோ, 'வெட வெட'வென்று நடுங்க, அந்தத் தந்தியை வாங்கிப் பிரித்துப் பார்த்தான்.

"இருக்காது! இருக்கவே இருக்காது!" என்று அலறிக் கொண்டே அந்தத் தந்தியைக் கீழே போட்டுவிட்டு, முகத்தை இரு கைகளாலும் பொத்திக் கொண்டு விம்மி விம்மி அழுதான். பக்கத்தில் நின்று கொண்டிருந்த பையன்களெல்லாம் திகைத்துப் போனார்கள். கீழே விழுந்த தந்தியையெடுத்து ஒருவன் வாய்விட்டுப் படித்தான் :

"பத்மா திடீரென்று இறந்து விட்டாள், உடனே வரவும்—கோபு."

ராஜுவின் சகோதரி தான் பத்மா. கோபு அவளது புருஷன்; ராஜுவின் அத்திம்பேர் (அத்தான்). அக்காள் வீட்டில் பத்மாவின் ஆதரவில் தான் ராஜு இருந்து வந்தான். பத்மா சாகக் கூடிய வயதல்ல; இளம் வயசுப் பெண்தான். அத்தானோடு மண வாழ்க்கையை அனுபவித்து முடியாத பருவந்தான். அதற்குள் அவள் திடீரென்று இறப்பதென்றால்......?......ஐயோ!......

ராஜுவின் நண்பர்களெல்லோரும் அவனை ரொம்பவும் தேற்றினார்கள். நடந்து போனதை நினைத்து வருத்தப்படுவதில் பயனில்லை யென்றும், உடனே சென்னைக்குப் புறப்பட்டுப் போய், சகோதரியின் சவத்தையாவது கண்ணால் பார்க்கும்படியும் கூறிப் பிரயாணப் படுத்தினார்கள்.

ராஜுவைப் போலவே அவனுடைய அக்காளும் மூக்கும் முழியுமாக அழகாயிருப்பாள். பத்மா என்ற பெயருக்கேற்ப அவளது முகத்தில் லக்ஷ்மி களை தாண்டவமாடும். அன்பு வழியும் அவளது முகத்தைப் பார்த்தாலே ராஜுவுக்கு எல்லாக் கவலையும் ஒழிந்து விடும். இப்போது அவள் முகத்தில் சவக் களையைக் காண்பதென்றால்......?......ஐயோ!......

* * * *

இயற்கைக் காட்சிகளுக்குப் 'பெயர் பெற்ற' கொடைக்கானல் மலைச்சாரலிலிருந்து வெகு தொலைவில் ரயில்வே ஸ்டேஷனை 'கொடைக்கானல் ரோடு' இருக்கிறது. உல்லாஸப் பிரயாணத்திற்காக அந்த ஸ்டேஷனில் வந்து இறங்கிய அன்று, ராஜு, அங்கே, மண்குடங்களில் அடைத்து விற்கப்படும் திராக்ஷைகளைப்பார்த்தான். ஊருக்குத் திரும்பும்போது, தன் அக்காளுக்கு அவசியம் அதை வாங்கிக் கொண்டு போக வேண்டுமென்று தீர்மானித்திருந்தான்.

இன்றைய தினமும் அந்த மண் குடங்களில் அடைத்த திராக்ஷைகளை விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அதை ராஜு வாங்கிக் கொண்டு போய் யாருக்குக் கொடுக்க முடியும்? அதைப் பார்த்தவுடன் அவனுக்கு மீண்டும் அழுகை பீறிக் கொண்டு கிளம்பியது. உயிரற்ற தன் அக்காளின் மரணப்படுக்கையில், தலைப்புறம் நின்று உடைக்க அந்த மண் பானை வேண்டுமானால் பயன்படலாம். ஆனால் உள்ளிருக்கும் திராக்ஷையைச் சாப்பிட அக்காள் இல்லையே!......"ஐயோ! அக்கா! அக்கா!" என்று ராஜுவின் உள்ளம் அலறியது.

ரயில் பிரயாணம் முழுவதிலும் அவன் அழுது கொண்டே வந்தான். பன்னிரண்டு பதினான்கு வயதுள்ள ராஜு, ரயிலில் தேம்பித் தேம்பி அழுது கொண்டே வருவதைப் பார்த்த ஒரு பாட்டி

மனம் இரங்கி, "ஏன் தம்பி, இப்படி சாப்பிடக்கூட இல்லாமல் அழுது கொண்டே வருகிருய் ?" என்று கேட்டாள். ராஜு தேம்பியபடியே, "என் அக்காள் இறந்து விட்டாள்" என்ருன்.

பாட்டி ரொம்பப் பரிதாபத்தோடு, "உன் அப்பா, அம்மா எங்கே இருக்கிருர்கள் ?" என்று கேட்டாள்.

ராஜு தேம்பலுடன், "எல்லோரும் இறந்து விட்டார்கள்" என்ருன்.

"வேறு அண்ணன் தம்பி......?" என்று விடாமல் கேட்டாள் பாட்டி.

"ஒருவருமில்லை" என்று சொல்லி விட்டு செருமிச் செருமி அழ ஆரம்பித்தான் ராஜு.

"காலம் வந்தால் எல்லோரும் ஒரு நாள் சாக வேண்டியவர்கள் தான் !" என்று வேதாந்த தோரணையில் கூறிய பாட்டி, "உன் அக்காளுக்கு என்ன வயசிருக்கும், தம்பி ?" என்று கேட்டாள்.

"சின்ன வயசுதான் !" என்று கூறிய ராஜு அதிகமாக அழ ஆரம்பித்தான்.

"கல்யாணமாகி விட்டதா ?"

"கல்யாணமாகி புருஷனேடுதான் சந்தோஷமாக இருந்தாள்".

"குழந்தைகள் ஏதாவது உன் அக்காளுக்கு உண்டா ?"

"அவள் பிள்ளைத்தாய்ச்சி, பாட்டி! பெண் பிறந்தால் எனக்கே கட்டிக் கொடுப்பதாகக் கேலி செய்வாள் பாட்டி ! அநியாயமாக இறந்து போனளே......இனிமே நான் என்ன செய்யப்போகிறேன், பாட்டி......என் அக்காளைக் கொண்டு போன கடவுள் என்னைக் கொண்டு போயிருக்கக் கூடாதா ?"

"கல்யாணமாகி ரொம்ப நாளாச்சோ ?"

"ஒரு வருஷம் பத்து மாசந்தான் ஆகிறது பாட்டி."

"தலைப் பிரசவமே ஆபத்தானது தான் !"

"ஒன்றும் தெரியவில்லையே, பாட்டி......அதைப் பற்றி நினைச்சாலே எனக்கு பயமா இருக்கு, பாட்டி......இனிமே எனக்கு இந்த உலகத்தில் என்ன இருக்கு ?"

"ஏன், உன் அக்கா புருஷன் உன்னைக் கவனிக்க மாட்டாரா ?"

"கவனிப்பார் ! ஆனல் அவரை என்னவோ எனக்குப் பிடிக்காது ! அக்காளே போய் விட்ட பிறகு இனிமே எனக்கு என்ன இருக்கிறது !" என்று ராஜு பொருமிப் பொருமி அழலானன்.

அதற்கு மேல் அவனைத் தொந்திரவு செய்யப் பாட்டிக்குத் தைரியமில்லை. அவனுக்குச் சாப்பிடுவதற்காகக் கொடுத்தாள். ஒன்றையும் அவன் வாங்கிக் கொள்ளவில்லை. உலகத்தில் தனக்கு ஆதரவாக இருந்த அக்காள்—அவன் மீது உயிரையே வைத்திருந்த அக்காள்—அவனை வளர்ப்பதற்காகத் தன்னையே தியாகம் செய்து கொண்ட அக்காள்—போய் விட்டாள். அதனால் இந்த உலகமே போய் விட்டது போலிருந்தது அவனுக்கு. பசி தூக்கம் எல்லாம் பறந்து போய், பேய் பிடித்தவன் போல உட்கார்ந்திருந்தான் ராஜு. ஆனால் அவன் கண்கள் மட்டும், கண்ணீரை ஆறாக ஓட விட்டுக் கொண்டிருந்தன......நல்ல பூரிப்பான உடலுடன் ஆரோக்கியமாய் இருந்தவள் எப்படி இவ்வாறு திடீரென்று இறந்திருப்பாள் என்ற சந்தேகம் அவன் நெஞ்சைத் துளைத்துக் கொண்டே இருந்தது. ஒரு வேளை யாராவது அவளைக் கொலை செய்திருப்பார்களா......? அவள் போட்டிருக்கும் நகைகளுக்கு ஆசைப்பட்டு யாராவது திருடர்கள் அவளைக் கொன்றிருப்பார்களோ......? ஐயோ, கடவுளே......ஒன்றும் புரியவில்லையே......!

* * * *

செங்கற்பட்டு ஜங்ஷனை வண்டி நெருங்கிய போது பொழுது விடிந்து விட்டது. திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வழக்கமாக அங்கு சில நிமிஷங்கள் தாமதித்து நிற்கும். அந்த நேரத்தில் பிரயாணிகள் தங்கள் காலைக் 'காபி'யை அவசர அவசரமாக போய்ச் சாப்பிட்டு வருவார்கள்.

பொழுது விடிந்து விட்டது என்றதும் ராஜுவுக்கு 'சொரேல்' என்றது. பாழாய்ப் போன ரயில் எதற்காக இவ்வளவு நேரம் அங்கு நிற்கிறதென்று துடித்தான். ஏனென்றால் அவர்கள் ஜாதியில் பிணத்தை அதிக நேரம் வைத்திருக்க மாட்டார்கள். அதுவும் முதல் நாள் மரணமடைந்த தன் சகோதரியின் பிரேதத்தை அன்று இரவே 'அடக்கம்' செய்திருக்க வேண்டும். ராஜுவுக்காக மனம் இரங்கி அவர்கள் தாமதப்படுத்தி இருந்தாலும், பொழுது விடிந்து சிறிது நேரத்திற்கெல்லாம் கொண்டு போய் அக்காளின் பிரேதத்தை அடக்கம் செய்தே தீருவார்கள். அதற்குள் இந்த 'பாழாய்ப் போன' ரயில் போய்ச் சேருமா எனத் துடித்தான் ராஜு.

ராஜுவின் துடிப்பைக் கொஞ்சங்கூட லட்சியம் செய்யாமல், வண்டியின் 'கார்டு' சாவதானமாக பிளாட்பாரத்தில் போய்க் கொண்டிருந்தார்.

தனக்கிருந்த பதைப்பில், "ஸார்! சீக்கிரம் வண்டியை விடுங்கள்! நான் அவசரமாகப் போக வேண்டும்" என்று கார்டை நோக்கிக் கத்தினான் ராஜு.

கார்டு திகைத்துப் போய்த் திரும்பிப் பார்த்தார். பிறகு ஏளனமாகச் சிரித்தபடி, "அவ்வளவு அவசரமாக இருந்தால் ஏரோப்ளேனில் போயிருக்கலாமே !" என்று கிண்டலாகக் கூறினார்.

ராஜூவின் பதட்டம் அடங்கவில்லை. "சார், என் அக்காள் செத்துப் போய் விட்டாள், ஸார்! அவள் பிரேதத்தை எடுத்து விடுவார்கள் ஸார்! நான் கடைசியாக ஒரு முறை அவள் சவத்தையாவது பார்த்து விட வேண்டும், சார்! சார்......தயவு செய்து..." என்று பதறினான்.

கார்டு பிரமித்து விட்டான். 'சட்'டென்று தன் பாக்கெட் கடிகாரத்தைப் பார்த்தான். உடனே 'விசிலை' எடுத்து ஊதி பச்சைக் கொடியை வீசினான். ரயில் புறப்பட்டது. ராஜூ பதைபதைப்போடு, சென்னை இருக்கும் திக்கை நோக்கிப் பார்த்தபடி கண்ணீருடன் உட்கார்ந்திருந்தான்.

ரயிலில் சிலர் அன்றையச் செய்திப் பத்திரிகைகளை வாசித்துக் கொண்டிருந்தார்கள். கொலை வழக்குகளைப் பற்றித்தான் சுவாரசியமாக விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

"இங்கே பாருங்கள் ஸார், ஒரு பயங்கரமான கொலை வழக்கு... ஒருத்தி தன் காதலனுக்காகத் தன் புருஷனையே கொன்று விட்டாள்......காதலனோடு ஓடிப் போய் உல்லாசமாக வாழ வேண்டுமென்றால் அதற்கு நிறைய பணம் தேவைப்படுமல்லவா ? அதற்காக இந்தக் கிராதகி என்ன செய்திருக்கிறாள், பாருங்கள்...... புருஷனுக்கு குதிரைப் பந்தயத்தினால் ஏகப்பட்ட நஷ்டம். ஆனால் எப்போதோ அவன் தன் பெயரால் இரண்டு லட்ச ரூபாய்க்கு இன்சூரன்ஸ் செய்து கொண்டிருக்கிறான். அவன் திடீரென்று இறந்து போனால் அந்தப் பணத்தைத் தன் மனைவியிடம் கொடுக்க வேண்டுமென்று இன்சூரன்ஸ் கம்பெனிக்கு எழுதி வைத்திருந்தான். அவனை அவன் மனைவி கொஞ்சம் கொஞ்சமாக உணவில் விஷங் கலந்து கொடுத்து இரகசியமாகக் கொன்று விட்டு இன்சூரன்ஸ் கம்பெனியில் பணத்தை வாங்க முயற்சி செய்திருக்கிறாள். உடனே போலீஸார் சந்தேகப்பட்டு அவளைப் பிடித்துக் கொண்டு விட்டார்களாம்......" என்றார் பத்திரிகை படித்த ஒருவர்.

"இதென்ன ஸார் அதிசயம்! இந்த நாகரீக காலத்தில் பணத்தேவை பெருகி பணமே பிரதானமாகி விட்டதால், அதற்காக என்னென்னவோ கொலைகள் நடக்கின்றன. அதுவும் இன்சூரன்ஸ் கம்பெனிகளை மோசடி செய்வதற்காக நடக்கும் கொலைகள் இப்போது அதிகமாகி விட்டன" என்றார் இன்னொருவர்.

இதை ரயிலில் கேட்டுக் கொண்டிருந்த ராஜூவின் நெஞ்சு திக்கென்று அடித்துக் கொண்டது. தன் அக்காள் பேரில் ஏன் அத்தான் இன்சூரன்ஸ் செய்திருக்கிறார்......?

*　　*　　*　　*

எழும்பூர் ஸ்டேஷனுக்கு வழக்கமாக வந்து சேர வேண்டிய நேரத்திற்கு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வந்து சேர்ந்தது. வண்டி நின்றதும் நிற்காததுமாக ராஜூ, 'கம்பார்ட்மெண்'டிலிருந்து குதித்து ஓடினான். தியாகராய நகரிலுள்ள தன் அக்காள் வீட்டிற்கு இருபத்தைந்து நிமிஷங்களுக்குள் வந்து விட்டான்!

வீட்டின் 'காம்பவுண்'டை நெருங்கியதும் அவன் மனம் 'திக் திக்'கென்று அடித்துக் கொண்டது. ஏனென்றால், வெளியில் யாருமே இல்லை. பங்களாவின் வெளி வராந்தாவும் காலியாக இருந்தது. ராஜூவுக்கு 'பகீ'ரென்றது. "ஒருக்கால் அக்காளின் சவத்தை அடக்கம் செய்திருப்பார்களோ ?......இருக்காது......... இருக்கக் கூடாது!......பகவானே......'என்று அலறும் இருதயத்தைக் கையால் அழுத்திப் பிடித்துக் கொண்டே உள்ளே ஓடினான். உள் ஹாலில் அவன் அத்தான் கோபு தலையில் கையை வைத்தபடி சோபாவில் உட்கார்ந்திருந்தான்.

கோபு மூன்று மனைவிகளைப் பறி கொடுத்தவன்தான் என்றாலும் அவ்வளவாக வயதானவனல்ல. இன்னும் நல்ல உடல் கட்டுண்டு. அம்மைத் தழும்புகள் நிறைந்த முகத்துடன் அருவருப்பான தோற்றமுள்ளவன். ஆனால் ராஜூவின் அக்காள் அந்த முகத்தில் தான் மயங்கி இருந்தாள். இவ்வளவு பெரிய லக்ஷாதிபதி புருஷனைக் கிடைக்க எந்தப் பெண்ணும் தவம் செய்வாளே என்று கூடப் பெருமையாகக் கூறுவாள். கோபுவின் கையில் ஆரம்பத்தில் காசு கிடையாது. எல்லாம் சுய சம்பாத்தியம். இந்த வயசிற்குள்ளாகவே நிறையப் பணம் சம்பாதித்து பெரிய ஏற்றுமதி இறக்குமதி கம்பெனி முதலாளியாக விளங்குகிறானே யென்று கோபுவின் திறமையை ஊரெல்லாம் பாராட்டியது. ஆனால் திறமையும் பணமும் இருந்தால் போதுமா ? அவனுடைய அம்மைத் தழும்பு முகத்தில் தன் அக்காள் எப்படித்தான் மயங்கினளோ என்று ராஜூ அடிக்கடி பொருமியதுண்டு. ஏழ்மையிலும் ஏழையான தன்னை வளர்ப்பதற்காகவே தன் அக்காள் அந்த லக்ஷாதிபதிக்கு மூன்றாந்தாரமாக வாழ்க்கைப்பட்டாள் என்று ராஜூ நினைத்து ஓயாமல் பெரு மூச்செறிவதுண்டு.

ராஜூவைக் கண்டதும், "ராஜூ!" என்று அலறிக் கொண்டே எழுந்து வந்து கோபு அவனைக் கட்டிக் கொண்டு அழுதான். அத்-

தான் தன் அக்காள் மீது உயிரையே வைத்திருந்தான் என்பதும், அவளோடு கொஞ்சிக் குலவாத நேரமே கிடையாது என்பதும் ராஜூக்குத் தெரியும். ஆனுல் தனக்காகத் தான் தன் அக்காள் அவனுக்கு மூன்ருந்தாரமாக வாழ்க்கைப்பட்டாள் என்ற நினைப்பினுல் அத்தானை உள்ளூர அவனுக்கு என்னவோ பிடிப்பதில்லை.

ராஜூ தேம்பித் தேம்பி அழுதபடியே, "அத்திம்பேரே! அவசரப்பட்டு ஏன் அத்திம்பேரே என் அக்காளை அடக்கம் செய்தீர்கள். நான் பார்க்கக்கூட, 'கொடுத்து வைக்க'வில்லையே. ஐயோ அக்காள்!" என்று பதறினுன்.

அத்தான் கோபு கண்களைத் துடைத்துக் கொண்டான். "பத்மாவை ஆஸ்பத்திரிக்கு எடுத்துப்போயிருக்கிருர்கள்" என்று எங்கோ 'வெட்டவெளி'யைப் பார்த்தபடி கூறினுன்.

ராஜூ ஸ்தம்பித்துப் போய் விட்டான்! ஆஸ்பத்[illegible] 'அப்படியானுல்......அத்திம்பேரே; அவள் அவள்......" எ[illegible] நாக்குழறப் பேச முடியாமல் தவித்தான்.

கோபு மறுபடியும் வரண்ட குரலில் "அவள் இறந்துவிட்டாள்! அவள் உடலை 'அறுத்துப் பார்க்க' ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போயிருக்கிருர்கள்!" என்ருன்.

ராஜூவின் நெஞ்சு பிளந்துவிடும் போலிருந்தது. அளவு கடந்த பதட்டத்தோடு, "அக்காளை அறுத்துப் பார்க்கப் போகிருர்களா? எதற்காக அறுத்துப் பார்ப்பது? ஏன் இந்த அநியாயத்திற்குச் சம்மதித்தீர்கள் அத்திம்பேரே! என் அக்காளை ஏன் அறுக்க வேண்டும்? அவள் என்ன பாவம் செய்தாள்? சொல்லுங்கள் அத்திம்பேரே; சொல்லுங்கள்!" என்று கோபுவைப் பிடித்து வெறி கொண்டவன் போலக் குலுக்கினுன் ராஜூ. கோபு ஒன்றுமே பேசவில்லை. பைத்தியம் பிடித்தவன் போல வெறும் வெட்டவெளியைப் பார்த்துக் கொண்டு நின்ருன். அம்மைத் தழும்பு நிறைந்த அத்தானின் முகத்தில் ஒருவித உணர்ச்சியும் இல்லாமலிருப்பதைக் கண்ட ராஜூ மனமிடிந்து போனுன்!



## 2. சாவின் காரணம் என்ன ?

"பாம்-பாம்" என்ற சப்தத்தோடு வெளியே ஒரு கார் வந்து நின்றது. ராஜு திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தான். பத்மாவின் பிரேதம், பரிசோதனைக்குப் பிறகு திரும்ப அனுப்பப்பட்டிருக்கிறது. பிரேதத்தோடு, பக்கத்துவீட்டு சாமாவும், மற்றும் சில தூரத்து உறவினர்களும் வந்தார்கள்.

"அக்கா !" என்று அலறிக்கொண்டே, பிரேதத்திடம் ஓடினான் ராஜு. சட்டென்று சாமா அவனைப் பிடித்துக் கொண்டான். "அதைத் தொடாதே! அறுத்துப்பார்த்த உடம்பு! கெட்டுப்போய் விடும் !" என்று ராஜுவைச் சமாதானப்படுத்தினான். ராஜுவின் உடல் கட்டுமீறித் துடித்தது.

"எதற்காக என் அக்காளை அறுத்துப்பார்க்க வேண்டும் ? ஏன் இப்படி அக்ரமம் செய்தீர்கள் ?" என்று ராஜு கத்தினான்.

"போலீஸார் பார்க்கவேண்டுமென்று வற்புறுத்தினார்கள் !" என்றான் சாமா.

போலீஸ்! போலீஸார் எதற்கு வந்தார்கள்? ஏன் வந்தார்கள்? இதுவரையில் பத்மா எப்படி இறந்தாள் என்று கேட்கத் தோன்ற வில்லை ராஜுவுக்கு! இப்பொழுதுதான் அவனுக்கு அந்தக் கேள்வியே தோன்றியது. "அக்காள் எப்படி இறந்தாள்?—சொல்லு சாமா! சொல்லு!" என்று நடுங்கிய த்வனியில், சாமாவின் காதருகில் மிகவும் ஈனஸ்வரத்தில் கேட்டான்.

சாமா அவனைச் சமாதானம் செய்பவனைப்போல மெதுவாக பக்கத்தில் ஒரு இடத்திற்கு அழைத்துக்கொண்டு போனான்.

"பத்மா, தோட்டத்திலுள்ள தண்ணீர்த்தொட்டியில் முழுகி இறந்து கிடந்தாள்!" என்று மெதுவாகக் கூறினான்.

"தண்ணீர் தொட்டியிலா? பூச்செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச நிரப்பி வைத்திருப்போமே, அந்தத் தண்ணீர்த் தொட்டியிலா?" என்று பிரமிப்போடு கேட்டான் ராஜு.

"ஆமாம்!" என்று தலையாட்டினான் சாமா.

"அதில் ஒரு அடி ஜலத்திற்குமேல் இருக்காதே!" என்று இன்னும் அதிக பிரமிப்போடு கேட்டான் ராஜு.

"அவ்வளவு தான் ஜலம் இருந்தது. நேற்று மத்தியானம் உன் அத்திம்பேர் கோபு தன் நண்பர்கள் இரண்டு பேரோடு 3½ மணிக்கு வீட்டுக்கு வந்தார். 'பத்மா-பத்மா' என்று கூப்பிட்டாராம். பதிலே இல்லையாம். உடனே எழுந்து உள்ளெல்லாம் தேடிவிட்டு தோட்டத்துப்பக்கம் போயிருக்கிறார். அங்கே தண்ணீர் தொட்டியில் தலை அமிழ்ந்துகிடக்க தலைகுப்புறக் கிடந்தாளாம் உன் அக்காள். 'ஐயையோ!' என்று உன் அத்திம்பேர் அலறி இருக்கிறார். சத்தம் கேட்டதும் அவரது நண்பர்களெல்லாம் அங்கே ஓடி இருக்கிறார்கள். உன் அக்காள் உடம்பை மெதுவாகத் தூக்கி உள்ளே கொண்டுவந்து போட்டார்களாம். அவள் உயிர் போயிருந்தது. உடனே போலீஸுக்கு டெலிபோன் செய்திருக்கிறார்கள். போலீஸார் பிரேத பரிசோதனைக்காக அவளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றார்கள். வீட்டிலிருந்த ஒரு கடிதத்தையும் போலீஸார் எடுத்துச் சென்றார்களாம்......" என்று சாமா சொல்வதற்குள், ராஜு படபடப்பாக "என்ன கடிதம்?" என்று பதறினான். "உன் அக்காள் உனக்கு எழுதிவைத்திருந்த கடிதம்!" என்றான் சாமா.

"எனக்கா? என்ன எழுதிவைத்திருந்தாள்? சொல்லு!" என்று துடித்தான் ராஜு.

"தோட்டத்திற்குத் தண்ணீர் எடுத்து விடும்போது, தனது காலில் ஏதோ பாம்போ என்னவோ கடித்துவிட்டதாகவும், அதனால் தனக்கு அடிக்கடி மயக்கம் வருவதாகவும், தனக்கு தனியாக

இருக்க பயமாக இருப்பதாகவும், கொடைக்கானலிலிருந்து உன்னை உடனே புறப்பட்டு வரும்படியும் எழுதி இருந்தாளாம்."

ராஜு தீயில் விழுந்த புழுவைப்போலத் துடித்தான். "ஐயோ, அந்தக் கடிதத்தை அவள் ஏன் தபாலில் போடவில்லை!" என்று பதறினன்.

"அப்பொழுதுதான் எழுதி இருப்பாள் போலிருக்கிறது. உடனே தோட்டத்துப்பக்கம் போயிருப்பாள். மயக்கம் வந்து தொட்டியில் விழுந்து இறந்திருப்பாள்" என்று சமாதானம் கூறினன் சாமா.

ராஜுவுக்கு இந்த உலகமே சுற்றுவது போலிருந்தது. கர்ப்பமாக இருந்த தன் அக்காளைத்தனியேவிட்டு, உல்லாஸப் பிரயாணம் போவதற்கு அவனுக்கு கொஞ்சங்கூட இஷ்டமில்லாமல்தான் இருந்தது. இருந்தபோதிலும் அக்காள் ரொம்பப் பிடிவாதமாக அவனை அனுப்பிவைத்தாள். அதோடு அத்தான் கோபுவும், அவனது அசட்டுப் பயத்திற்காக அவனைக் கேலி செய்துவிட்டு "அவசியம் போய்விட்டுவா. இம்மாதிரி கிடைக்கும் சந்தர்ப்பங்களை இழக்கக்கூடாது" என்று சொல்லி அவனை அனுப்பிவைத்தார். இதையெல்லாம் நினைக்க நினைக்க, ராஜுவுக்கு ஆத்திரம் குமுறிக் கொண்டு வந்தது.

உள்ளே, சவ அடக்கத்திற்கான ஏற்பாடுகள் எல்லாம் முடிந்தது. எல்லோரும் மயானத்திற்குப் புறப்படத் தயாரானர்கள்.

ராஜுவும் மயானத்திற்குப் போனன். தன் அக்காள் புருஷன் கோபு, ஒரு பிரேதம் போல ஒவ்வொரு செயலையும் செய்வதைப் பார்க்கும்போது ராஜுவுக்கு ரொம்பப் பரிதாபமாக இருந்தது. பத்மாமீது கோபு எவ்வளவு பாசம் வைத்திருந்தான் என்று ராஜுவுக்கு நன்ருகத் தெரியும். அப்படிப்பட்ட அன்பு மனைவியை திடீரென ஒருநாள் இழந்து விடுவதென்பது எவ்வளவு பயங்கரமான அதிர்ச்சியைக் கொடுக்கும் என்பதையும் ராஜு அறிவான்.

தன்னைவிட மிகவும் துரதிருஷ்டசாலி கோபுதான் என்று ராஜு நினைத்தான். ஏனென்ருல், கோபுவுக்கு இதற்கு முன் இரண்டு தடவை மணமாகி இருந்தது. முதல் மனைவி, மணமாகி ஒரு வருஷம் ஆவதற்குள் இறந்துவிட்டாள். இரண்டாவது மனைவி, கல்யாணமான பதினேழு மாதத்தில், எலெக்ட்ரிக் "ஷாக்" அடித்து இறந்துபோய்விட்டாள். மூன்ருவது மனைவியான பத்மா தான் கொஞ்சம் அதிக நாட்கள் உயிரோடு இருந்திருக்கிருள். அவளுக்கு மணமாகி ஒருவருஷம் பத்துமாதம் ஆகிறது. அதோடு ஐந்துமாதக் கர்ப்பிணியாகவும் இருந்தாள்.

ராஜுவுக்கு இதையெல்லாம் நினைத்ததும், நெஞ்சு வெடித்து விடுவதைப்போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. அதனால் நிற்க முடியவில்லை. கால்கள் பின்னின. கண்கள் சுழன்றன. பூமி வெகு வேகமாகச் சுற்றுவதைப் போலிருந்தது. 'தடா'லென்று மயக்கம்போட்டுக் கீழேவிழுந்துவிட்டான். சாமாவும்மற்றவர்களும் ஓடிப்போய் அவனைத் தூக்கினார்கள்.

* * *

மூர்ச்சை தெளிந்து, ராஜு கண்விழிக்கும் போது, தான் வீட்டிலிருப்பதை உணர்ந்தான். அருகில், அவனது பள்ளித் தோழனான விச்சு உட்கார்ந்திருந்தான். ராஜு கண் விழித்ததும், விச்சு, பதட்டத்தோடு, "எப்படி இருக்கிறது ராஜு?" என்று விசாரித்தான். " இப்பொழுது ஒன்றுமில்லை " என்று முனகினான் ராஜு.

விச்சு, அந்த சர்கம் ஸப்-இன்ஸ்பெக்டரான வேதாசலத்தின் மகன். வேதாசலம் தான், பத்மாவின் பிரேத பரிசோதனை நடத்தியவர். விச்சுவும் ராஜுவும் இணைபிரியாத தோழர்கள். பல சந்தர்ப்பங்களில் ராஜு, விச்சுவைத் தன் வீட்டிற்கு அழைத்து வந்து பத்மாவிடம் பக்ஷணங்களெல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கிறான். பள்ளிக்கூட நேரம்போக மற்ற நேரங்களிலெல்லாம் இருவரும் ராஜுவீட்டுக் காம்பவுண்டில் இருந்த "அவுட்-ஹவுஸ்" (வேலைக்காரர் விடுதி)யில் போய் விளையாடுவார்கள். அந்த விடுதியில் யாரும் குடியில்லாததால் எப்பொழுதும், அது காலியாகவே இருந்தது.

மயக்கத்திலிருந்து விடுபட்ட ராஜுவுக்கு, அந்த நேரத்தில் விச்சுவைப்பார்த்தது ரொம்ப ஆறுதலாக இருந்தது.

"ஏண்டா விச்சு; உன் அப்பாதானே இந்த சர்கத்துக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர்! அவர் இருந்துகூடவா, என் அக்காள் உடம்பை அறுத்து அலங்கோலம் செய்யவேண்டுமென்றார்?" என்று கண்ணீர் ததும்பக் கேட்டான்.

விச்சு சுற்றுமுற்றும் ஜாக்கிரதையோடு திரும்பிப் பார்த்து விட்டு, வீட்டில் அவர்களைத் தவிர வேறுயாருமில்லை என்பதைத் தெரிந்துகொண்டு இரகசியமான குரலில், "இல்லை ராஜு; உன் அக்காள் இறந்தவிதத்தில் பலத்த சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அது சாதாரணச் சாவு அல்லவாம். அப்பா எங்கள் அம்மாவிடம் சொல்லிக்கொண்டிருந்தார்" என்று ரகசியமாகக் கூறினான்.

ராஜு திகைப்போடு, "அப்படியென்றால்......???" என்று விச்சுவின் முகத்தைப் பார்த்தான்.

"கொலையாக இருக்கும் என சந்தேகப்படுகிருர் !" என்று இன்னும் ரகசியமாகக் கூறினன் விச்சு.

"கொலையா ?" ராஜுவின் முகம் சவம்போல வெளுத்து விட்டது. "யார் கொலை செய்திருப்பார்கள் ? எதற்காகச் செய் திருப்பார்கள் ? அப்படி என் அக்கா யாருக்கு என்ன தீங்கு செய் தாள் ? உன் அப்பா எதனுல் அப்படிச் சொல்லுகிருர் ?" என்று பதறினன் ராஜு.

விச்சு மீண்டும் ஒருமுறை ஜாக்ரதையாக சுற்றிலும் பார்த்துக் கொண்டான். பிறகு மெதுவாக ஆரம்பித்தான்.

"உன் அத்தானின் முதல் மனைவி எப்படி இறந்தாள் என்று உனக்குத் தெரியுமா ?" என்று சந்தேகத்தை எழுப்பும் குரலில் கேட்டான்.

"தெரியாது ! ஏதாவது நோய் வந்து இறந்திருப்பாள் !" என்ருன் ராஜு சகஜமாக.

"இல்லை. அவள் இந்த காம்பவுண்ட் மூலையில் பாழுடைந்து போய் இருக்கிறதே அந்தக் கிணற்றில் தவறி விழுந்து இறந்து விட்டதாக அப்பொழுது உன் அத்தான் போலீஸுக்குத் தெரிவித் திருக்கிருர். அந்தச் சமயத்தில் மழைபெய்து, பூமி வழுக்கிவிடும் நிலையில் இருந்ததாலும், அந்தக் கிணற்றுக்குக் கைப்பிடிச் சுவர் இல்லாததாலும் அதை எல்லோரும் நம்பினர்கள். அதன் பிறகு இரண்டாவது மனைவி, எலெக்ட்ரிக் ஷாக் அடித்து இறந்திருக்கிருள். கடைசியில் உன் அக்காள் இப்படி இறந்திருக்கிருள். இதேபோல, உன் அத்தானின் ஒவ்வொரு மனைவியும், மணந்த சில காலத் திற்குள்ளாகவே துர்மரணம் அடைவது ஏன் ?" என்று நிறுத்தி னன் விச்சு.

"ஏன் ? ஏன் ?" என்று பதறினன் ராஜு.

"அங்குதான் ஏதோ மர்மம் இருக்கிறது. அதோடு உன் அக்காள் உடலை ஆஸ்பத்திரியில் சோதனை செய்தபோது வேருெரு உண்மையும் வெளிப்பட்டது......"

"என்ன ? என்ன ?" என்று துடித்தான் ராஜு.

"அவள் காலில் மிகக் கொடிய விஷப்பாம்பான கட்டுவிரியன் கடித்திருக்கிறது......" என்று விச்சு சொல்லிக்கொண்டிருக்கும் போதே ராஜு குறுக்கிட்டு, "அதைத்தான் அவள் எனக்குக்கடிதத் தில் கூட எழுதி இருந்தாளாமே" என்ருன்.

"இருக்கலாம். ஆனல் அந்தப் பாம்பு கடித்து இரண்டு நாட்கள் ஆகியும், அதற்கு மருந்தே போடாமல் விட்டுவைத்திருக்கி ருர்கள், என்று ஆஸ்பத்திரியில் கூறினர்கள்" என்று கூறினன் விச்சு.

"அப்படியானால், அக்காள் சாகட்டுமென்று அத்திம்பேர் இருந்திருப்பார் என்கிறாயா? கோபு அவ்வளவு குரூரமான கணவரா? என் அக்காளோடு சிரித்துப் பேசி வாழ்ந்ததெல்லாம் வெறும் நடிப்புதானா?" என்று சந்தேகத்தோடு ராஜு கேட்டான்.

"இருக்கலாம்!" என்று இழுத்தான் விச்சு.

ராஜுவுக்கு [ஆத்திரம் பொங்கிக்கொண்டு கிளம்பியது. "போடா முட்டாள்! தன் அருமை மனைவிகளை ஒருவர்பின் ஒருவராக எதற்கு என் அத்திம்பேர் கொலைசெய்யவேண்டும்?" என்று சீறினான்.

விச்சு சாவதானமாக, "பணத்திற்காக இருக்கலாம்!" என்றான். ராஜுவுக்கு ஒன்றும் புரியவில்லை. "எப்படி பணம் கிடைக்கும்?" என்று சந்தேகத்தோடு கேட்டான்.

"உன் அத்தான் கோபு, தனது முதல் மனைவியின்பேரில் ஐம்பது ஆயிரம் ரூபாய்க்கும், இரண்டாவது மனைவி மீது லக்ஷ ரூபாய்க்கும், இப்போது மூன்ருவது மனைவியின் பெயரில் ஒன்றரை லக்ஷமும் 'இன்ஷ்யூர்' செய்திருந்தாரல்லவா? அதனால் எந்த சமயத்தில் அவர் மனைவி இறந்தாலும் அவருக்கு இன்ஷியூரன்ஸ் கம்பெனியிலிருந்து ரூபாய் கிடைக்கும். இதைப்போல ஒன்றரை லட்ச ரூபாய் சேர்த்துவிட்டார். கடைசியாக உன் அக்காளையும் இறக்கச்செய்து இன்னொரு ஒன்றரை லக்ஷ ரூபாயைச் சேர்க்க முடிவு செய்திருப்பார்......" என்று விச்சு கூறிக்கொண்டே வரும் பொழுது ராஜு குறுக்கிட்டு, "என் பெயரிலும் தான் ஐம்பதினாயிரம் இன்ஷ்யூர் செய்திருக்கிருர்!" என்ருன்.

"அதைத்தான் சொல்ல வந்தேன். அந்த ஐம்பதினாயிரத்தையும் இன்சூரன்ஸ் கம்பெனியிலிருந்து வாங்க உன்னையும் தந்திரமாக உன் அத்தான் கொன்றுவிடக் கூடும். என் அப்பா உன்னைப் பற்றி ரொம்ப கவலைப்படுகிருர். நீ பிரியப்பட்டால், உன்னை ஒரு "ஆர்பனேஜில்" (அனாதை விடுதியில்) சேர்த்து விடுகிறேனென்கிருர். நீ இங்கே இருப்பது உன் உயிருக்கு எந்த நிமிஷத்திலும் ஆபத்து. உன் அத்தான் கோபு எந்தக் கிராதகச் செயலுக்கும் துணிந்தவராகத் தெரிகிறது" என்று கவலையோடு கூறினன் விச்சு.

ராஜு கொஞ்சநேரம் ஒன்றும் பேசவில்லை. அவன் மனம் ஆழ்ந்த யோசனையில் இறங்கிவிட்டது. "இது நிஜமாயிருக்குமா?" என்று ராஜு கேட்டான். "கையில் காலணு இல்லாமலிருந்த உன் அத்தான் பணக்காரனன இரகசியமே இதுதான்......"

ஒவ்வொரு விஷயமும் இப்பொழுதுதான் ராஜுவுக்குப் புரிய ஆரம்பித்தது. தன் அக்காள் புருஷன் கோபு, தன்னை அவ்வளவு பிடிவாதமாக உல்லாஸப் பிரயாணத்திற்கு அனுப்பியதும் இந்தக் காரணமாகத்தான் இருக்கலாம் என்று அவனுக்குத்

தோன்றியது. அதோடு, தன் அத்திம்பேருக்கு இவ்வளவு சொத்து எப்படிச் சம்பாதிக்க முடிந்தது என்றும் அவனுக்கு ரொம்ப நாளாகவே சந்தேகமாக இருந்தது. ஏனென்றால் அவர் "ஏற்றுமதி இறக்குமதி ஏஜன்ஸி" என்ற ஒரு கம்பெனியை வைத்து எந்தவித "பிஸினஸூம்" இல்லாமல் ஈ ஓட்டிக்கொண்டிருந்தார். அங்கு ஸீதா என்ற ஒரு பெண் டைபிஸ்டும், டைப்ரைட்டிங் மெஷினும் தான் இருந்தன. இந்தத் தொழிலுக்கு, அவர் அருமையான 'பாண்டியாக்'கார் ஒன்றும் வைத்திருந்தார். ஆரம்பகாலத்தில் ராஜூவுக்கு இதைப் பற்றியெல்லாம் கொஞ்சம் சந்தேகம் ஏற்பட்டது. ஆனால், கோபுவின் தோற்றமும் அவன் நடையுடை பாவனைகளும், ராஜூவுக்கு அவன்மேல் தோன்றிய சந்தேகங்களைப் போக்கின. அக்காளிடமும் தன்னிடமும் அவன் பிரியமாக நடந்துகொண்டதும், என்னவோ வருமான வரியை மறைப்பதற்காகத் தான் தன் மனைவியின் மீதும் தன் மைத்துனன் மீதும் இன்ஷூரன்ஸ் செய்வதாகக் கூறியதும், கோபுவின்மீது நம்பிக்கையையும் உண்டாக்கியிருந்தது. இப்போது சப் இன்ஸ்பெக்டர் மகன் சொல்வதைக் கேட்டபோது, அவனுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. இருந்தபோதிலும், ராஜூ, "இந்தப் போலீஸ்காரர்களுக்கே இது ஒரு பழக்கம். எல்லோர் மீதும் சந்தேகப்படுவார்கள்!" என்றான். விச்சு ஏளனமாகச் சிரித்தான். "போலீஸார் அவசரப்பட்டுச் சந்தேகப்பட்டுவிடவில்லை. இன்னொரு காரணமும் இருக்கிறது!" என்று புதிய குண்டைத் தூக்கிப்போட்டான்.

"என்ன காரணம்?" என்று பிரமித்துப்போய்க் கேட்டான் ராஜூ. "உன் அத்தானின் முதல் மனைவி கிணற்றில் விழுந்து இறந்துகிடந்த அன்றும், உன் அத்தான் பலரை வீட்டுக்கு அழைத்து வந்தார். அவரது இரண்டாவது மனைவி எலக்ட்ரிக் "ஷாக்" அடித்துக் கிடந்தபோதும் இரு நண்பர்களோடு தான் வந்தார். கடைசியாக உன் அக்காள் இறந்து கிடந்தபோதும்......" என்று விச்சு முடிப்பதற்குள், ராஜூ இடைமறித்து, "அப்படியானால் அதன் நோக்கம் என்ன?" என்றான். விச்சு சிரித்துக்கொண்டே, "இது தெரிய்வில்லையா? ஏதாவது கொலைவழக்கு வந்தால், தப்பித்துக்கொள்ள" சாட்சிவேண்டுமல்லவா! அதற்காக ஒவ்வொரு தடவையும் சாட்சிகளை அழைத்து வந்திருக்கிறார்! என்றான்.

ராஜூவுக்கு இது நியாயமாகவே பட்டது. ஏனென்றால், அந்த வீட்டில் தங்கியிருந்த ஒன்றரை வருஷகாலத்தில், அவன் அத்திம்பேர் கோபு எந்த நண்பரையும் வீட்டுக்கு அழைத்துவந்தது கிடையாது. அப்படி இருக்க, பத்மா இறந்துகிடந்த அன்று மாத்திரம்—அதுவும் நடுப்பகலில் எதற்காகத் தன் நண்பர்களை

அழைத்துவரப்போகிறார் என்று நினைத்தான். விச்சு சொல்வதிலும் உண்மை இருக்கும்போலவே தோன்றியது.

அப்படியானால், தன் அக்காளின் மரணத்திற்கு காரணம் கோபுதானா? நல்லவனைப்போல நடித்து, நயவஞ்சகமாகத் தன்னை நம்பிய மனைவியைக் கொலை செய்த கிராதகன் அவன் தானா? அப்படியானால் அவனைச் 'சும்மா' விடக் கூடாது. பழிக்குப் பழி வாங்கவேண்டும். உலகத்தார் முன்னிலையில் அவனைக் குற்றஞ் சாட்டி, தூக்குக் கயிற்றிலே துடிதுடித்துச் சாகச் செய்யவேண்டும் என்று ராஜுவின் மனம் பதறியது.

விச்சு, ராஜுவின் மனப் போராட்டத்தைப் புரிந்து கொண்டான். "என்ன ராஜு யோசனை?" என்று மெதுவாகக் கேட்டான்.

"பழிக்குப் பழிவாங்கவேண்டும்" என்று குமுறினான் ராஜு.

"போடா பைத்தியம்! பழிக்குப் பழி வாங்கும் வேலையை, போலீஸுக்கு விட்டுவிடு. நீ உன் உயிரைக் காப்பாற்றிக் கொண்டால் போதும். உன்னையும் தந்திரமாக வீட்டுக்குள்ளேயே கொன்றுவிட உன் அத்தான், ஏதாவது திட்டம் போட்டிருப்பார். அப்படித்தான் என் அப்பாவும் சொல்லுவார்!" என்றான் விச்சு.

ராஜுவின் ஆத்திரம் இன்னும் அடங்கவில்லை. "இல்லை விச்சு! என் அத்திம்பேர் சாமான்யத்தில் சிக்கிக்கொள்ள மாட்டான். நான் கூடவே இருந்து, அவன் அறியாமலே, அவனுக்கு எதிராக அத்தாட்சிகள் சேர்த்து, தக்க சமயத்தில் போலீஸாரிடம் அவனைக் காட்டிக்கொடுக்கப் போகிறேன்!" என்று படபடப்போடு கூறினான் ராஜு.

"ஆனல் அது எவ்வளவு ஆபத்து என்று உனக்குத் தெரியுமா ராஜு? ஒருக்கால் உன் உயிருக்கே மோசம் வரலாம்!" என்று கவலையோடு விச்சு கூறினான்.

"போகட்டுமே! என் உயிர்தான் போகட்டுமே! என் அக்காளுக்கு நான் அதுகூடச் செய்யாமல் போனால், உலகத்தில் என்ன தான் இருக்கிறது?" என்று கண்களிலிருந்து நீர் 'கடகட' வென்று வடிய ராஜு கூறினான்.

"நீ உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிறாய்" என்று குறைப்பட்டுக் கொண்டான் விச்சு.

"உனக்குத் தெரியாதடா விச்சு! என் அக்காள் தன் வாழ்நாளையே என் நல்வாழ்வுக்குத்தாண்டா தியாகம் செய்தாள். அந்த நன்றிக்கு நான் எத்தனை ஜன்மம் எடுத்து என் உயிரைத் தியாகம் செய்தாலும், போதாதடா!" என்று 'கோ'வென அழுதபடி தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டான் ராஜு.



## 3. தியாகம் செய்தவள்

"உனக்குத் தெரியாதடா விச்சு!" என்று ராஜு சொன்னானே தவிர, விச்சுவுக்கு ராஜுவின் பூரண வரலாறும் தெரியும். அதை ராஜுவே ஒரு தடவை அவனுக்குச் சொல்லியிருக்கிறான். பத்மா எப்படிப்பட்ட தியாகங்களை ராஜுவுக்காகச் செய்திருக்கிறாள் என்பதை நினைத்ததும், அவன் முடிவு நியாயமானது தான் என்று விச்சு நினைத்தான்.

தலையணையில் முகத்தைப் புதைத்தபடி ராஜு விம்மி விம்மி அழுது கொண்டிருந்தான். அவன் எதிரில் அளவு கடந்த வருத்தத்தோடு உட்கார்ந்திருந்தான் விச்சு. அவன் மனக் கண்ணெதிரில்

ராஜுவின் பழைய கால வாழ்க்கை, ஒரு திரைப் படம் போலத் தோன்றியது.

* * * *

ராஜு கைக் குழந்தையாக இருக்கும்போதே அவன் தந்தை இறந்துவிட்டார். பிறகு அவன் தாயார்தான் பத்மாவையும் ராஜுவையும் காப்பாற்றி வந்தாள். அதிகமாக சொத்து ஒன்றும் அவர்களுக்குக் கிடையாது அதனால் ராஜுவின் தாயார் இரண்டொரு வீட்டில் வேலை செய்து வந்தாள். அங்கு கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு வந்து, அரைப் பட்டினி, கால் பட்டினியாகக் காலத்தைக் கழித்துக் கொண்டு வந்தார்கள். ராஜுவின் அப்பா உயிரோடு இருந்த காலத்தில், அவர் கைநிறையச் சம்பாதித்தார். சம்பாதித்த பணம் எல்லாவற்றையும் தாராளமாகச் செலவு செய்தார். அந்தச் சமயத்தில் வீட்டில் ஒரே குழந்தையான பத்மாவுக்குக் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுப்பார். பெரிய கோடீஸ்வரர் வீட்டுப் பிள்ளை கூட அவ்வளவு செல்வாக்காக வாழ்ந்திருக்க முடியாது.

இப்படியெல்லாம், தான் சுகமாக வாழ்ந்திருக்க, தன் தம்பி ராஜு பிறந்தது முதலே கஷ்ட நிஷ்டூரத்தில் அவதிப்பட்டு வருகிறானே என்று, பத்மாவுக்கு அவன் மேல் அளவு கடந்த பரிதாபம் இருந்து வந்தது. வீட்டில் வறுமை ஏற்பட்ட பிறகும், பத்மா, அவனுக்காகத் தனது சுகங்கள் என்னென்னவற்றைத் தியாகம் செய்ய முடியுமோ அவ்வளவும் செய்து வந்தாள். ராஜுவை எப்படியாவது படிக்கவைத்து நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்து விடவேண்டும் என்று தாயும் மகளும் முடிவு செய்திருந்தார்கள்.

ஆனால் அவர்கள் முடிவுப்படி எதுவும் நடக்கவில்லை. ராஜு ஆறு வயதுக் குழந்தையாக இருக்கும்போது, அவன் தாயார் விஷஜுரம் கண்டு திடீரென இறந்துவிட்டாள். அப்பொழுது பத்மாவுக்கு வயது பதின் மூன்று.

துக்கம் விசாரிக்கவந்த பத்மாவின் மாமா (தாயாரின் சகோதரர்) குழந்தைகள் இருவரையும் தன் வீட்டுக்கு அழைத்துப் போவதாக ஊராரிடம் சொல்லிக் கொண்டார். மாமாவின் தாராள புத்தியைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

ஆனால் மாமாவின் நோக்கம் வேறாக இருந்தது. அவர் மனைவி ஒரு நோயாளி. வீட்டு வேலைகளைச் செய்ய வேலைக்காரர்களைத் தான் வைக்க வேண்டி இருந்தது. வேலைக்காரர்களை வீட்டோடு வைத்துக்கொள்வதென்றால் இந்தக்காலத்தில், சாப்பாடு துணி மணி எல்லாம் கொடுத்து, கை நிறையச் சம்பளம் வேறு கொடுக்க வேண்டும். அதோடு எந்தச் சாமானையும் வெளியில் போட்டுவிட்டுப்

போகவும் அவரால் முடியவில்லை. அவ்வளவு தூரம் அவர்களை அனுப்பவும் முடியவில்லை. இந்த நிலைமையில், பத்மாவையும் ராஜுவையும் அழைத்துக் கொண்டு போனால், செலவுக்கு செலவு மிச்சம்; அதோடு ஒரு நல்ல பெயர் வேறு கிடைக்கும்!

நிராதரவாக விடப்பட்ட பத்மாவுக்கும், ராஜுவுக்கும் மாமாவின் அழைப்பு ஒரு பெரிய ஆறுதலாக இருந்தது. தகனக் கிரியைகள் முடிந்ததும், மாமா ராஜுவையும் பத்மாவையும் தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு புறப்பட்டார்.

* * *

எதிர்பார்த்ததுபோல மாமா வீடு ஒரு சொர்க்கமல்ல என்று இரண்டொரு தினங்களிலேயே பத்மா புரிந்துகொண்டாள். மாமாவுக்குக் கிட்டு என்று ஒரு பையனும், ருக்மணி என்ற ஒரு பெண்ணும் இருந்தார்கள். ருக்குவுக்கு, பத்மாவின் வயது தான் இருக்கும். கிட்டு, ராஜுவைவிட சில மாதங்கள் மூத்தவனாக இருப்பான்.

கிட்டுவும், ருக்குவும் ஒரு கான்வெண்ட் ஸ்கூலில் படித்து வந்தார்கள். தினசரி அவர்களுக்குச் சாப்பாடு மூட்டை தூக்கிக் கொண்டுபோகும் வேலையும், அவர்கள் ஆடைகளைச் சலவை செய்யும் வேலையும் பத்மாவையும், ராஜுவையும் சேர்ந்தது. இதைத் தவிர சமையலிலிருந்து வீட்டிலுள்ள எல்லா விதமான எடுபிடி வேலைகளையும் அவர்கள் இரண்டு பேரும் தான் செய்ய வேண்டியிருந்தது.

மாமா வீட்டிற்குப் போனவுடன், ராஜுவையும் பள்ளிக்கூடத்தில் சேர்க்கச் சொல்லி பத்மா கேட்டுக் கொண்டாள். அதற்கு மாமா சிரித்துவிட்டு, "அவன் படித்து ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ணி கலெக்டர் உத்தியோகம் பண்ணப் போகிறானே? போடி பைத்தியம்!" என்று ஏளனமாகப் பேசினார். அதற்குமேல் அவரை வற்புறுத்திக் கேட்க பத்மாவுக்குத் தைரியமில்லை. இருந்தபோதிலும் ராஜுவின் எதிர்காலம் பாழாகப் போய்விடுமே என்று அவள் குழந்தை உள்ளம் தவித்தது. இதனால் கிட்டுவும், ருக்குவும் பள்ளியிலிருந்து திரும்பி வந்ததும், அவர்களை 'தாஜா' செய்து, ராஜுவுக்கு படிப்புச் சொல்லி கொடுக்கச் செய்தாள்.

மாமி இயற்கையிலேயே ஒரு கொடுமைக்காரி. அதுவும் நோயாகப் படுத்திருப்பதால் அவளுடைய சுபாவம் ரொம்பவும் கெட்டுப்போயிருந்தது. எடுத்ததற்கெல்லாம் பத்மா மேல் எரிந்து விழுவாள். அவள் செய்யும் சிறு தவறுகளைக் கூட பெரிதாகப் படுத்தி அவள் தலை மயிரைப் பிடித்து இழுத்து அவள் முதுகில் 'நாங்கு வாங்'கென்று வாங்கிவிடுவாள்! இதைப்பற்றியெல்லாம்

கூட பத்மா அவ்வளவாகக் கவலைப்படவில்லை. ராஜுவை, மாமி சதா விரோதம் பாராட்டி, "தண்டச் சோற்றுக் கழுதை! உனக்கு வெள்ளைச் சட்டை கேட்கிறதோ?" என்று கன்னத்தில் இடித்து அவனை அகாரணமாக அடிக்கும்பொழுது, எரி மலையாகக் குமுறி உள்ளுக்குள்ளேயே மனம் சாம்பிப் போவாள். அடிபட்டுக் கொண்டு வரும் ராஜு, பத்மாவிடம், "அக்கா! மாமி எதற்காக என்னை அடித்தாள்?" என்று பரிதாபமாகக் கேட்பான். மாமிக்கே 'ஏன் அடித்தோம்?' என்று காரணந் தெரியாது. அடிக்கவேண்டும் போலிருந்ததால அவனைக் கூப்பிட்டு அடித்தாள் என்பதைத் தவிர வேறு எந்தக் காரணமும் இருக்காது! தம்பி, நிராதரவாக தன் காலைக் கட்டிக்கொண்டு, "ஏனக்கா மாமி என்னை அடித்தாள்?" என்று திரும்பத் திரும்ப கண்ணீரும் கம்பலையுமாகக் கேட்கும் போது, பத்மா, குமுறிக்கொண்டிருக்கும் தன் ஆத்திரத்தை அடக்க முடியாமல் விம்மி விம்மி அழுவாள்.

இந்தத் தொல்லைகள் போதாதென்று, சமயத்தில் விளையாடும் போது, மாமா பிள்ளைகளுக்கும், ராஜுவுக்கும் ஏதாவது சண்டை வந்துவிடும். உடனே மாமி ராஜுவைக் கூப்பிட்டு, ஒரு விசாரணையுமில்லாமல் அடி அடியென்று அடித்து, இரவு முழுவதும் சோறு இல்லாமல் பட்டினி போட்டு விடுவாள்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பத்மா என்ன செய்வதென்று புரியாமல் பதறிப் போவாள். அவளிடம் அவள் அப்பாவின் பழைய போட்டோ ஒன்று இருந்தது அதை ஒரு தனி இடத்தில் எடுத்து வைத்துக் கொண்டு அதன் முன்னால் கண்ணீருங் கம்பலையுமாக உட்கார்ந்து, "ஏன் அப்பா எங்களைப் பெற்றுவிட்டு, இப்படிச் சீரழிய வைத்தீர்கள்?" என்று கதறுவாள். சில சமயங்களில் அக்காள் படும் இந்த வேதனையைப் பார்த்துவிட்டு, ராஜு தன் கஷ்டங்களை மறைத்துக் கொண்டு சந்தோஷமாக இருப்பவனைப் போல, பாவனை செய்வான்.

* * * *

எப்படியோ மூன்று வருஷ காலத்தை இப்படிப்பட்ட சித்ரவதைகளுக்கிடையே கழித்துவிட்டார்கள். பத்மாவும் மணமாக வேண்டிய பருவத்தை அடைந்துவிட்டாள். ஒன்பது வயது நிறைந்த ராஜு, கிட்டுவும் ருக்குவும் சொல்லிக் கொடுத்த "தப்பு" டியூஷனிலேயே ஓரளவு எழுதப் படிக்கவும் கற்றுக்கொண்டான்! அதோடு மாமாவுக்குத் தெரியாமல், அவர் படிப்பதற்காக வாசக சாலையில் வாங்கி வந்து வைத்திருக்கும் நாவல்களைப் படித்து தன் எழுத் தறிவை விருத்தி செய்துகொண்டும் வந்தான். மாமா படிப்பதற்காக வாங்கி வைத்திருந்த நாவல்களெல்லாம் துப்பறியும் நாவல்கள். அவைகளைப் படிக்கும்போது, ராஜுவுக்கு தன்னை யறியாமல் ஒரு

'ஜோர்' பிறக்கும்! தானும் ஒரு துப்பறிவாளனாக வேண்டுமென்று கூட அவன் ஆசைப்பட்டான்!

* * * *

இந்தச் சந்தர்ப்பத்தில் தான் ஒரு முக்கியமான நிகழ்ச்சி நடைபெற்றது. ருக்குவும் (மாமாவின் மகளான ருக்குமணி) மணமாக வேண்டிய பருவத்திலிருந்தபடியால், அவளுக்கு வரன் தேடும் வேலையில் மாமா முனைந்திருந்தார். ஒரு நாள் ஒரு கல்யாணத் தரகன் அந்த வீட்டிற்கு வந்தான். அவன் பெரிய "கேப்-மாறி" ஆசாமி என்று பெயர் பெற்றவன். 'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவது' என்று சொல்வார்களே, அந்தக் கலையில் தனக்கு நிகர் யாருமில்லை என்ற தனிப் பெரும் பெயர் பெற்றவன்!

அந்தத் தரகன், ருக்குமணிக்கு ஒரு மாப்பிள்ளை தேடிக் கொண்டு வந்திருந்தான். அவனிடம் மாமா அதிக நம்பிக்கை வைக்கவில்லையென்றாலும், ஊரைச் சுற்றி காட்டைச் சுற்றி அலைந்து மாப்பிள்ளைகள் தேடுவதற்குப் பதிலாக அந்தத் தரகனிடம் விலாசங்களையாவது (அலைந்து திரியாமல்) தெரிந்து கொள்ளலாம் என்றுதான் அவர் நினைத்தார். ஆகவே தரகன் வந்ததும் அவனை உபசாரமாகக் கூப்பிட்டு வீட்டுக்குள் உட்கார வைத்து, "பத்மா! காபி கொண்டு வா!" என்று உத்தரவிட்டார்.

பத்மா கொண்டு வந்த காபியைக் கையில் வாங்கிக்கொண்டே, "இது நம் குழந்தையா?" என்று மரியாதையாகக் கேட்டான் தரகன்.

"இல்லை, இல்லை; நம்ம அக்கா பெண்!" என்றார் மாமா.

உடனே தரகன் தான் வந்திருந்த வேலையைச் சொன்னான். கோர்பு என்ற ஒரு லட்சாதிபதி இருக்கிறாரென்றும், அவனுக்கு வயது முப்பத்து இரண்டு தான் ஆகிறதென்றும், இரண்டு கல்யாணங்கள் அவனுக்கு ஏற்கனவே நடந்து அந்தப் பெண்கள் இறந்துவிட்டதாகவும், அவர்களுக்கு குழந்தைகள் ஒன்றும் இல்லையென்றும், மூன்றாவது தாரமாக மாமா, தம் பெண் ருக்குமணியைக் கொடுப்பாரா என்று கேட்கவே வந்திருப்பதாகவும் கூறினான். இவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று துடிதுடித்த ருக்குமணி, தனக்குத் தைரியமில்லாமல் பத்மாவை கதவோரமாக நின்று ஒட்டுக் கேட்கும்படி சொல்லியிருந்தாள். இந்த விபரங்களையெல்லாம் பத்மா ஒட்டுக் கேட்டுக் கொண்டு போய், ருக்குவிடம் கூறினாள். ருக்குவின் முகம் 'குபீ'ரென்று சிவந்தது. ஆத்திரத்தால் அவள் முகம் சிவந்ததா, வெட்கத்தால் சிவந்ததா என்று பத்மாவால் புரிந்து கொள்ள முடியவில்லை. 'விர்'ரென்று ருக்கு தன் தாயார் இருந்த இடத்திற்குப் போனாள்.

தரகனிடம் விஷயங்களை விசாரித்துக் கொண்டிருந்த மாமாவுக்கு மாப்பிள்ளை ஒரு லட்சாதிபதி என்று கேள்விப் பட்டதும், ஒரு பக்கம் ஆசை அடித்துக் கொண்டது. மூன்றுந்தாரமாக இருந்தால் என்ன, பையனுக்கு முப்பத்திரண்டு வயது தானே ஆகிறது என்று நினைத்தார். எதற்கும் மனைவியிடம் ஒரு வார்த்தைக் கேட்டுக் கொண்டு தரகனிடம் பேசலாம் என்று நினைத்து, மனைவி இருந்த அறைக்குள் நுழைந்தார்.

மாமாவைக் கண்டதும் அவர் மனைவி ஆத்திரமாக, "அந்தப் 'பாழாய் போவான்' தரகனை உடனே வெளியில் விரட்டுங்கள்! என் செல்வத்தை மூன்றுந் தாரமாகப் பெண் பேச வந்திருக்கிறானமே!" என்று சீறினள். அறையின் ஒரு மூலைப் பக்கத்து ஜனலோரமாக, ருக்கு, மாமாவுக்கு முதுகைத் திருப்பிக் கொண்டு புடவை முந்தானையை விரலில் சுற்றியபடியே நின்று கொண்டிருந்தாள்.

மாமாவுக்கு அதற்கு மேல் பேச தைரியம் கிடையாது. நேராக எழுந்து தரகனிடம் வந்தார். "இந்த சம்பந்தம் ஒத்து வராது!" என்று 'ஒரே' வார்த்தையில் கூறினர். தரகன் மெதுவாகச் சிரித்தான். மாமா அதைக் கவனியாதவர் போல எங்கோ பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

"ஏன் ஸார் ஒத்து வராது?" என்று மெதுவாகக் கேட்டான்.

"பின் என்ன? மூன்றுந்தாரமாக, படித்த பெண்ணை எந்த மடையன் கொடுப்பான்!" என்று தனது 'புத்திசாலித்தன'த்தினல், தானுக மறுத்து விட்டது போல சரடு விட்டார் மாமா.

"ஒப்புக் கொள்கிறேன் சார்! மடையன் கொடுக்க மாட்டான்! ஆனல் புத்திசாலிகள் கொடுத்து விடுவார்கள். அதற்குக் காரணம் இருக்கிறது........." என்று வார்த்தையைப் பாதியில் நிறுத்தினன் தரகன்.

"என்ன?" என்று ஆச்சரியத்தில் ஆத்திரத்தைக் குழப்பிக் கேட்டார் மாமா.

"அதைத் தான் சொல்ல வந்தேன். பெண்ணுக்கு நீங்கள் எந்த வித நகையும் போட வேண்டியதில்லை. வரதட்சணை கொடுக்க வேண்டியதில்லை. அது மாத்திரமில்லை ஸார்! மாப்பிள்ளையே உங்களுக்கு ரொக்கமாக இரண்டாயிரம் ரூபாய் தருவார். கல்யாணச் செலவு முழுவதும் அவரதுதான்...... மாப்பிள்ளை லட்சாதிபதி ஸார்! லட்சாதிபதி! காசை ஓட்டாஞ்சல்லியாக மதிப்பவன்! என்ன நான் சொல்வது புரிந்ததா?" என்று தரகன் கம்பீரமாகக் கூறிவிட்டு மாமாவின் பதிலுக்காக அவர் முகத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்.

மாமா அசந்து போய்விட்டார்! இந்த விவரங்களையெல்லாம் மனைவியிடம் சொன்னால், ஒருக்கால் அவள் சம்மதிப்பாளோ என்ற 'நப்பாசை' அவருக்கு ஏற்பட்டது.

"இருங்கள்; இதோ வருகிறேன்!" என்று மனைவி இருந்த அறைக்கு எழுந்து போனார். இப்பொழுது, பத்மாவும் அங்கே இருந்தாள்.

மாமா அறைக்குள் நுழைந்ததுமே அவர் எதற்கு வருகிறார் என்று மாமிக்குத் தெரிந்துவிட்டது. அவர் பேச ஆரம்பிப்பதற்கு முன்பே, "என்ன' எங்கே வந்தீர்கள்?" என்று சீறி விழுந்தாள்.

"இல்லை......மாப்பிள்ளை லட்சாதிபதி. பெண்ணுக்கு நகை நட்டுக் கூட போட வேண்டாமென்கிறானும்; வரதட்சணை வேண்டாமென்கிறானும்......" என்று பயத்தோடு மாமா பேச ஆரம்பித்ததும், மாமி சட்டென்று குறிக்கிட்டு, "அதற்காக?......அதற்காக" என்று படபடப்பாகக் கேட்டாள். மாமா வாய் மூடி மௌனியானார்.

"என் மகளை மூன்றாந்தாரமாகக் கொடுக்கச் சொல்கிறீர்களா? பெண்ணைப் பெற்றுவிடுவதற்கு மட்டும் தெரிந்தது; அதற்கு நகை போட்டு, 'வாகு வழியுடன்' கல்யாணம் செய்து கொடுக்கத்துப்பில்லை' உங்களுக்கு! உங்கள் 'கையாலாகாத' தனத்திற்கு என் பெண்ணை மூன்றாந்தாரமாகக் கொண்டு போய்த் தள்ளப் பார்க்கிறீர்களா?" என்று கத்தினாள்.

இந்தச் சமயத்தில் பத்மா 'ஏதோ' சொல்ல முயன்றாள். வாய் வரவில்லை, இலேசாக இருமிக் கொண்டாள்.

"என்னடி?" என்று பத்மா பக்கம் திரும்பினாள் மாமி.

"இல்லை மாமி!......மூன்றாந்தாரமானாலும், வயது கொஞ்சம் தானே ஆகிறதாம்!" என்று தயங்கித் தயங்கிக் கூறினாள். ருக்குமணியோ அவளைச் சுட்டு எரித்து விடுவதைப் போலப் பார்த்தாள்.

உடனே மாமி இன்னும் ஆத்திரமாக, "இதோ உங்கள் மருமாள், நீங்கள் உங்கள் பெண்ணுக்குத் தேடிவந்த மாப்பிள்ளையைப் பற்றி பூரிக்கப் போகிறாள்! அவளுக்கு வேண்டுமானால் அந்த நேர்த்தியான லட்சாதிபதி மாப்பிள்ளையைக் கட்டி வையுங்கள்!" என்று கத்தினாள்.

இந்தச் சமயத்தில் ஹாலில் உட்கார்ந்திருந்த தரகன் இருமும் சப்தம் கேட்டது. மாமா உடனே எழுந்து ஹாலுக்கு வந்தார். தரகன் அவர் காதில் ஏதோ ரகசியமாகக் கூறினான்.

மாமா முகத்தில் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் நிறைந்தன. முன்னைவிடத் தெம்பாக தன் மனைவி இருந்த அறைக்குள் நுழைந்தார். அங்கே அந்தப் பெண்கள் இரண்டு பேரும் இன்னும் நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரையும் வெளியே போகச்

சொல்லி விட்டு, மனைவியின் காதில் ஏதோ ரகசியமாகச் சொல்ல ஆரம்பித்தார்.

முதலில் கடுவன் பூனை மாதிரி இருந்த மாமியின் முகம் மெது வாக மலர ஆரம்பித்தது. மாமா சொல்லி முடிந்ததும் மகிழ்ச்சி பொங்க, "இவ்வளவு காலம் நாம் தண்டச் சோறு கொட்டியதற்கு இந்த இரண்டாயிரமாவது நமக்கு மிச்சமாகட்டும்!" என்று மெது வாகக் கூறினாள். அவளைப் பேசாமல் இருக்கும்படி ஜாடை காட்டி விட்டு, மாமா, "பத்மா!" என்று உரக்கக் கூப்பிட்டார். அடுக்களை யிலிருந்து பத்மா வேகமாக வந்தாள். அவளிடம் என்றும் காணாத பரிவோடு மாமா, "ஏம்மா, உனக்கு அந்த மாப்பிள்ளையைக் கட்டிக் கொள்ள சம்மதமா?" என்று கேட்டார். பத்மா ஒன்றும் பேசாமல் குனிந்த தலையுடன் நின்று கொண்டிருந்தாள். மாமி உடனே ரொம்ப வாஞ்சையோடு, "சொல்லு பத்மா! நாங்கள்தானே இருக்கிறோம்? என்ன வெட்கம்?" என்று தேனொழுகக் கேட்டாள்.

"சம்மதந்தான்!" என்று வாய்க்குள் முனகினாள் பத்மா!

"சரி; நீ போய் கைக்காரியத்தைக் கவனி!" என்று அவளை அனுப்பிவிட்டு, மாமா குதூகலமாகத் தரகனிடம் போனார். "என்ன ஸார்..." என்று ஆவலாகக் கேட்டான் தரகன். "முடித்து விடலாம்!" என்று வெற்றிப் புன்னகையோடு கூறினார் மாமா.

* * * *

பத்மா மூன்றாந்தாரமாக கோபுவை மணந்துகொள்ள ஒப்புக் கொண்டாள் என்பதை அறிந்ததும் ராஜு துடிதுடித்துப் போனான்.

"எதற்காக அக்கா நீ இப்படி ஒப்புக்கொண்டாய்? முடியாது என்று இப்பொழுது சொல்லிவிடு. மாமா வீட்டைவிட்டுப் போகச் சொன்னாலும் அக்கரையில்லை. நான் பிச்சை எடுத்தாவது உன்னைக் காப்பாற்றுகிறேன். உனக்காகக் கொள்ளையடித்தாவது பணம் சம்பாதிப்பேன். நீ சுகமாக வாழ்க்கை நடத்த நான் கொலைகாரனாகக்கூடச் சிறைக்குப் போகத்தயாராக இருக்கிறேனக்கா என்னை நம்பு அக்கா!" என்று கதறினான்.

பத்மாவின் கண்களிலிருந்து நீர் பெருக்கெடுத்து ஓடியது. ராஜுவை அருகே அழைத்து அவன் கண்களை முந்தானையால் துடைத்துவிட்டபடி, "நான் ஏன் இதற்கு ஒப்புக்கொண்டேன் என்று உனக்குத் தெரியாது ராஜு. மாமா என்னைக் கட்டாயப் படுத்தவில்லை. நானாகவேதான் வலுவில் ஒப்புக்கொண்டேன். இன்னும் சொல்லப்போனால், எனக்கு இந்த வரன் கிடைக்கவேண்டு மென்று, மனதிற்குள், பகவானை எண்ணித் தவித்தேன்! அதர்

துக் காரணம் இருக்கிறது!" என்று கூறியபடி தன் கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

ராஜு திகைத்துப்போய் விட்டான்.

"காரணமா? என்னகாரணம்?" என்று பதறினான்.

"உன்னைப் படிக்கவைக்கவேண்டும்! நீ ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ணவேண்டும்! நீ கலெக்டராக வரவேண்டும்! அதைக் காதால் கேட்டுப் பூரித்து, அந்தப் பூரிப்பிலேயே நான் சாகவேண்டும்!" என்று பத்மா கூறும்பொழுதே மீண்டும் அவள் கண்களிலிருந்து பொலபொல வெனக் கண்ணீர் வடிந்தது.

ராஜுவின் உடல் 'கிடுகிடு'வென நடுங்கியது. "அக்கா! எனக்காக உன் வாழ்வைப் பாழாக்கிக்கொண்டாய்!" என்று துடித்தான்.

பத்மா மிகவும் அமரிக்கையாகப் பேசினாள்.

"இல்லை ராஜு! நீ சொல்வது தவறு! உனக்காக நான் வாழ்வைப் பாழாக்கிக் கொள்ளவில்லை! உன்னால்தான் நான் உயிரே வாழ்கிறேன். இல்லாவிட்டால் அம்மா இறந்ததுமே நான் தற்கொலை செய்துகொண்டிருப்பேன்!" என்று சொல்லும்போது, அவள் குரல் இலேசாகக் கம்பியது. அதைச் சமாளித்துக்கொண்டு மேலே பேசினாள்: "இந்த வஞ்சக உலகில் உன்னைத் தனியாக விடுவதற்குப் பயந்தேன். அப்பா இறந்தபிறகு இந்தப் பத்து வருஷங்களும் உன் நன்மைக்காகவே என் சுகத்தையெல்லாம் விட்டுக் கொடுத்துப் பாடுபட்டு வந்தேன். எதற்காக? ஊரும் உலகமும் மெச்ச உயிர்வாழ்ந்த நம் அப்பாவின் 'பெயரை நீ நிலை நிறுத்த வேண்டும்' என்ற ஒரே லட்சியத்தில்தான்!" என்று கூறிக் கொண்டே வரும்பொழுது, ராஜு குறுக்கிட்டு, "இந்தப் பத்து வருஷ தியாகம் போதாதென்று உன் வாழ்நாளையே தியாகம் செய்து விட்டாயே அக்கா!" என்று கதறினான். "இல்லை ராஜு! நீ சொல்வது தவறு. என் வாழ்க்கை முழுவதையும் நான் தியாகம் செய்துவிடவில்லை! இன்னொரு பத்து வருஷத்தைத் தான் தியாகம் செய்திருக்கிறேன்!" என்று பத்மா கூறியதும், ராஜு ஒன்றும் புரியாமல் அவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

"உனக்குப் புரியாது ராஜு! வாழ்க்கையில் இளங்காதலர்கள் 'கண்மூடி'க் காதலில் மூழ்கி இருக்கும் காலம் பத்து வருஷங்களுக்கு அதிகம் இருக்காது; அந்தப் பத்து வருஷங்கள் கழிந்ததும் அவர்கள் தங்கள் சுயநலத்தை மறந்து, பிறருக்காக, குழந்தை குட்டிகளுக்காக வாழ்க்கை நடத்த ஆரம்பித்து விடுவார்கள். நான் அந்த நிலைக்கு, நேரே வந்திருக்கிறேன். அதுதான் நான்செய்தது!" என்றாள்.

"அக்கா! நீ ஒரு தெய்வம்! தெய்வமக்கா; தெய்வம்!" என்று உணர்ச்சிவேகத்தோடு கூறியபடி பத்மாவின் மடியில் தலையை வைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதான் ராஜு.

பத்மா, பாசத்தோடு அவன் தலையைக் கோதிவிட்டாள். "ஆமாம்! உன் அக்காள் ஒரு தெய்வம்! நீ?... நீ ஒரு தெய்வத்தின் தம்பி என்பதை மறக்காதே! அந்தத் தெய்வத்திற்கு இழுக்கு ஏற்படும் எந்தக் காரியத்தையும் செய்யாதே!"

"செய்யமாட்டேனக்கா! செய்யவே மாட்டேன்!" என்று பதறினன் ராஜு.

"நீ செய்யக்கூடாது ராஜு! செய்யக்கூடாது! சற்று முன்னல் சொன்னயே கொள்ளையடிப்பேன்; கொலைசெய்வேன்; என்று! எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் நீ அப்படிப்பட்ட பாப எண்ணங்களுக்கு இடந்தரக்கூடாது! ஏன் தெரியுமா?"

"ஏன்...ஏன்?" என்று பதறினன் ராஜு.

"ஏனென்ருல் நம் அப்பா அவ்வளவு நல்லவர். அவ்வளவு உயர்ந்தவர்!" என்று கூறும்பொழுதே அவள் குரல் தத்தளித்தது.

"அக்கா!" என்று அலறிக்கொண்டே அவள் மடியில் விழுந்து மீண்டும் அழுதான் ராஜு.

பத்மா அமரிக்கையாகக் கூறினள்:

"இதுதான் நீ எனக்குச் செய்யும் கைம்மாறு! இதுதான் நீ எனக்குச் செய்யும் கைம்மாறு!"

ராஜுவால் பேசமுடியவில்லை. விம்மி விம்மி அழுதபடி அவள் மடியில் முகத்தை வைத்துக்கொண்டு படுத்துக் கிடந்தான்.

* * * *

பத்மாவின் திருமணத்திற்குப் பிறகு, அவள் எதிர்பார்த்தது போலவே, அவள் கணவன் கோபு ராஜுவை நன்ருகப் படிக்கவைத்துக் கொண்டுவந்தான். பணச் செலவைப் பாராமல் அவனுக்கு வீட்டிலேயே 'டியூஷ'னும் வைத்துச் சொல்லிக் கொடுத்தான். எதிர் காலத்தில் அவன் வாழ்க்கையில் ஸ்திரமாய் வேரூன்ற வேண்டுமென்று அவன் பெயரில் இன்ஷ்யூரன்ஸ் வேறு கட்டிக்கொண்டு வந்தான். இவையெல்லாம், அவன் அக்காளால்தான் ராஜுவுக்குக் கிடைத்தன......

* * * *

இந்த விவரங்களெல்லாம் ஸப் இன்ஸ்பெக்டர் மகன் விச்சுவுக்கு நன்ருகத் தெரியும். ஆகவே இன்றைபதினம் ராஜு,

பத்மாவின் மரணத்திற்குப் பழி வாங்கத் துடி துடிப்பதைக் கண்டு அவனுக்கு ஆச்சரியம் ஏற்படவில்லை.

இருந்தபோதிலும், அக்காள் புருஷன் கோபுவால் ஏதாவது ஆபத்து ராஜூவுக்கு ஏற்படக்கூடாதே என்று ரொம்பவும் பயந் தான். ஆகவே தான் அவன் மனதை மெதுவாக மாற்ற முடியுமா என்று முயன்று பார்த்தான். அந்த நம்பிக்கை சீர்குலைந்து போயிற்று.

* * * *

எதிரே தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு தேம்பித் தேம்பி கதறும் ராஜூவைப் பார்த்து விச்சுவின் கண்கள் கலங்கிவிட்டன. "ராஜூ; எதற்கும் நீ என் அப்பாவை நேரில் வந்து பாரேன்!" என்று கெஞ்சாக் குறையாகக் கூறினான்.

ராஜூ மெதுவாகத் தலைநிமிர்ந்தான். அழுகழுது வீங்கிப் போன தன் கண்களிலிருந்து இன்னும் பிரவாகம் போல ஓடிக் கொண்டிருக்கும் கண்ணீரைத் துடைத்து விட்டுக்கொண்டான். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவன் போல, "நீ சொல்வது சரிதான் விச்சு! நான் அவசியம் அவரை வந்து பார்க்கிறேன்." என்றான்

இந்தச் சமயத்தில் கோபு அந்தப்பக்கம் வந்தான். அவனைக் கண்டதும் விச்சு, "நான் போய் வருகிறேன்!" என்று புறப்பட்டு விட்டான். அவன் வெளிவாசல் போகும்வரை அவனையே வெறிக் கப் பார்த்துக்கொண்டிருந்தான் கோபு. ராஜூ இதற்குள் எழுந்து உள்ளே போய்விட்டான்.



## 4. துப்பறிபவன்

பத்மா இறந்து ஒரு வாரம் ஆயிற்று. விச்சுவின் யோசனைப்படி அவன் தந்தையை (ஸப்-இன்ஸ்பெக்டரை) அவர் வீட்டில் போய்ச் சந்திக்கத் தீர்மானித்தான் ராஜு. அப்போது அவனுடைய போக்கை அத்தான் கவனித்துவிடக் கூடாதே யென்று பயந்து கொண்டே, வீட்டை விட்டு அத்தான் எங்கோ புறப்பட்டுப் போனதும், தெருவைச் சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே- சப்இன்ஸ்பெக்டர் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

"நீ ரொம்ப சிறியவன் ராஜு. உன் அக்காள் புருஷன் மகாக் கிராதகன். படித்த புத்தியுள்ள சூழ்ச்சிக்காரன். அதனால் எதற்கும் துணிந்தவனாகத் தெரிகிறது. நீ அங்கே தங்கியிருப்பது எனக்கு உசிதமாகப்படவில்லை......" என்று கவலையோடு ஸப்-

இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டுவரும் பொழுது, ராஜு குறுக்கிட்டு, "அவன் கிராதகன் என்றால் நீங்கள் ஏன் உடனே அவன் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது?" என்று கேட்டான்.

"நடவடிக்கை எடுப்பதென்றால் தகுந்த ஆதாரம் வேண்டும். பத்மா மரண மடைந்ததற்குக் காரணம் நீரில் மூழ்கியது தான் என்று டாக்டர்கள் கூறிவிட்டார்கள். அவளாகத் தவறி விழுந்து நீரில் மூழ்கினளா? அல்லது நீரில் அழுத்திக் கொல்லப்பட்டாளா? என்பதற்கு எந்தவிதச் சாட்சியமும் இல்லை. நிச்சயமாக அவள் கொலை செய்யப்பட்டாள் என்பதற்கு, நேராகப் பார்த்த சாட்சிகளோ, சந்தர்ப்ப சாட்சிகளோ இருந்தால் தான், நடவடிக்கை எடுக்க முடியும். இல்லாவிட்டால் தற்கொலை யென்றுதான் ஒப்புக் கொள்ள வேண்டும். நாமாகக் கற்பனை செய்து ஒருவனைக் 'குற்றவாளி' யென்று சுட்டிக் காட்டிவிட முடியாது!" என்றார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"சந்தர்ப்ப சாட்சியென்கிறீர்களே; அந்தாள் பெயரிலுள்ள ஒன்றரை லக்ஷ ரூபாய் இன்ஷ்யூரன்ஸ் பணத்தைப் பெறுவதற்கு அவர் இப்படிச் செய்வது சாத்தியந்தானே!" என்று ராஜு சந்தேகமாகக் கேட்டான்.

"சாத்தியம் என்று சொல்ல முடியாது. ஏனென்றால், மனைவியைக் கொலை செய்துவிட்டு, இப்படிப் பணம் அபகரிக்க எந்தக் கணவன் துணிவான்? இது எப்படி சாத்தியமாகும்? இது அசாத்தியமானது. வேண்டுமானால் உன் அத்தான் கோபு இதைச் செய்திருக்கலாம். நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது கணவன்மார்கள் இப்படிச் செய்யத் துணியமாட்டார்கள். ஆகவே இதை எப்படிச் சாத்தியம் என்று சொல்ல முடியும்?" என்று திருத்தினார் ஸப்-இன்ஸ்பெக்டர். ராஜுவுக்கு அவர் சொல்வது 'சரி'யென்றே பட்டது.

"ஆனால்..." என்று ஏதோ யோசித்தார் இன்ஸ்பெக்டர்.

"ஆனால்?... என்ன ஸார்!' என்று ஆவலாகக் கேட்டான் ராஜு.

"பத்மாவுக்கும் கோபுவுக்கும் அடிக்கடி சண்டை ஏற்படுமென்றோ, அல்லது பத்மாவைக் கோபு கொடுமையாக நடத்தி வந்தானென்றோ சாட்சியமிருந்தால்..."

"என்னால் கூட அப்படிச் சாட்சி சொல்ல முடியாதே ஸார்! அவ்வளவு ஒற்றுமையாகவல்லவா இருந்தார்கள்!" என்று கவலையாகக் கூறினான் ராஜு.

ஸப்-இன்ஸ்பெக்டர் கொஞ்ச நேரம் ஏதோ யோசனையாக உட்கார்ந்திருந்தார். பிறகு மெதுவாக, "எனக்கு கோபுவின் முதல்

மனைவி இறந்ததில் கூட இப்பொழுது பலத்த சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அதுவும் நேற்றுத் தான் அதில் சந்தேகம் தோன்றியது!" என்றார்.

"ஏன் ஸார் ?' என்று ஆவலோடு ராஜூ கேட்டான்.

"நேற்று மறுபடியும் பழைய ரெகார்டுகளைத் தேடி எடுத்துப் பார்த்தேன். அதில் இறந்து போனவளுக்கு தலையில் பலத்த அடிபட்டு, மண்டை ஓடு பிளந்திருந்ததாக எழுதி இருக்கிறது...." என்று அவர் முடிப்பதற்குள், ராஜூ "பின் ஏன் அப்பொழுதே அவன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை? நிச்சயம் அடித்துத் தான் கொன்றிருப்பான் போலிருக்கிறது ?" என்று வியப்போடும் பயங்கர அருவெருப்போடும் கேட்டான்.

"அப்படிச் சொல்லிவிடவும் முடியாது. கிணற்றில் வழுக்கி விழுந்த சமயத்தில் அவள் தலை, கிணற்றுச் சுவரில் உள்ளே நீட்டிக் கொண்டிருக்கும் கற்களில் மோதியிருந்தால், மண்டை பிளந்திருக்குமல்லவா ?" என்று சந்தேகத்தைக் கிளப்பினார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"ஏன் ஸார்; அவளை அடித்துக் கிணற்றில் தள்ளி இருந்தால், அந்த இடத்தில் நிறைய சகதியாக இருந்ததற்கு காலடிச் சுவடு தெரிந்திருக்குமே ?" என்று கேட்டான் ராஜூ.

"காலடிச் சுவடுகள் ஏராளமாக இருந்தன. அவையெல்லாம் கிணற்றில் விழுந்தவளைத் தூக்கிக் கரையில் போடுவதற்கு பலர் முயற்சி செய்தபோது ஏற்பட்டவை !" என்றார்.

"என்ன ஸார்; ஒரு பயங்கரமான குற்றவாளியை இப்படி வெளியில் விட்டு வைத்திருக்கிறீர்களே!" என்று பதறினான் ராஜூ.

ஸப்-இன்ஸ்பெக்டர் இலேசாகச் சிரித்தார். "குற்றவாளிகள் சிறிது காலம் தான் தப்பித்துக்கொண்டு திரிய முடியும். முடிவில் அகப்பட்டே தீருவார்கள். இது தான் இயற்கை !" என்று நம்பிக்கையோடு கூறினார்.

ராஜூவின் மனம் சஞ்சலத்தில் ஆழ்ந்தது. அப்படியானால் இந்தக் கொலை வழக்கைக் கண்டு பிடிக்கவே முடியாதா ஸார் ?" என்று நிராசையாகக் கேட்டான்.

"நான் அப்படிச் சொல்லவில்லையே! கோபு மீது சர்வ ஜாக்கிரதையாக நான் "கண்' வைத்திருக்கிறேன். கொஞ்சம் 'பிடி' கிடைத்தால் எனக்குப் போதும்...."

"அந்தப் பிடியை நானே உங்களுக்குத் தேடித் தருவதாக இருந்தால்..." என்று இடைமறித்தான் ராஜூ.

"உன்னால் எப்படி முடியும்?" என்று ஆச்சரியமாகக் கேட்டார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"நான் அந்த வீட்டிலேயே இருப்பதால், ஒவ்வொரு விநாடியும் என் அத்திம்பேர் கோபுவின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டே வருவேன். எப்படியும் என் அக்காளுக்குச் செய்த துரோகத்திற்கு அவன் அகப்பட்டுக் கொள்வான். என் அக்காள் ரொம்ப நல்லவள். அவள் தெய்வம் ஸார் தெய்வம்!" என்று கூறும் பொழுதே அவன் கண்களிலிருந்து 'புல புல'வெனக் கண்ணீர் வடிந்தது.

"ராஜு! உன் அத்தான் இந்தக் கொலையைச் செய்யும் போது இன்னொரு பெண்ணும் சம்பந்தப் பட்டிருப்பாளோ என்று நினைக்கிறேன். கொலைக்கு உடந்தையாக உன் அத்தானுக்கு கைபாட்களும் இருக்கலாம. அவர்கள் யார் என்பதைக் கவனிக்க முடியுமானால்...? உடந்தையாக வேறு பெண்ணோ ஆட்களோ இருந்தால் உன் அத்தானைச் சந்திக்க இரகசியமாக முயலக்கூடும்."

"அவர்கள் யார் என நான் கண்டுபிடித்துச் சொல்லுகிறேன், ஸார்."

ஸப்-இன்ஸ்பெக்டருக்கு அவனைப் பார்க்க ரொம்பப் பரிதாபமாக இருந்தது. அதே சமயத்தில் அவன் மேற்கொள்ளத் துணிந்த வேலையின் பயங்கரத்தை நினைத்ததும் அவருக்கே அவநம்பிக்கையும் ஏற்பட்டது.

"இப்பொழுது கோபு உன்னிடம் எப்படி நடந்துகொள்கிறான்?" என்று கேட்டார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"முன்போலவே வாஞ்சையாகத் தான் நடந்து வருகிறான்" என்று கூறினான் ராஜு.

ஸப்-இன்ஸ்பெக்டர் மனதில் என்னென்னவோ எண்ணங்கள் தோன்றி மறைந்தன. 'இந்தச் சிறுவனால், இவ்வழக்கில் துப்புத் துலக்க முடியுமா?' என்று கொஞ்ச நேரம் வியந்தார். 'இருந்த போதிலும் அவன் கோபுவின் வீட்டிலேயே அவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக இருப்பதால் ஓரளவு சாத்தியமும் இருக்கிறது என்று அவர் மனம் கூறியது. இருந்தாலும் கொலைகாரனான கோபு பெரிய கிராதகன். ராஜு துப்பறிந்து தன்னைச் சிக்க வைக்க முயலுகிறான் என்று கொஞ்சம் சந்தேகப்பட்டாலும் அவனை ஒழித்துவிடத் தயங்கமாட்டான்' என்று ஸப்-இன்ஸ்பெக்டர் நினைத்தார். இன்சூரன்ஸ் பணத்திற்காகச் சொந்த மனைவிகளையே கொல்பவன் தனக்கு ஆபத்து என்றால் சிறு பயலை சும்மா விடுவானா? மைத்துனன் என்று பார்ப்பானா? ஆனால் இப்பொழுது உடனடியாக இன்னொரு கொலை செய்யும் தைரியம் கோபுவுக்கு வரமுடியாது; அதோடு ராஜு கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்தால், ஆபத்தைத் தவிர்த்து விடலாம்.

ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர் போல, இன்ஸ்பெக்டர் "சரி, ராஜு! உன் இஷ்டம் போலவே நீ, கோபுவைக் கண்காணித்து ஏதாவது துப்புத் துலக்க முடியுமா என்று முயன்று பார். கொஞ்சம் ஆபத்தான நிலைமையாக இருந்தாலும் எனக்கு உடனுக்குடன் தெரிவித்து வா. நான் உன் உயிருக்கு எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்கிறேன். ஆனால் ஜாக்கிரதை. நீ பழகுவது உன் அத்திம்பேரோடு அல்ல; ஒரு கொலைகாரனோடு! இதை எப்பொழுதும் மறக்காமல் இரு!" என்று எச்சரித்தார்.

"நான் சர்வ ஜாக்கிரதையாக இருப்பேன் சார்! என்று கூறிவிட்டு, ராஜு, சப்-இன்ஸ்பெக்டரிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்பினான். அவர் வீட்டை விட்டுத் தெருவில் இறங்கியதும், அத்தானின் உளவாளிகள் யாராவது ஒளிந்து நின்று தன் போக்கைக் கவனிப்பார்களோ என்ற பயம் ஏற்பட்டது. ஒரே ஓட்டமாகத் தன் வீட்டிற்கு வந்துவிட்டான்.



## 5. புதியவளின் ரகசியம் என்ன ?

பதினைந்து தினங்கள் எவ்வித விசேஷமுமின்றிக் கழிந்தன. மனைவியைக் கொன்ற கோபுவின் நடையுடை பாவனைகளில் எவ்வித சம்சயத்தையும் ராஜுவால் காணமுடியவில்லை. பத்மாவின் மரணத்தை யொட்டி நடக்க வேண்டிய கிரியைகளெல்லாம் அந்தந்த நாட்களில் நடைபெற்றன. கோபுவும் வழக்கம் போலத் தன்னுடைய எற்றுமதி இறக்குமதி ஆபீஸிற்குப் போய் வர ஆரம்பித்தான். வீட்டில் சமையலுக்கு ஒரு சமயற்காரன் நியமிக்கப் பட்டான். காலையில் பத்து மணிக்குள் சமையலை முடித்து விட்டு கோபு ஆபீஸிற்கு கிளம்பியதும், சமையற்காரன் போய்விடுவான்.

பிறகு மாலை மூன்று மணிக்குத் திரும்பி வந்து, காபி பலகாரம் முதலியன செய்து கொடுத்து இரவு சாப்பாட்டையும் தயார் செய்து விட்டு ஏழு மணிக்கெல்லாம் போய்விடுவான். கோபுவும், ராஜுவும் தாங்களாகவே பறிமாறிக் கொண்டு சாப்பிடுவார்கள். இருட்டிய பிறகு தான் அந்த வீடு கொலைகாரன் வீடு போல பயங்கர உணர்ச்சிகளை அளிக்கும். மனைவியைப் படு கொலை செய்த அதே வீட்டில் தன் எதிரில் கொலையாளி நிம்மதியாக உட்கார்ந்து சாப்பிடுகிறானே! என்று நினைக்கும்போது ராஜுவின் நெஞ்சுக் குறுத்தெல்லாம் நடுநடுங்கும். ஆனால் அதை அத்தான் சந்தேகிக்காதபடி உடனே உணர்ச்சிகளை மறைத்துக் கொள்வான்.

அன்று இரவு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, கோபு மெதுவாக, "பாவம் ; ஸீதா! அவளுக்கு ரொம்ப சோதனைக் காலம் !" என்றான். உடனே ராஜு, "எந்த ஸீதா அத்திம்பேரே?" என்று கேட்டான்.

"நம் ஆபீஸில் டைபிஸ்டாக வேலை பார்க்கிறாளே, ஸீதா! அவளைத் தான் சொல்கிறேன் !" என்றான் கோபு.

"ஏன் அவளுக்கு என்ன ?" என்று கேட்டான் ராஜு.

"அவள் சென்னையில் தனியாகத் தான் இருக்கிறாள். அவள் குடியிருந்த வீட்டுக்காரன் நேற்று இரவு அவள் அறைக்குள் திருட்டுத்தனமாக நுழைந்து, அவளைக் கெடுக்க முயற்சித்தானாம். ஸீதா விழித்துக் கொண்டு, 'சத்தம் போடட்டுமா? மரியாதையாகப் போய் விடுகிறாயா ?' என்று மிரட்டியதும் அவன் பயந்து கொண்டு போய் விட்டானாம். இருந்தாலும் ஸீதாவுக்கு அங்கே இனி மேல் தங்கி இருக்கத் தைரியமில்லை. வேறு வீடுபார்ப்பதென்றால் உடனே கிடைக்கிறதா ? ரொம்ப அவஸ்தைப்படுகிறாள் !" என்று பரிதாபமாகக் கூறினான் கோபு.

ராஜுவுக்கு, கோபு ஏதோ காரணமாகத்தான் இப்படிப் பேசுகிறான் என்று புரிந்து விட்டது. எதற்காக இதைக் கூறினான் என்று புரிந்து கொள்வதற்காக, ஒன்றும் தெரியாத அப்பாவிபோல, "ஐயோ ! பாவம் !" என்று தானும் அனுதாபங் காட்டினான்.

கோபு கடைக் கண்ணால் ராஜுவைக் கவனித்தான். ராஜுவின் முகத்தில் எந்த வித உணர்ச்சியும் இல்லை. தலை குனிந்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தான். கோபு கொஞ்சம் தைரியமாக, "இரண்டு நாளைக்கு நம் வீட்டில் வந்து தங்கி இருக்கிறேன் என்று கேட்டாள். ஆபீஸில் வேலை செய்கிற பெண் டைபிஸ்டை வீட்டில் கொண்டு வைத்து விட்டானே என்று உலகம் அநியாயமாய்ப் பழி சுமத்துமே என்று நினைத்து, நான் முதலில் முடியாது என்றேன். பிறகு கெஞ்சினாள், போகிறாள் பாவம் என்று இரண்டு நாள் தங்கி

இருக்க அனுமதி கொடுத்தேன். இன்றிரவு சாமான்களெல்லாம் கட்டி வைத்துக் கொண்டு தயாராக இருப்பாள். நான் சாப்பிட்டதும், காரை எடுத்துக் கொண்டு போய் ஸீதாவைக்கூட்டி வரவேண்டும்!" என்று கூறிவிட்டு ராஜுவின் பதிலை எதிர்பார்த்தான். ராஜு மௌனமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தானே தவிர, ஒன்றும் பேசவே இல்லை. கோபுவுக்கு இது சங்கடமாகவே இருந்தது. ஆகவே மெதுவாக, "உன் அக்காள் காலமான பிறகு இந்த வீடே வெறிச்சென்றிருக்கிறது. ஸீதா வந்தால் உனக்கும் பேச்சுத் துணையாக இருக்கும். பாடங்கள் எதுவும் தெரியா விட்டால் கேட்டாயானால் சொல்லித் தருவாள்!" என்று கூறினான்.

"ஆமாம்; வீடும் 'வெறிச்'சென்று கிடக்கிறது!" என்று ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு ராஜு வஞ்சகமாகப் பேசினான். உடனே கோபு கொஞ்சம் தைரியமாக, "நானும் அதைத்தான் நினைத்தேன்" உனக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கும் என்று எனக்குத்தெரியும்!" என்று கூறிக் கொண்டே சாப்பாட்டு இலையை விட்டுக் கை கழுவுவதற்காக எழுந்து முற்றத்துப் பக்கம் போனான்.

ராஜுக்கு இப்பொழுது எல்லாம் விளங்கி விட்டது. ஸீதாவைத் தவறான நோக்கத்தோடு தான் வீட்டுக்கு அழைத்து வருகிறான் கோபு, என்று புரிந்து கொண்டான். அதோடு அவள் குடியிருக்கும் வீட்டுக்காரனைப்பற்றிக்கூறியதெல்லாம் அபாண்டமாகத்தான் இருக்கும் என்றும் ராஜு முடிவு செய்து கொண்டான். அக்காளின் கொலைக்கு இப்போது வரப் போகும் லேடி டைபிஸ்டு ஸீதாவும் உடந்தையாக இருந்திருப்பாளோ? அடுத்தபடியாகத் தன்னைக் கொல்லத்தான் கூடித் திட்டம் போடப் போகிறார்களோ, என்றெல்லாம் நினைத்தான். ஆனால் இனி மேல்தான் கோபு சரியாக மாட்டிக் கொள்ளப் போகிறான் என்று அவன் மனதிற்குள் ஏதோ ஒன்று கூறியது. ஆகவே ஸீதாவை அவன் அழைத்து வருவதைப் பற்றித் தனக்கு மகிழ்ச்சிதான் என்று காட்டிக் கொள்ளவே ராஜு விரும்பினான்.

* * *

அன்று இரவு கோபு ஸீதாவை அழைத்து வந்து விட்டான். அவளுக்குத் தனி அறை ஒன்று ஒழித்துக்கொடுத்தான். ஸீதா புன்சிரிப்போடு ஏதோ வீட்டுக்கு உரிமையுள்ளவள் போல நடந்து கொள்வதை ராஜு கூர்ந்து கவனித்தான். அவனுடைய அக்காளின் முகத்தைப் போல சாந்தமும் பபந்த சுபாவமும் ஸீதாவின் முகத்தில் தட்டுப்படா விட்டாலும் ஸீதா அழகானவளாகவே இருந்தாள். அவளை ஜாக்ரதையாகத் தாள் போட்டுக் கொண்டு படுக்கும்படி கூறிவிட்டு கோபு தன் அறையில் போய்ப் படுத்துக் கொண்

டான். ராஜூவோ தன் அறைக்குப் போய் தனியாகப் படுத்துக் கொண்டு இரவெல்லாம் கண் விழித்துக் கொண்டிருந்தான். எந்த நிமிஷம் அவர்கள் இருவரும் கூடி என்ன பயங்கரத் திட்டம் போடுவார்களோ என்று நடுங்கினான். ஆனால் அன்று இரவு ஒன்றும் நடக்கவில்லை.

மறு நாள் காலையில் எழுந்ததும் ஸீதா தனது காலைக் கடன்களையெல்லாம் முடித்துக் கொண்டு, பத்து மணிக்குச் சாப்பிட்டு விட்டு, கோபுவோடு சேர்ந்தே அவன் காரில் 'ஏற்றுமதி இறக்குமதி ஆபீஸிற்'குப் புறப்பட்டுச் சென்றாள்.

* * *

இந்த விவரங்களையெல்லாம் ராஜூ, அன்றைய தினமே ஸப்-இன்ஸ்பெக்டரிடம் இரகசியமாய்ச்சென்று கூறினான். இதைக் கேட்டு ஸப்-இன்ஸ்பெக்டர் ரொம்ப சந்தோஷப்பட்டார். "ராஜூ, இனி மேல்தான் நமது திட்டம் பலிக்கும்! தானாகவே உன் அத்தான் கோபு தன் கஷ்ட காலத்தை வருந்தி அழைத்துக் கொண்டிருக்கிறான். நீ ஜாக்ரதையாக உன் அத்தானையும், ஸீதாவையும் கண்காணித்து வா! ஆனால் எச்சரிக்கையாக இரு!" என்றார். ராஜூவும் 'சரி' யென்று அவரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

* * *

அன்று இரவு மணி பனிரெண்டு இருக்கும். எங்கோ ஆந்தையின் ஒரு அலறல் கேட்டது. ராஜூ தனது அறையில் தூக்கம் பிடிக்காமல் இருளோடு இருளாகப் படுத்திருந்தான். எங்கோ யாரோ மெதுவாகச் சிரிக்கும் சப்தம் கேட்டது. உற்றுக் கவனித்தான். சத்தம் சீதாவின் அறையிலிருந்து வருகிறது என்று புரிந்து கொண்டான். நடுநிசியில் சிரிப்பு ஏன்......?

மெதுவாகப் படுக்கையை விட்டு எழுந்து பூனைபோல் அடிமேல் அடி வைத்து, அத்தான் கோபுவின் அறைப் பக்கம் போய், ஜன்னல் இடுக்கு வழியாகக் கவனித்தான். கோபுவின் படுக்கை காலியாகக் கிடந்தது. அறைக் கதவும் திறந்து கிடந்தது. கோபு தான் ஸீதாவோடு ஏதோ பேசிக் கொண்டிருக்கிறான் என்ற முடிவுக்குவந்த ராஜூ, மெதுவாக ஸீதாவின் அறைப்பக்கம் போனான். கதவு சாத்தப்பட்டிருந்தது. உள்ளே விளக்கு எரியவில்லை. ஒரே இருட்டு. ஆனால் மெதுவாகப் பேச்சுக் குரல் கேட்டது. ஆனால் தெளிவாக ராஜூவுக்குக் கேட்கவில்லை. என்ன பேசுகிறார்களென்று நன்றாகக் கவனிக்க வேண்டுமென்று, ராஜூ, கதவின் சாவித் துவாரத்தில் தன் காதுகளை வைத்து தலையைச் சாய்த்துக் கேட்டான். பயத்தால் அவன் கால்கள் நடுங்கியபடியால், நிற்க

முடியாமல் தள்ளாடி விட்டன. கீழே விழுந்து விடாமல் தன் உடல் பளுவைக் கதவில் சாய்த்து சமாளிக்க ராஜு முயலும் பொழுது, அவன் பளுவில் கதவு திடீரென்று திறந்து கொள்ளவே, ராஜு தடாலென்று அறைக்குள் போய் விழுந்தான். கதவு தாளிடப் படாமல் சாத்தப்பட்டிருந்திருக்கிறது.

அறைக்குள்ளிருந்த கோபுவும் ஸீதாவும் திடுக்கிட்டு எழுந்த னர். ஸீதா கிரீச்சென்று அலறினள். கோபுவும் பயத்தால் வெட வெட என்று நடுங்கிக் கொண்டே மின்சார விளக்கைப் போட் டான். மெல்லிய ஊதா வெளிச்சத்தில் பூனை போல் பதுங்கிய வாறு ராஜு கலவரத்துடன் விழுந்து கிடப்பதைக் கண்டதும் கோபுவின் பயம் மாறி ஆத்திரம் கிளம்பியது. கோபுவின் கண் களில் கோபாக்கினி வீசியது. வேகமாக ராஜுவிடம் வந்து அவன் தலை மயிரைப் பிடித்துத் தூக்கி நிறுத்தினன். அவன் கன்னங் களில் 'பளார்-பளார்' என்று பேய் அறைவதைப் போல, நாலைந்து அறைகள் விட்டான். "ராஸ்கல்! பிச்சைக்கார நாய்! போனல் போகிறதென்று தர்மத்திற்குச் சோறு போட்டால், ஒட்டுக் கேட் கவா வந்தாய்? நான் எவளோடு எப்படிப் போனல் உனக்கென் னடா?" என்று கூறி விட்டு மறுபடியும் இரண்டு அறைகள் விட் டான். ஸீதா பயந்து போய்ப் பேச வாய்வராமல் அலங்கோலமாய் அவிழ்ந்து தொங்கும் கூந்தலையும் முடித்துக் கொள்ளாமல் தவித்துக் கொண்டு நின்றுள். ராஜு விம்மி விம்மி அழுதான்.

கோபு அவன் தலைமயிரைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துக் கொண்டு, பங்களாவுக்கு வெளியே வந்தான். காம்பவுண்டுக்குள்ளேயே, காலியாகக் கிடந்த வேலைக்காரர் விடுதி (அவுட்-ஹவுஸ்)க்கு அவனை இழுத்துக்கொண்டு போய் அங்கே தள்ளினன். "நாயே! இனி நீ இங்கேதான் கிடக்கவேண் டும். பங்களாவுக்குள் நுழையக்கூடாது. சோறு தண்ணீர் எல்லாம் உனக்கு இங்கே கொண்டுவந்துதான் போடச் சொல்லப் போகிறேன். இனி பங்களாவுக்குள் நீ நுழைந்தால் அன்றேடு வீட்டைவிட்டுத் துரத்திவிடுவேன்!" என்று கத்திவிட்டு உள்ளே போய் பங்களாவைத் தாளிட்டுக் கொண்டான்.

அன்று இரவு பூராவும் ராஜு அங்கு அழுதுகொண்டே படுத் திருந்தான். இந்தவீட்டில் இருந்துமானக்கெட்டுப்போய்ச் சாப்பிட்டு உயிர் வாழ்வதைவிட எங்காவது ஓடிப் போகலாம் என்றுகூட நினைத்தான். இருந்தாலும், தன் அக்காளின் மரணத்திற்காக, கோபுவைப் பழிவாங்கவேண்டுமென்று தான் செய்துகொண்ட சபதத்தை நிறைவேற்றுவதற்காக, எத்தகைய கஷ்டம் வந்தாலும் அந்த இடத்தைவிட்டு, போகக்கூடாது என்று முடிவு செய்து கொண்டான்.

மறுநாள் ஸப்-இன்ஸ்பெக்டரிடம் ராஜு இந்த விவரங்களை யெல்லாம் கூறியதும், இன்ஸ்பெக்டர், "நான் நினைத்தது சரிதான்!" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டார்.

"என்ன ஸார்?" என்று ஆவலாகக் கேட்டான் ராஜு.

"உன்னை நேற்று இரவே வீட்டைவிட்டுக் கோபு ஏன் துரத்தவில்லை? உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார். ராஜுவுக்கு அதன் காரணம் உண்மையிலேயே தெரியவில்லை.

"உன் பெயரில் கட்டி இருக்கும் 'இன்ஷ்யூரென்ஸ்' பணத்தையும் எப்படியும் வாங்கிவிடவேண்டுமென்று கோபு திட்டமிட்டிருக்க வேண்டும். இன்னும் கொஞ்சநாள் உன்னை வைத்திருந்து உன்னையும் ஒழித்துவிட்டு அந்தப் பணத்தை அடையவே அவன் முடிவுகட்டி இருக்கிறான். இல்லாவிட்டால் நேற்றிரவே உன்னை வெளியே விரட்டி இருப்பான்!" என்றார். அவர் சொல்வது நியாயமாகவே ராஜுவுக்குத் தோன்றியது.

"காரியம் இப்படிக் கெட்டுவிட்டதே ஸார்! இனி எப்படி நான் அவர்களைக் கண்காணிக்கமுடியும்?" என்று கவலைப்பட்டான் ராஜு. இன்ஸ்பெக்டர் ஏதோ பலத்த யோசனையில் மூழ்கி இருந்ததால், அவன் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. அவர் சிந்தனையைக் கலைக்க வேண்டாமென்று நினைத்து, ராஜு, அவர் அறையைவிட்டு வெளியேவந்தான்.

எங்கோ சென்றிருந்த ஸப்இன்ஸ்பெக்டர் மகனை விச்சு, அப்பொழுதுதான் வீட்டிற்குள் நுழைந்தான். ராஜுவைக் கண்டதும், "என்ன விசேஷம்?" என்று விசாரித்தான். ராஜு நடந்த விவரமெல்லாம் கூறிவிட்டு, "காரியம் கெட்டுப்போய் விட்டதே; இனி என்ன செய்வது?" என்று கவலைப்பட்டான். விச்சு சில விநாடிகள் ஏதோ யோசித்தான். 'சட்' டென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. "கவலைப்படாதே ராஜு! ஒரு வழி கண்டு பிடித்துவிட்டேன்!" என்று குதூகலமாகக் கூறினான். "என்ன? என்ன?" என்று ஆவலாகக் கேட்டான் ராஜு.

"நம்ம ராமு இருக்கான், பாரு......' என்று உற்சாகமாகக் கூறினான் விச்சு.

"எந்த ராமு? "ஏ" செக்ஷனில் இருக்கிறானே அவனா?" என்று கேட்டான் ராஜு.

"ஆமாம்! அதே ராமுதான்! அவன் அப்பா ஒரு ஸவுண்ட் எஞ்ஜினியர். அவர் வீட்டில் 'கம்யூனிகேட்டர்' என்ற ஒரு சிறு ஒலிப்பெட்டி இயந்திரம் இருக்கிறது. அதைக் கேட்டு வாங்கிவந்து, ஸீதாவின் அறையில் வைத்துவிட்டு அங்கிருந்து கம்பிகள் மூலம் நாம் இருக்கும் இடத்திற்கு அவர்கள் பேச்சைக் கேட்கும்படி செய்யலாம்." என்றான் விச்சு.

"அப்படியானல் பேச்சு, "ஒலிபெருக்கி" மூலம் கேட்பதுபோல் ஒரே சத்தமாக இருக்குமோ ?" என்று சந்தேகப்பட்டான் ராஜு.

"சீ! அப்படியல்ல! கிட்டத்தட்ட டெலிபோன் மாதிரிதான். அந்த 'கம்யூனிகேட்ட'ரின், "ரிஸீவர்" என்ற பாகத்தை ஸீதாவின் அறையில் வைத்துவிட்டு, அதிலிருந்து நீளக் கம்பிகளைக் கொண்டு வந்து நாம் இருக்கும் இடத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். பிறகு அந்தக் கம்பியின் முனையில் "ஹெட் போன்" என்ற கருவியை மாட்டி, அதை நம் காதில் வைத்துக்கொண்டால், அறையில் பேசுவதெல்லாம் நமக்கு ரகஸியமாகக் கேட்கும்!" என்று விச்சு கூறியதும், ராஜு, "இது நல்ல யோசனைதான்! ஆனல் ராமு தருவானு ?" என்று சந்தேகப்பட்டான்.

"அந்தக் கவலையை எனக்கு விட்டுவிடு!" என்று அலட்சியமாகக் கூறினன் விச்சு.

* * * *

அன்று பிற்பகல் ஒரு மணிக்கு, "கம்யூனிகேட்டர்" இயந்திரத்தையும், அதற்குத் தேவையான எல்லா உபகரணங்களையும் விச்சு கொண்டுவந்தான்.

பங்களாக் கதவு பூட்டப்பட்டிருந்ததால், மத்தியானம் இரண்டு மணிக்கு யாரும் இல்லாத சமயமாகப்பார்த்து, ஜன்னல் வழியாக உள்ளே ஏறிக்குதித்து, ஸீதாவின் அறையில் "கம்யூனிகேட்ட"ரைப் பொருத்திவைத்து, அது யார் கண்ணிலும் படாமலிருக்கும்படி மறைவும் ஏற்படுத்தினர்கள். அதோடு பொருத்தப்பட்டிருந்த கம்பிகளையும் தோட்டத்துச் செடிமறைவுகள் வழியாகக் கொண்டுவந்து, ஒரு அடர்ந்த புதர் ஓரம் ராஜு மறைந்து உட்கார்ந்து கேட்பதற்கேற்ப ஏற்பாடு செய்துவிட்டார்கள். இயந்திரம் சரியாக வேலை செய்கிறதா என்பதையும் சோதித்துக் கொண்டார்கள்.

ராஜு விச்சுவுக்கு ரொம்பவும் நன்றி செலுத்தினன். இரவு எப்பொழுது வருமென்று துடித்துக்கொண்டிருந்தான்.

இரவும் வந்தது. ராஜுவுக்கு சாப்பாடு "அவுட் ஹவுஸி"லேயே கொண்டுவந்து பரிமாறப்பட்டது. கோபுவும் ஸீதாவும் சாப்பாடு முடிந்து, படுக்கப் போகிறர்கள் என்பதை விளக்குகள் அணைவதன் மூலம் ராஜு கண்டுகொண்டு, மெதுவாகப் புதர் மறைவிற்குப் போய், "ஹெட் போனை" எடுத்து மாட்டிக்கொண்டு கவனித்தான். பயத்தால் தன் தொடைகள் நடுங்குவதையும் அவன் பொருட்படுத்தவில்லை.

கோபு ஸீதாவைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவது, ஹெட் போனில் தெளிவாகக்கேட்டது. ராஜுவுக்கு ரொம்ப சந்தோஷம். இன்று பல ரகசியங்களை அறிந்துகொள்ளலாம் என்று நினைத்

தான். ஆனால் என்ன துரதிருஷ்டம்! கோபு ஸீதாவை, தன் அறையில் போய்ப் படுத்துக்கொள்ளும்படியும், அங்கு அவளுக்குச் சௌகரியமான படுக்கை வசதிகள் இருப்பதாகவும், இந்த அறையில் நேற்று எலி வந்து தொந்தரவு செய்ததுபோல அங்கே ஏற்படாதென்றும் கூறி அவளை அழைத்துக்கொண்டு அந்த அறையை விட்டுப் புறப்பட்டுவிட்டான்! பிறகு ஒரே நிசப்தம்! ராஜுவுக்கு அழுகையும் ஆத்திரமுமாக வந்தது. அன்றுபட்ட சிரமமெல்லாம் வீணாகி விட்டதே என்ற கவலை அவனுக்கு! வேறு வழியில்லாமல், பேசாமல் தன் இடத்தில் போய்ப் படுத்துக்கொண்டான்.

* * * *

மறுநாள் காலையில் ராஜு விச்சுவிடம் நடந்ததைக் கூறினான்.

விச்சு விழுந்து விழுந்து சிரித்தான். ராஜுவுக்கு அவமானமாக இருந்தது. விச்சு அதைப் புரிந்துகொண்டு, "சரி; கவலைப் படாதே; இன்று மத்தியானம் இடம் மாற்றிவைத்து விடுவோம்," என்று தைரியம் கூறினான். பிறகு ஏதோ யோசனையோடு, "நாம் தான் முட்டாள் தனமாக நடந்துவிட்டோம்!" என்றான்.

"எப்படி?" என்று புரியாமல் கேட்டான் ராஜு.

"இல்லை...நீ வீட்டில் இருக்கிறாய் என்பதனால்தான் ஸீதாவுக்கு தனி அறை ஒழித்துக்கொடுத்திருக்கிறான் கோபு. நீ வீட்டுக்குள் இல்லை என்ற நிலை ஏற்பட்டபிறகு எதற்காக அவளை அங்கேயே இருக்கச் சொல்லப்போகிறான். தன் படுக்கையறையை அவளுக்குக் கொடுத்திருப்பான். இதை நாம் யூகிக்காமல் செய்துவிட்டோம்" என்று கூறினான் விச்சு.

* * * *

அன்று மத்தியானம் மறுபடியும் பங்களாவுக்குள் ஏறிக் குதித்து, கோபுவின் படுக்கை அறையில் "கம்யூனிகேட்ட"ரைப் பொருத்தி வைத்தார்கள். இந்த அறையில் நிறைய சாமான்கள் இருந்ததால், அந்த இயந்திரத்தைச் சுலபமாக மறைக்க முடிந்தது. அங்கிருந்து கம்பிகளை இழுத்துக்கொண்டு போய், வேறொரு புதர் மறைவில் வைத்துக்கொண்டார்கள். இயந்திரத்தை ஒரு முறைக்கு இரு முறையாகச் சோதனை செய்து பார்த்துத் திருப்தி அடைந்தார்கள்.

இரவு எப்பொழுது வருமென்று ஆவலாகத் துடித்துக் கொண்டிருந்தான் ராஜு. அன்று இரவு அவர்கள் பேச்சிலிருந்து கோபுவின் எதிர்காலப் பயங்கரத் திட்டம் என்ன என்று ஓரளவு விளங்குமென்று எதிர்பார்த்தான். அதை வைத்துக்கொண்டு வேலைசெய்தால் நிச்சயம் தனக்கு எதுவும் துப்புக் கிடைக்கக் கூடுமென நம்பினான் ராஜு.

# 6. மூர்த்தி யார்?

அன்று இரவு சாப்பாடு முடிந்து, கோபு படுக்கைக்குச் செல்லும் சமயத்தில், ராஜு மெல்ல கலவரத்துடன் புதர் அருகில் போய் உட்கார்ந்துகொண்டு காதில் "ஹெட்போனை" எடுத்து மாட்டிக் கொண்டு கவனித்தான்.

"என்ன ஸீதா படித்துக்கொண்டிருக்கிறாய்?" என்று கோபு கேட்பது தெளிவாக ராஜுவின் காதில் விழுந்தது. ஸீதா, "ஒன்று மில்லை; ஏதோ ஒரு துப்பறியும் நாவல்!" என்று கூறிவிட்டு, "ரேடியோ வையுங்கள். கேட்கலாம்!" என்றாள். கோபு ரேடியோவைத் திருப்பினான். ஆங்கிலேயர் சங்கீதம் ரேடியோவிலிருந்து கிளம்பியது. ராஜுவுக்கு மறுபடியும் கவலை வந்து சூழ்ந்து கொண்டது.

ஏனென்றால் அறையில் அவர்கள் பேச்சுச் சத்தமும் ரேடியோவின் பாட்டுச் சத்தமும் கலந்து தான் அவனுக்குக் கேட்கும். அப்பொழுது என்ன பேசுகிறார்கள் என்று தெளிவாகப் புரியாமல் போய்விடும்! ராஜு நினைத்தது போலவே தான் நடந்தது! ரேடியோவைத் திருப்பி அதைப் பாட விட்டு விட்டு, கோபுவும் ஸீதாவும் அதைக் கவனியாமல் ரொம்பச் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ராஜுவுக்கு அவர்கள் பேச்சில் ஒன்று கூடச் சரியாக விழவில்லை. இரவு பத்தரை மணிக்கு ரேடியோ தானாகவே நின்றது. அந்தச் சமயத்தில் கோபு சொல்லிய வார்த்தைகள் மட்டும் ராஜுவின் காதில் ஸ்பஷ்டமாக விழுந்தன.

"அந்த மூர்த்திப் பயல் என்னிடம் ரொம்ப வாலாட்டுகிறான். சதா என்னைவந்து மிரட்டிப் பணம் பறித்துக்கொண்டு போகிறான்!" என்றான் கோபு.

"நம்ம மூர்த்தியா? ஏன்?" என்று கேட்டாள் ஸீதா கலவரத்துடன்.

"அவன் ஒரு கருப்பு "போர்டு" கார் வைத்திருக்கிறானே; அது "ஷேட்"டிடம் கடன் வாங்கி வாங்கியது. ஷேட்டு பணத்திற்கு மிரட்டுகிறான்" என்று கோபு முடிப்பதற்குள், ஸீதா இடைமறித்து "ஒரு ஸினிமாப் படம் தயாரித்து முடித்துவிட்டால், அவர் பாடு நிம்மதியாகிவிடும்!" என்றாள்.

"படமாவது அவன் எடுக்கவாவது! வேண்டுமானால் அவன் கொண்டுவந்த பாம்புகள் தான் 'படம்' எடுக்கும்! ஊஹூம், அது கூட எடுக்காது!" என்று கிண்டலாகக் கூறினான் கோபு.

"பாம்புகளா?" என்று ஆச்சரியமாகக் கேட்டாள் ஸீதா.

"ஆமாம்; உனக்கு அதைப்பற்றியெல்லாம் தெரியாது. அந்தப் பயலை தீர்த்துக்கட்டினால் தான் எனக்கு நிம்மதி! 'ஷேட்'டுக்குக் கொடுக்க இரண்டாயிரம் ரூபாய் வேண்டுமாம்! இல்லாவிட்டால் என்னைப் போலீஸாரிடம் மாட்டி விடுவதாக மிரட்டுகிறான். நன்றி கெட்ட பயல்! என் பணம் எவ்வளவு சாப்பிட்டிருக்கிறான் தெரியுமா?" என்று ஆத்திரமாகக் கூறினான் கோபு.

"ஏன் இவ்வளவு ஆத்திரப்படுகிறீர்கள்?" என்று கேட்டாள் ஸீதா.

"என் விஷயங்கள் சில, அவனுக்குத்தெரியும்!...இருக்கட்டுமே! தெரிந்தால் என்ன? அந்த நாயை ஒரு விநாடியில் தீர்த்துக்கட்ட என்னால் முடியும்! இருக்கட்டும், இருக்கட்டும்!" என்று குமுறிக் கொண்டே கோபு படுக்கையில் போய்ப் படுத்துவிட்டான். அதற்கு மேல் அந்த அறையிலிருந்து எந்தச் சம்பாஷணையும் ராஜுவுக்குக் கேட்கவில்லை. சிறிது நேரத்தில் கோபு 'குறட்டை' விடும் சப்தம் கேட்டது. ராஜு தன் அறைக்கு எழுந்து சென்றான்.

* * * *

மறுநாள் ஸப்-இன்ஸ்பெக்டரை ராஜு சந்தித்து, "கருப்பு போர்டு" காரையும் அதன் முதலாளி மூர்த்தியையும் கண்டு பிடிக்க வேண்டும் என்று கூறினான். கண்டுபிடித்த பிறகு அந்த மூர்த்தி என்ற ஆசாமியின் நடவடிக்கைகளைக் கவனித்தால் ஏதாவது துப்பு கிடைக்கும் என்று ராஜு நம்பினான். இதை ஸப்-இன்ஸ்பெக்டரும் ஒப்புக்கொண்டார். உடனே கார் பதிவு செய்யப்பட்ட ரெஜிஸ்டரைப் பார்க்க ஆபீஸிற்குப் புறப்பட்டுச் செல்வதாகவும், அதன் பிறகு போலீஸாரை அனுப்பி, மூர்த்தியின் இருப்பிடத்தைத் தெரிந்துவரச் சொல்வதாகவும் கூறினார். அன்றைய தினம் இரவும் அவர்கள் சம்பாஷணையைக் கவனிக்கும்படி கூறினார். ராஜுவும் சரியென்று புறப்பட்டான்.

* * * *

அன்று இரவு ராஜுவுக்கு இன்னும் கொஞ்சம் முக்கியமான தகவல்கள் கிடைத்தன. கோபுவும் ஸீதாவும் மணம் செய்து கொள்ள முடிவு செய்திருக்கிறார்கள் என்று ராஜு புரிந்து கொண்டான். உடனடியாகச் செய்துகொண்டால், ஊரார் ரொம்ப சந்தேகப்படுவார்கள் என்று தான், திருமணத் தேதியை தள்ளி வைத்திருக்கிறார்கள் என்றும் தெரிந்துகொண்டான்.

இந்தச் சம்பாஷணைகளுக்கிடையில் ஸீதா கூறிய சில வார்த்தைகள், ராஜுவுக்கு விஷயங்களை இன்னும் தெளிவுபடுத்தின. ஸீதா சொன்னாள்;

"நான் உங்களைக் கல்யாணம் செய்துகொண்டாலும், ஒருக்காலும் 'இன்ஷ்யூர்' செய்துகொள்ள மாட்டேன்!" என்று கலகலவென்று சிரித்தாள்.

"சீ பைத்தியம்! இனிமேல் எனக்கு எதற்குப் பணம்? இருக்கிற சொத்தை வைத்துக்கொண்டு நிம்மதியாகக் காலந் தள்ளத் தான் தீர்மானித்திருக்கிறேன்; நீ பயப்படாதே!" என்று கூறினான்.

இதற்கு மேல் அவர்கள் இருவரும் அன்று ஒன்றும் பேசவில்லை. ராஜுவும் தன் அறைக்குப் போய்ப் படுத்துக்கொண்டான். நாளை முதல் ஒட்டுக் கேட்கும் வேலை தேவையில்லை என்று முடிவு செய்துகொண்டான். அந்த மூர்த்தியையும், கருப்பு "போர்டு" காரையும் கண்டுபிடித்துவிட்டால்...? கண்டுபிடித்தபிறகும் ஜாக்கிரதையாகத் தான் நடக்கவேண்டுமென்று ராஜுவுக்குத் தெரியும். அந்த மூர்த்திக்கும் தன் அக்காள் பத்மாவின் கொலைக்கும் ஏதோ நெருங்கிய சம்பந்தம் இருக்கிறதென்று ராஜுவுக்கு உறுதியாகப் பட்டது. கோபு பயப்படும் அளவுக்கு மூர்த்தியிடம் ரகசியங்கள் சிக்கி இருக்கின்றன என்றால், தன் அத்தானுக்கு கொலை செய்ய அந்த மூர்த்தி உடந்தையாய் இருந்திருக்க வேண்டும். மூர்த்தி ரொம்பவும் கெட்டிக்காரனாகவும் இருக்கவேண்டும். இந்தக் கொலையில் அவனுக்குச் சம்பந்தம் இருந்தாலும், அவனைச் சிக்க வைப்பது அவ்வளவு சுலபமென்று ராஜு நினைக்கயில்லை. ஆனால் எல்லாவற்றிற்கும் கடவுள் இருக்கிறார் என்று மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டான்.

* * * *

மறுநாள் காலை ஸப்-இன்ஸ்பெக்டரைச் சந்திப்பதற்குச் சென்றான் ராஜு. விஷயங்களைக் கேள்விப்பட்டதும் இன்ஸ்பெக்டர், "நாம் சந்தேகப்பட்டபடிதான் எல்லாம் நடக்கின்றன. இருந்தபோதிலும், கோபுவைஉடனடியாகக்கைது செய்வதற்கு நமக்குப் போதிய ஆதாரமில்லாமல் இருக்கிறது. ஒருக்கால் மூர்த்தியைப் பிடித்தால்...?" என்று ஏதோ சொல்ல வந்தவர் சட்டென்று மாற்றிக் கொண்டு, "மூர்த்தியையும் அவ்வளவு சுலபமாகப் பிடித்துவிட முடியுமென்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால், கோபுவையே மிரட்டிக் கொண்டு திரியும் மூர்த்தி என்ற பேர்வழி சர்வ ஜாக்கிரதையாகத் தான் எல்லாவற்றிலும் இருப்பான்..." என்று அவர் சொல்லிக் கொண்டே வரும்பொழுது, ஒரு ஹெட் கான்ஸ்டபிள் உள்ளே நுழைந்தான்.

"என்னப்பா ஆயிற்று ?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"ரட்லண்ட் கேட்டுக்குப்போகும் திருப்பத்தில் அவன் பங்களா இருக்கிறது ஸார்! வீடு ஆபீஸ் எல்லாம் ஒன்று தான்!" என்றான் ஹெட் கான்ஸ்டபிள்.

"அங்கேயே குடும்பத்தோடு வசிக்கிறனு?" என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

"அவன் தனி ஆள் தான் ஸார்! ஒரு சமையற்காரன் மட்டும் இருக்கிறன்!" என்றன்.

"மூர்த்தி வீட்டைக் கண்டுபிடித்தாகிவிட்டது ராஜு!" என்றர் இன்ஸ்பெக்டர். ராஜு உற்சாகமாக அந்த விலாசத்தைக் குறித்து வாங்கிக் கொண்டான்.

"ராஜு! இனிமேல்தான் உன் வேலைத் திறத்தைக் காண்பிக்க வேண்டும். மூர்த்தியைச் சட்டப்படி நான் இப்பொழுது ஒன்றும் செய்ய முடியாது. சந்தேகத்தின் பேரில் அவனை ஏதாவது விசாரிக்க முயற்சித்தாலும், அவன் ஒரேயடியாக எல்லாவற்றையும் மறுத்தால், மேலே பேசுவதற்கு எனக்குப் 'பிடிப்பு' கிடையாது. நீ மெதுவாக அவனை நெருங்க வேண்டும். எப்படி நெருங்கலாம்?" என்று தாடையைத் தடவியபடி யோசனை செய்தார். அவருக்கு ஒரு வழியும் மட்டுப்படவில்லை.

அங்கிருந்த ஹெட் கான்ஸ்டபிள், "இதற்கு ஏன் சார் இவ்வளவு யோசனை? அவன் ஒரு சாதாரண பொறுக்கி மாதிரித் தெரிகிறது. அவனை நெருங்குவது அவ்வளவு கஷ்டமாகத் தெரிய வில்லை!" என்று பரம அலட்சியமாகக் கூறினன்.

"அவன் 'பொறுக்கி' மாதிரி இருக்கிறனென்று நீ எப்படிக் கூறுகிறய்?" என்று கேட்டார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"காலையில் நான் அவன் வீட்டை ஜாடையாகக் கவனித்துக் கொண்டு போகும்பொழுது, அவன், சில பிச்சைக்காரப் பயல்களைப் பிடித்து நிறுத்தி பாட்டுப் பாடச் சொல்லிக் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தான்!" என்று கூறினன். ஸப்-இன்ஸ்பெக்டர் 'குபீ' ரென்று சிரித்துவிட்டார். ராஜு "அ! சரியான யோசனை!" என்று துள்ளிக் குதித்தான். "என்ன? என்ன?" என்றர் இன்ஸ்பெக்டர்.

அவர் காதருகில் ராஜு ரகசியமாகச் சிறிது நேரம் ஏதோ கூறினன். இன்ஸ்பெக்டர் முகமும் மலர்ந்தது. "சரியான யோசனை தான்! ஆனல் ஜாக்ரதை!" என்று எச்சரித்தார்.

"அதைப் பற்றிக் கவலையே வேண்டாம் ஸார்!" என்று தைரியமாகக் கூறினன் ராஜு. இன்ஸ்பெக்டர் அன்பாக அவன் முதுகில் தட்டிக் கொடுத்து, "பிள்ளையென்றல் உன்னைப் போலல்லவா பிறக்கவேண்டும்!" என்று புகழ்ந்தார். ராஜு வெட்கத்தால் தலை குனிந்தான்.



## 7. பாம்பாட்டி யார்?

"மகா மேரு புரொடக்ஷன்ஸ்" என்றபோர்டுதொங்கிய ஸினிமாக் கம்பெனியின் வெளிவராந்தாவில் ஒரு ஸோபா ஸெட்டும், 'டீ பாய்' என்ற சிறு மேஜையும் போடப்பட்டிருந்தன. 'டீ பா'யில் ஒரு ஆங்கிலத் தினசரிப் பத்திரிகையும், 555 சிகரெட் டின் ஒன்றும் இருந்தன. ஸோபாவில் மூர்த்தி ஸில்க் ஜிப்பாவோடும், வாயில் சிகரெட்டோடும் ஏதோ யோசனையில் மூழ்கி இருந்தான். அந்தக் காம்பவுண்டில், ஒரு கருப்பு "போர்டு" கார் 2117 என்ற நம்பரைத் தாங்கியபடி கம்பீரமாக நின்றது.

தூரத்தில் இனிமையான குரலில் யாரோ பாடிக்கொண்டு வருவது கேட்டது. சாரீரத்தின் இனிமையிலிருந்து யாரோ ஒரு பெண்ணாக இருக்கும் என்று மூர்த்தி முதலில் நினைத்தான். பிறகு சப்தம் வரவர நெருங்கியதும், பாடிய நபரை மூர்த்தி பார்க்க முடிந்தது. அவன் ஒரு பிச்சைக்காரச் சிறுவன்! இந்தப் பயலுக்கு

இவ்வளவு 'ஜோரான' சாரீரம் இருக்கிறதே என்று நினைத்தான் மூர்த்தி.

அந்தச் சிறுவனும் பாடியபடியே அந்தக் காம்பவுண்டுக்குள் நுழைந்தான். மூர்த்தி அவனை இன்னும் நாலுபாட்டுப் பாடச் சொன்னான். நிறை இனாம் தருவதாக ஆசைகாட்டினான். அந்தச் சிறுவனும் ஆட்சேபனை சொல்லாமல் பாட ஆரம்பித்தான்.

சிறிது நேரம் சென்றது. மூர்த்தி ரொம்பவும் ரசித்து அப் பாட்டுக்களைக் கேட்டுக்கொண்டிருந்தான். பயல் பிச்சைக்காரனாக இருந்தாலும், அட்சர சுத்தம் பிரமாதமாக இருக்கிறதே என்று நினைத்தான் மூர்த்தி.

அந்தச் சமயத்தில் தலைப்பாகை கட்டிய ஒரு கருத்த முரடன் அங்கு வந்தான். அவன் உடலில் சட்டை கிடையாது. புஜத்தில் தாயத்துக் கட்டி இருந்தான். இடது கையில் ஒரு வேர்க் காப்பு அணிந்திருந்தான். அதோடு விரல்களில் பிங்கான் மோதிரங்கள் போட்டிருந்தான். தோளின் ஒருபுறம் தொங்கும் மூட்டையில் ஒருமகுடியும் நீட்டிக்கொண்டிருந்தது. அவனைப் பார்த்தவுடனேயே, தெருவில் வித்தைகாட்டிப் பிச்சை எடுக்கும் பாம்பாட்டி போலத் தோன்றினான்.

மூர்த்தி அவனை அலட்சியமாகப் பார்த்து, "எங்கேடா வந்தாய்?" என்று கேட்டான்.

"இரண்டு பாம்பும் செத்துப்போச்சுங்க!" என்று கையை விரித்தான் பாம்பாட்டி.

" அதற்காக ?" என்று சந்தேகத்தோடு கேட்டான் மூர்த்தி.

"என் பணத்தைக் கொடுத்துடுங்க!" என்று எந்தவித 'ஷரா'வும் போடாமல் கண்டிப்பாகக் கூறினான் வந்தவன். மூர்த்தியின் முகத்தில் ஆத்திரம் ஜ்வலித்தது. "உங்களிடம் சகவாசம் வைத்துக்கொள்வதே மடத்தனம். அந்தப் பித்தலாட்டக்காரப்பயலை நம்பி நான் இதில் இறங்கியதற்கு எனக்குத்தான் நஷ்டம்! அவன் என் நெற்றியில் குழைத்து நாமத்தைப் போட்டுவிட்டான்!" என்று கடுகடுப்பாகக் கூறினான்.

வந்தவன் இதற்கெல்லாம் மசிபவனாகத் தெரியவில்லை. "அதுக்கு நான் என்ன சாமி பண்றது! என்வீட்டுப் பாம்பு செத்துப் போச்சே! என் சொத்தாச்சே சாமி அது? நீங்க இந்தமாதிரி பாதகத்துக்கு என் பாம்புகளைக் கேட்டீங்கண்ணு தெரிஞ்சிருந்தா......" என்று அவன்மேலே பேசுவதற்குள் மூர்த்தி உக்கிரமாக, "சரி; சரி! நிறுத்துடா!" என்று சீறிவிட்டு "இந்தா உன் காசு!" என்று ஒரு ஐந்து ரூபாய் நோட்டை வீசி எறிந்தான். அதை எடுக்காமலே அந்தப் பாம்புக்காரன், "என்னசாமி இது?" என்று குறையாகக்

கேட்டான். மூர்த்தி ஆத்திரமாக, "ஏன்? என்ன?" என்று மீண்டும் சீறினன்.

"என்ன சாமி; அன்னைக்கு பாம்பைத் திருப்பிக் கொடுத்துட்டு, பத்து ரூபா வாங்கிக்கிட்டு வந்தியே! இப்பொ அஞ்சு ரூபா கொடுத்தா என்ன அர்த்தம்?" என்ருன்.

"பாக்கி ஐந்து ரூபாய் நான் கொடுத்த கண்ணுடிப் பெட்டிக்குச் சரியாகப் போய்விட்டது!" என்ருன் மூர்த்தி.

"அந்தக் கண்ணுடிப்பொட்டி எனக்கு எதுக்கு சாமி? அதை இப்பொவே கொண்டாந்து உன் கிட்டே போட்டுடறேன்! அதை நான் வச்சிருந்தா எவனுவது போலீஸ்காரன் பிடிச்சுக்கவா?" என்ருன்!

"சரி சரி; ஜாஸ்தி பேசாதே; இந்தாடா!" என்று இன்னெரு ஐந்து ரூபாயை வீசி எறிந்தான். பாம்பாட்டி முணுமுணுத்தபடி அதை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

பாட்டுப் பாடிக்கொண்டிருந்த பிச்சைக்காரச் சிறுவன் இது வரை எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்தான். பாம்பாட்டி அப்பால் நகர்ந்ததும், "சாமி, காசு!" என்று கெஞ்சினன். மூர்த்தியின் ஆத்திரம் இன்னும் அடங்கவில்லை. அதே ஆத்திரத்தில், "காசா? போடா பிச்சைக்கார ராஸ்கல்! நீ பிச்சை எடுக்கிருய் என்று போலீஸுக்கு 'போன்' பண்ணி, உன்னை உள்ளே தள்ளிவிடுவேன்! ஓடிவிடு!" என்று மிரட்டினன்.

பிச்சைக்காரச் சிறுவன், மிகவும் அலட்சியமாக ஒரு குப்பையைப் பார்ப்பதுபோல, மூர்த்தியை ஒரு பார்வை பார்த்தான். பிறகு வேறு பக்கம் திரும்பி, "தூ!" என்று காரித் துப்பிவிட்டு காம்பவுண்டைவிட்டு வெளியே போனன். மூர்த்தி பிரமித்துப் போய்விட்டான். அவன் சமாளிப்பதற்குள் பிச்சைக்காரச் சிறுவன் அவன் பார்வையை விட்டு மறைந்துவிட்டான். "பிச்சை எடுக்கும் சின்ன நாய்க்கு என்ன திமிர்!" என்று குமுறினன் மூர்த்தி.

* * * *

**கா**ம்பவுண்டை விட்டு வெளியே வந்த பிச்சைகாரச் சிறுவன், தூரத்தில் பாம்பாட்டி போய்க் கொண்டிருப்பதைக் கவனித்தான். அவன் பின்னலேயே இவனும் பல தெருக்களையும் வீதிகளையும் கடந்து போய்க்கொண்டே இருந்தான். பாம்பாட்டி, கோடம்பாக்கம் ரெயில்வே கேட்டைத்தாண்டி எங்கோ நேராகப்போனன். பிச்சைக்காரச் சிறுவனும் அவனைச் சிறிது தூரத்தில் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தான். நகரின் எல்லைப்புறமெல்லாம் கடந்து தனியே ஒரு தோப்பிலுள்ள குப்பத்தை நோக்கி பாம்பாட்டி போனன். அங்கிருந்த ஒரு ஓலைக் குடிசையில் நுழைந்து, திண்ணையில் 'அப்பாடா' என்று உட்கார்ந்தான். அதுதான் பாம்பாட்டியின்

விடு என்று பிச்சைக்காரச் சிறுவன் புரிந்துகொண்டான். அதற்கு மேல் அவனைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லாததால், 'விறு விறு'வென்று கோடம்பாக்கம் ஸ்டேஷனை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவன் வேறுயாருமில்லை! நம் ராஜுதான்! தன் அக்காளைப் பாம்பைவிட்டுக் கடிக்கவைத்துக் கொன்றிருப்பார்களோ என்ற சந்தேகம் ராஜுவுக்கு அதிகரித்தது. அதனால் பாம்பாட்டி வீட்டில் துப்புக் கிடைக்கலாமென நினைத்தான்.

* * * *

பிச்சைக்கார வேஷத்தில் சென்று, தான் அறிந்து வந்த உண்மைகளை, ராஜு ஆத்திரத்துடன் ஸப்-இன்ஸ்பெக்டரிடம் கூறினான். அதற்குமேல், தனது திட்டம் என்னவென்று அவரிடம் விளக்கினான். "என்னோடு இனிமேல் நீங்கள்தான் வரவேண்டும்! ஆனால் போலீஸ் உடையில் அல்ல! ஒரு மைனர் போல ஸில்க் ஜிப்பா, ஜரிகைவேஷ்டி, கூலிங்கிளாஸ் அணிந்து கொண்டு வரவேண்டும்......" என்று கூறினான்.

"அப்படி வந்து......?" என்று ஸப் இன்ஸ்பெக்டர் சந்தேகமாகக் கேட்டார்.

"அந்தப் பாம்பாட்டியிடம் போய் நாம் பாம்புகளை விலைக்கு வாங்கவேண்டும். அங்கு ஒரு கண்ணாடிப்பெட்டி இருக்கிறது. அதையும் வாங்கி வந்துவிடவேண்டும்!" என்றான் ராஜு.

இன்ஸ்பெக்டர், ராஜுவின் திட்டங்களைப் புரிந்து கொண்டார். அது சரியான வழியாகவே அவருக்குத் தோன்றியது. அவர்கள் அன்று மாலையே, பாம்பாட்டி வீட்டுக்குப் போய்வருவதென்று தீர்மானித்தார்கள்.

* * * *

இதற்கிடையில் ராஜு, தன் பெயரால் தன் அத்தான் கோபு 'இன்ஷ்யூர்' செய்திருக்கும் கம்பெனிக்குச் சென்று, 'எந்தத் திட்டத்தின் கீழ்' இன்ஷ்யூர் செய்திருக்கிறது என்று கேட்டான். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மானேஜர் அவனை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு கிண்டலாக, "ஒரு விசித்திரமான திட்டத்தின் கீழ் "இன்ஷ்யூர்" செய்திருக்கிறது" என்றார்.

"அப்படியென்றால் புரியவில்லையே!" என்று கேட்டான் ராஜு.

"உலகத்தில் எல்லோரும் தங்கள் வீட்டுப் பிள்ளைக்கு 'கல்யாண இன்ஷ்யூரன்ஸ்,' 'மேல் படிப்பு இன்ஷ்யூரன்ஸ்' என்று செய்வார்கள். ஆனால் உனக்கு 'விபத்து' இன்ஷ்யூரன்ஸ் பண்ணி இருக்கிறார் உன் 'கார்டியன்'!" என்றார் அவர்.

"அப்படிச் செய்திருப்பதால்...?" என்று சந்தேகமாகக் கேட்டான் ராஜு.

"நீ துர்மரணம் அடைந்தால், உன் 'கார்டிய'னுக்கு ஐம்பதினாயிரம் ரூபாய் கிடைக்கும்" என்றார் மானேஜர்.

"ஓஹோ, அதைத் தெரிந்துகொண்டு போகத்தான் வந்தேன்! அதாவது நான் இறந்துபோய் விட்டால் என் அத்தானுக்கு இன்ஷூரன்ஸ் பணம் கிடைக்கும். இல்லையா?" என்று ராஜு கிளம்பினான்.

மானேஜருக்குத் திடீரென ஒரு சந்தேகம் வந்துவிட்டது. ஒருக்கால் இதைத் தெரிந்துகொண்டுபோய், தன் அத்தானுக்குப் பணம் கிடைக்கத் தன்னைத் தியாகம் செய்துகொள்ளத் தயாராகி, தற்கொலை செய்துகொள்ளப் போகிறானே ராஜு, என்று பயந்து விட்டார். அவனைச் 'சட்'டென்று எழுந்து பிடித்துக்கொண்டு போலீஸ் கமிஷனர் ஆபீஸுக்கு 'போன்' செய்துவிட்டார். ராஜு எவ்வளவோ தூரம் சொல்லியும் அவர் கேட்கவில்லை. அதோடு இன்ஷூரன்ஸ் கம்பெனி மானேஜர் நிற்பதாகத் தெரியவில்லை. "உன் கார்டியனுக்குப் போன் பண்ணி 'இது என்ன நாடகம்' என்று தெரிந்துகொள்கிறேன்" என மிரட்டினார். இதற்குள், போலீஸார் வந்து விட்டார்கள். கார்டியனைத் தாங்கள் விசாரித்துக் கொள்வதாக மானேஜரிடம் கூறிவிட்டு, ராஜுவை போலீஸ் லாரியில் ஏற்றிச் சென்றார்கள். ராஜு அங்கிருந்து மீண்டு வருவதற்கு, நமது ஸப்-இன்ஸ்பெக்டர் நேரில் கமிஷனர் ஆபீஸ் போய் விஷயங்களை விளக்கவேண்டி நேர்ந்துவிட்டது! ஒருவாறு ராஜு விடுதலையாகி வெளியே வந்தான்! இந்த விஷயம் தன் அத்தானுக்கு எட்டினால் தன்னுடைய நிலை இன்னும் அதிக ஆபத்தாகமுடியுமே என்று நடுநடுங்கினான்.

## 8. கொலைக் கருவி?

அன்றுமாலை கோடம்பாக்கம் ரயில்வேஸ்டேஷனை விட்டு இறங்கி ஒரு ஸில்க் ஜிப்பா மைனரும், பைஜாமா-ஷர்ட் அணிந்த ஒரு சிறுவனும், பாம்பாட்டியின் விட்டை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். இன்ஸ்பெக்டர் அசல் மைனர் போலவே காட்சி அளித்தார். காலையில் பிச்சைக்காரச் சிறுவன் வேஷத்தில் ராஜுவைப் பார்த்தவர்கள். இப்பொழுது அவனை அடையாளங் கண்டு கொள்ளவே முடியாது!

பாம்பாட்டியின் குடிசையை அவர்கள் நெருங்கிய போது, அந்தி இருள் இலேசாகப் படர ஆரம்பித்தது. பாம்பாட்டி திண்ணையில் உட்கார்ந்து வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருந்தான்.

அவர்கள் இருவரையும் கண்டதும், மரியாதையாக எழுந்து வந்து, "யாரைச் சாமி தேடுறீங்க!" என்று வணக்கமாகக் கேட்டான்.

"உன்னிடம் தான் வந்தோம் !" என்முன் ராஜு.

"இந்த ஏழையிடமா? என்ன விசேஷம் சாமி!" என்று ஆச்சரியத்தோடும் அவநம்பிக்கையோடும் கேட்டான்.

"எங்களுக்கு **ஒரு காரியத்திற்காக** இரண்டு பாம்புகள் வேண்டும்!" என்முர் மைனர் வேஷத்திலிருந்த இன்ஸ்பெக்டர். பேசும் பொழுதே, 'ஒரு காரியத்திற்காக' என்ற வார்த்தைகளைக்கொஞ்சம் அர்த்தம் தொனிக்கும்படி அழுத்திப் பேசினர். உடனே பாம்பாட்டி குரல் குழற, "என்னிடம் ஏது சாமி பாம்பு?" என்று ஒரேயடியாகப் புளுகினன். "நாங்கள் நிறையப் பணம் தருகிறோம்!" என்முன் ராஜு. அதற்கும் பாம்பாட்டி மசியவில்லை. தன்னிடம் வித்தை காட்டிப் பிழைக்கும் ஒரு கிழப்பாம்பு இருந்ததாகவும் அது செத்துப் போய் இரண்டு நாள் ஆவதாகவும் சாதித்தான்.

பாம்பாட்டி மிகவும் ஜாக்கிரதையான ஆள் என்று இருவரும் புரிந்து கொண்டார்கள். உடனே ராஜு தந்திரமாக, "மூர்த்தி ஐயா தான் எங்களை உன்னிடம் அனுப்பினர். அவருக்குக் கூட இரண்டு பாம்புகள் கொடுத்தாயாம். பிறகு அவர் அவைகளைத் திருப்பிக் கொடுத்து விட்டு வாடகை மாத்திரம் கொடுத்தாராம். நீ இன்றைய தினம் அவரைப் பார்த்து, அந்த இரண்டு பாம்புகளும் செத்துப் போய் விட்டன என்று புளுகி, அதற்கு நஷ்டஈடும் வாங்கிக் கொண்டு வந்தாயாம்!" என்று கூறினன் ராஜு.

"நான் புளுகினேன்னு அந்த அய்யரு சொன்னரு !" என்று ஆச்சரியப்பட்டான் பாம்பாட்டி.

"ஆமாம்" என்முன் ராஜு.

"எமகாதகன் சாமி அந்த அய்யரு ! அதை எப்பிடியோ தெரிஞ்சுக் கிட்டாரு பாருங்க !......அப்புறம் கோவமா பேசினரா?" என்று ஆவலாகக் கேட்டான்.

ராஜு உடனே, "ஊஹூம் ! 'போனல் போகிருன் ஏழை ! நமக்கு நல்ல சமயத்தில் உதவினன்' என்று தான் சொன்னர்!" என்று சரடு விட்டான்.

"என்ன இருந்தாலும் அந்த அய்யருக்கு ரொம்பத் தயாள மனசுங்க !" என்று புகழ்ந்தான் பாம்பாட்டி.

"சரி ! இப்பொழுது என்ன சொல்கிருய் ? அந்த இரண்டு பாம்புகளையும் எங்களுக்கு விற்று விடு. இருபது ரூபாய் தருகிறோம். அந்தக் கண்ணடிப் பெட்டியிலேயே போட்டுக் கொடு. அதற்கு ஐந்து ரூபாய் சேர்த்துத் தருகிறோம்!" என்முர் 'மைனர்!'

"கண்ணாடிப் பெட்டிக்கு அஞ்சு ரூபாயா? அது ஒம்பது ரூவா சாமி! அந்த ரெண்டு பாம்புக்கும் இருபத்தஞ்சு ரூவா வேணும்! அதுக்குக் குறைஞ்சு பேசாதிங்க! இந்த ஏழை பொழைக்கிறதே அந்தப் பாம்பால்தான் சாமி!" என்று மறுதளித்தான் பாம்பாட்டி.

ஒருவாறு பேரம் பேசி, முப்பது ரூபாய்க்கு, கண்ணாடிப் பெட்டியையும் பாம்பையும் வாங்கிக் கொண்டு, மைனர் வேஷத்திலிருந்த இன்ஸ்பெக்டரும் ராஜூவும் புறப்பட்டார்கள்.

தன் அக்காளைக் கடித்த அந்தப் பாம்புகளை வெளிச்சத்தில் பார்க்க வேண்டுமென்று ராஜூவுக்கு துடிதுடிப்பாய் இருந்தது. கோடம்பாக்கம் ஸ்டேஷனை அவர்கள் நெருங்கிய போது மணி ஏழே கால் ஆகி விட்டது. வீதியில் மின்சார விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அதிக ஜன நடமாட்டமில்லாத ஓர் இடத்தில் அந்தப் பாம்புகளைக் காட்டும்படி இன்ஸ்பெக்டரைக் கேட்டான். அந்தப் பாம்புகளைப் பார்த்ததும் ராஜூவின் ரத்தம் உறைந்து விடும் போலிருந்தது. அவை இரண்டும் சுமார் மூன்றடி நீளமுள்ள முரட்டு 'கட்டு விரியன்' பாம்புகள்! அவை கடிக்கும் போது தன் அக்காள் எப்படி அலறித் துடித்திருப்பாள் என்று நினைக்கும் போது ராஜூவுக்குத் தன் அத்தானைப் பழி வாங்காமல் விடக் கூடாது என்ற ஆத்திரத்தில் சர்வாங்கமும் துடிதுடித்தன!



## 9. இருட்டில் எமகிங்கரகன் ?

மாம்பலம் ஸ்டேஷனை விட்டு ராஜுவும், இன்ஸ்பெக்டரும் வெளியே வரும்பொழுது, மணி கிட்டத்தட்ட ஏழே முக்கால் ஆகிவிட்டது. ராஜுவுக்கு ஒரு பக்கம் பயம் வந்து கௌவிக் கொண்டது. ஏனென்றால், இதற்குள் தன் அத்தான் கோபு வீட்டிற்கு வந்திருப்பான். ராஜுவைக் காணாமல் தேடியும் இருப்பான். இனிமேல் வீட்டிற்கு போனால் நிச்சயம் ரகளை நடக்கும் என்று ராஜுவும் எதிர்பார்த்தான்.

போலீஸ் ஸ்டேஷனை நெருங்கியதும் இன்ஸ்பெக்டர், ராஜுவிடம் விடைபெற்றுக் கொண்டு போய் விட்டார். ராஜு தனியாக வீட்டை நோக்கி நடந்தான். அக்காள் கொலையுண்ட இரகசியத்தைத் தான் துப்பறிவதாக தன் அத்தானுக்கு ஏதாவது சந்தேகம் தட்டியிருந்தால் தன்னையும் கொலை செய்யாமல் விடமாட்டான் என்று நடுங்கினான்.

பங்களாவை நெருங்கியதும், உள்ளே விளக்குகள் எரி வதை ராஜு கவனித்தான். ஸீதா அங்குமிங்கும் நடமாடிக் கொண்டிருப்பதும் தெரிந்தது. கோபு வீட்டிலிருக்கும் தடயமே தெரியவில்லை. ஒருக்கால் எங்காவது வெளியே போயிருப்பான் என்று ராஜு நினைத்தான். அவன் வருவதற்குள் சாப்பிட்டுவிட்டுப் படுத்துவிட வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான்.

ஆகவே சந்தடி செய்யாமல் மெதுவாக, தன் இருப்பிடமான "அவுட் ஹவுஸ்"க்குள் போய் நுழைந்தான். உள்ளே விளக்குப்போடு வதற்காக "ஸ்விட்ச்" போர்டை நெருங்கும் போது ஒரு வலுவான கரம் தன் பிடரியைப் பிடிப்பதை உணர்ந்தான். அந்தப் பிடியில் அவன் குரல் வளையே நொறுங்கி விடும் போலிருந்தது! ராஜு கூச்சலிடுவதற்குள் 'பளிச்' என்று விளக்கு எரிந்தது! எதிரே ஆத் திரமாக கோபு நின்று கொண்டிருந்தான்.

"எங்கேயடா ராஸ்கல் போய்ச் சுற்றி விட்டு வருகிறாய்?" என்று ஆத்திரமாகக் கேட்டான். ராஜு பதில் சொல்வதற்குள் 'பளார், பளார்' என்று இரண்டு அறைகள் விட்டான். "தண்டச் சோற்றைத் தின்றுவிட்டு, படிக்காமல் ஊர் சுற்றுகிறாயா? இன்று இரவு உனக்குச் சோறு கிடையாது, பட்டினியாகக் கிட!" என்று கூறிவிட்டு 'விர்'ரென்று வெளியே போய்விட்டான். ராஜு அழுது கொண்டே விளக்கை அணைத்து விட்டு வெறும் தரையில் முழங்கையை வைத்துப் படுத்துக் கொண்டான். தாங்க முடியாத ஆத்திரத்தோடு தேம்பித் தேம்பி அழுது கொண்டே இருந்த ராஜு சிறிது நேரத்தில் அயர்ந்து தூங்கி விட்டான்.

* * * *

ஸீதாவும், கோபுவும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு தங்கள் அறைக்கு வந்தார்கள். ஸீதா அன்று தன்னை அப்சரஸ் போல அலங்கரித்துக் கொண்டிருந்தாள். அவள் அழகில் சொக் கிப்போன கோபு, "அடி! நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியு மா? உன் அழகிற்காக எவனும் தன்னுடைய எத்தனை மனைவி களையும் கொலை செய்யத் தயாராகி விடுவானடி!" என்றான். ஸீதாவுக்கு என்னவோ ஒரு பயத்தால் உடம்பு நடுங்கியது. ஆனால் அதை மறைத்துக்கொண்டு, ஸீதா, கோபுவை 'கேரம்' விளையாட அழைத்தாள். கோபு 'சரி'யென்று ஒப்புக் கொண்டான்.

வெகு நேரம் வரையில் இருவரும் 'கேரம்' விளையாடிக் கொண்டிருந்தார்கள். மணி பனிரெண்டும் அடித்தது. விளை யாட்டை நிறுத்தி விட்டு இருவரும் படுக்கையைத் தட்டிப் போட் டார்கள். அந்தச் சமயத்தில் திறந்திருந்த அறைக் கதவு வழியாக உள்ளே ஒரு எலி நுழைவதை கோபு பார்த்து விட்டான். சட்

டென்று ஒரு கம்பை எடுத்துக் கொண்டு அந்த எலியை விரட்டினான். சாமான்கள் நிறைய அடுக்கப்பட்டிருந்த ஒரு மூலையில் எலி போய்ப் புகுந்து கொண்டது. ஸீதா அந்தச் சாமான்களையெல்லாம் வேகமாகக் கீழே இறக்கி வைத்தாள். எலி எங்கிருந்தாவது தலையை நீட்டுகிறதா என்று ரொம்பக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் கோபு. எல்லாச் சாமான்களையும் அநேகமாக எடுத்துவிட்டாள் ஸீதா. அவற்றிற்கு அடியிலிருந்த ஒரு இயந்திரத்தைப் பார்த்ததும் கோபு திகைத்துவிட்டான்! அது என்ன? அவசரமாகக் கையில் அதைத் தூக்கினான். அதன் அடியிலிருந்து ஓடிய எலியை அவன் லட்சியம் செய்யவில்லை. தன் கையிலிருந்த இயந்திரத்தை வெளிச்சத்தில் தூக்கிப் பார்த்தான். அது ஒரு "கம்யூனிகேட்டர்" இயந்திரம்! ஸீதா அதுவரை அதைப் பார்த்ததில்லை. "அது என்ன ?" என்று ஆவலாகக் கேட்டாள்.

இதற்குள் பயத்தால் கொலை வெறி முகத்தில் தாண்டவமாட, ஆத்திரத்துடன் கோபு, அந்த இயந்திரத்தோடு இணைக்கப்பட்டிருந்த கம்பி, எந்த வழியாகப் போகிறது என்று பார்த்தான். அந்தக் கம்பி, பீரோவின் பின்பக்க மறைவு வழியாகத் தோட்டத்துப் பக்கமிருக்கும் ஜன்னலுக்குப் போயிற்று. ஜன்னலிலிருந்து கம்பி ஒரு செடி மறைவில், வெளிப்பக்கம் இழுக்கப்பட்டிருப்பதையும் கோபு கவனித்தான்.

ஸீதாவுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆவலை அடக்க முடியாமல் "இது என்ன ?" என்று மறுபடியும் மறுபடியும் கேட்டாள்.

கோபுவின் முகம் பயங்கரமாக மாறி இருந்தது. "இது "கம்யூனிகேட்டர்" என்ற இயந்திரம். இந்த இயந்திரத்தின் மூலமாக நாம் இந்த அறையில் பேசும் விஷயங்களை, இதோடு இணைக்கப்பட்டுள்ள கம்பிகளின் மறுபக்க முனையில் உள்ளவர்கள் தாராளமாகக் கேட்கலாம். யாரோ நம் இரகசியங்களைத் துப்பறிந்து கண்டுபிடிக்க இங்கே இந்த இயந்திரத்தை வைத்திருக்கிறார்கள்!" என்று கூறிவிட்டு, "இது எப்படி இங்கே வந்தது ?" என்று திகைப்போடு தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். ஸீதாவின் முகம் சவம்போல வெளுத்துவிட்டது.

கோபு, அலமாரியில் இருந்த 'டார்ச்' விளக்கை எடுத்துக் கொண்டு, வாசற் கதவைத் திறந்து தோட்டத்திற்கு வந்தான். தோட்டத்தில் தன் அறை இருந்த பக்கமாக வந்தான். அறைக்குள்ளிருந்து அந்தக் கம்பி செடி மறைவுகளிலும், வளர்ந்திருந்த புற்களின் கீழேயும் மறைக்கப்பட்டு சுமார் இருபது கஜ தூரம் வந்திருந்தது. கம்பியின் முனை ஒரு புதருக்கருகில் போய் முடிந்திருந்தது.

கோபு ஜாக்கிரதையாக அந்தப் புதரைச் சுற்றி டார்ச் விளக்கை அடித்துப் பார்த்தான். புதரில் இரண்டொரு செடிகள் முறிந்து காய்ந்து போய்க் கிடந்தன. அவற்றின் இடுக்கில் ஏதோ வெண்மையாகத் தெரிந்தது. சட்டென்று குனிந்து அதைக் கையில் எடுத்துப் பார்த்தான். "ஸ்ட்ராங் சூட மிட்டாய்" சுற்றி வரும் காகிதம் அது!

ஒரு நொடியில் கோபுவுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. ராஜு பரீட்சைக்காகக் கண் விழித்துப் படிக்கும் பொழுது, தூக்கம் வராமலிருக்க "ஸ்ட்ராங்க் சூட மிட்டாய்" வாங்கிச் சாப்பிடுவான். இங்கும், கண் விழிப்பதற்காக அவன் அந்த மிட்டாய் வாங்கி வாங்கித் தின்றிருக்கிறான்! இந்த வேலை அவனுடைய வேலை தான்!

அப்படியானால் தன் மைத்துனன் ராஜுவே, தன் நடவடிக்கைகளை மிகவும் ஜாக்ரதையாகத் துப்பறிகிறான் என்று கோபு புரிந்து கொண்டான். என்ன நெஞ்சழுத்தம் அந்தச் சிறுவனுக்கு! எதற்காக அவன் இப்படித் துப்பறிய வேண்டும்? தன் அக்காள் இறந்த விதத்தில் அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறதா? அன்று அறைக்கு வெளியே நின்று ஒட்டுக் கேட்டதும் அதற்குத் தானா? இவன் அவ்வளவு நேரங் கழித்து வீட்டுக்கு வந்தானே, ஏன்? தனக்கு விரோதமாக வெளியில் வேலை செய்கிறானா? இப்படியெல்லாம் நூற்றுக் கணக்கான சந்தேகங்கள் அவன் மனதில் தோன்றி அவனை வதைத்தன.

ஆனால் ஒன்று மட்டும் கோபுவுக்கு நிச்சயமாகப்பட்டது. ராஜு இந்த விஷயங்களைப் போலீஸில் இதற்குள் சொல்லி இருக்க மாட்டான். அப்படிச் சொல்லி யிருந்தால் இந்நேரம் அவனைக் கண்காணிக்க போலீஸார் சுற்றிச் சுற்றி வருவார்களே! பத்மாவின் மரணத்திற்குப் பிறகு இன்னும் ஒரு போலீஸ்காரனைக் கூட அவன் கண்ணால் பார்க்கவில்லை. ஆகவே ராஜு, தானாக எதையாவது முக்கியமான விஷயத்தைக் கண்டுபிடித்துவிட்டு, பிறகு தான், போலீஸில் போய்ச் சொல்ல நினைத்திருப்பான் என்று கோபு முடிவு கட்டினான். இதற்குள் ராஜுவுக்கு, பலனுள்ள புலன் எதுவும் கிடைத்திருக்க முடியாது என்றும் கோபு நம்பினான்.

எனவே, ராஜு தன் முயற்சியில் முன்னேறி வெற்றி காண்பதற்கு முன் அவனைத் தீர்த்துக்கட்டிவிட வேண்டுமென்று தீர்மானித்தான். எப்படித் தீர்த்துக் கட்டுவது? அவன் குரல் வளையை நெறித்துக் கொன்று, காரில் தூக்கிப் போட்டுக்கொண்டு நகரின் வெளிப்புறத்தில் போட்டுவிட்டு வந்து விடுவது! பிறகு நாளைக் காலையில் அவனைக் காணவில்லையென போலீஸிலேயே எழுதி வைத்து விடுவது! இந்த முடிவு மிகவும் சரியென்றே கோபுவுக்குத் தோன்றியது!

ஈரமற்ற இந்தக் கிராதக முடிவோடு, கோபு, ராஜூ படுத்திருந்த "அவுட் ஹவுஸ்" நோக்கி நடந்தான். ஆத்திரத்தால் அவன் ரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது. தன் சாப்பாட்டையே சாப்பிட்டுக் கொண்டு, தனக்கே பேராபத்தைத் தேடித்தர இந்தப் 'பொடிப் பயல்' துணிந்துவிட்டானே என்று நினைத்ததும் அவன் கைகள் பதறின.

"அவுட் ஹவுஸ்" பக்கம் ஒரே இருட்டாக இருந்தது. இருந்தாலும் டார்ச் அடித்துப் பார்க்க அவனுக்கு இஷ்டமில்லை. யாராவது பார்த்துவிட்டால்? ஆகவே இருட்டில் நிதானமாக எமகிங்கரகனைப் போல் "அவுட் ஹவு"ஸில் நுழைந்தான். உள்ளே இன்னும் இருட்டாக இருந்தது. ராஜூ எங்கே படுத்திருக்கிறான் என்று மெதுவாகத் தடவிப் பார்த்தான். படுக்கை அவன் கையில் தட்டுப் பட்டது. ஆனால் என்ன ஆச்சரியம்! படுக்கை சுற்றிவைக்கப்பட்ட படியே இருந்தது. ராஜூவைக் காணோம்!

கோபுவின் மனம் 'திக்'கென்றது! தன் மேலே போட்டிருந்த டவலை எடுத்து இரண்டாக மடித்து அதற்குள் "டார்ச்" விளக்கின் முன் பக்கக் கண்ணாடியை மறைத்து, விளக்கை அடித்துப் பார்த்தான். மிகவும் மங்கலான அந்த ஒளியிலே, சிறிது தூரத்தில் கால் தெரிந்தது. சட்டென்று வெளிச்சத்தை அந்தப் பக்கம் திருப்பினான். ராஜூ, தலைக்குக் கையை வைத்துக்கொண்டு, அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்! பால் வடியும் அந்தப் பாலகனின் முகம் பார்ப்பதற்குப் பரிதாபமாக இருந்தது. இருந்தாலும் கோபுவின் உள்ளம் இளகி மாறிவிடவில்லை! மைத்துனன் என்று மனமுருகக் கூடிய வேளையுமல்ல அது!

மெதுவாக விளக்கை அணைத்துவிட்டு, அவன் படுத்திருந்த இடத்தை நோக்கிக் கோபு கைகளைப் பயங்கரமாக விரித்துக் கொண்டு நெருங்கினான். கையிலிருந்த துண்டை அவன் கழுத்தில் போட்டு, தன் கரங்களை வைத்து அவன் குரல் வளையைப் பிடித்து நெருக்கினான். திடுக்கிட்டு விழித்துக் கொண்ட ராஜூ, "அத்திம் பேரே...அத்திம்பேரே, அக்காளைத் தான் கொன்று விட்டீர்கள்! என்னையாவது விட்டுவிடுங்கள், அத்திம்பேரே!" என்று பரிதாபமாகக் கத்தித் திமிறினான். கால்களைப் பூமியில் 'படார்' 'படார்' என்று அடித்து உதைத்துக் கொண்டான். கையை வீசி ஓங்கிக் கோபுவை அடித்தான். கோபு தன் பிடியைத் தளர்த்தவில்லை. ராஜூவுக்கு விழிகள் பிதுங்கின. கை கால்களின் துடிப்பின் வேகமும் படிப்படியாகக் குறைந்தது. ஆயிற்று; இன்னும் இரண்டொரு விநாடிகளில் ராஜூவின் உயிர் தீர்ந்துபோய்விடும்....

இந்தச் சமயத்தில் 'படா'ரென்று கோபுவின் பிடரியில் ஓங்கி ஒரு அறை விழுந்தது! எதிர்பாராத அந்த அறையின் அதிர்ச்சி

யிலே கோபு தன் பிடியை விட்டுவிட்டான். அதே நேரத்தில் 'பளிச்'சென்று "அவுட் ஹவு"ஸின் விளக்கும் எரிந்தது! கோபு சட்டென்று திரும்பிப் பார்த்தான். அவன் பின்னால் போலீஸ் ஸப்-இன்ஸ்பெக்டர் புன்சிரிப்போடு நின்று கொண்டிருந்தார். அறையில் நாலைந்து போலீஸ் சேவகர்கள் சாதாரண உடுப்பில் நின்று கொண்டிருந்தார்கள்.

இதற்குள் ராஜு எழுந்துவிட்டான். ஸப்-இன்ஸ்பெக்டர் போலீஸ் சேவகர்களுக்கு ஜாடை காட்டினார். இரு சேவகர்கள் ஒரு விலங்கைக் கொண்டு வந்து கோபுவுக்கு மாட்டி அவனை இழுத்துக் கொண்டு வெளியே போனார்கள்.

மற்ற சேவகர்கள் பங்களாப் பக்கம் சென்றார்கள்.

ராஜுவுக்குக் கொஞ்ச நேரம் ஒன்றுமே புரியவில்லை. "நீங்கள் எப்படி ஸார் இங்கே வந்தீர்கள்?" என்று திகைப்போடு ஸப்-இன்ஸ்பெக்டரைக் கேட்டான்.

"நான் இப்படிப்பட்ட நெருக்கடியை எதிர்பார்த்தேன்!" என்றார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"எதிர்பார்த்தீர்களா?" என்று திகைத்துப் போனான் ராஜு.

"ஆமாம்!" என்று புன்னகையோடு கூறினார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"எப்படி ஸார் எதிர்பார்த்தீர்கள்?" என்று வியப்போடு கேட்டான் ராஜு.

"நான் வேறு விதமாக எதிர்பார்த்தேன். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மானேஜர் ஒருக்கால் கோபுவுக்கு 'போன்' பண்ணி இருக்கக்கூடும் என்று எதிர்பார்த்தேன். ஏனென்றால் மிகவும் சிக்கலான சூழ்நிலையில் அகப்பட்டுக் கொண்ட இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மானேஜர் நிச்சயம் 'சும்மா' இருக்க முடியாது. ஏராள மான பணம் தன் கம்பெனியிலிருந்து மோசடி செய்யப்படக்கூடும் என்ற சந்தேகம் ஏற்பட்டு விட்டால் அவரால் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்? எனவே அவர் கோபுவை டெலிபோன் மூலமோ, நேரிலோ, மிரட்டக்கூடும். மிரட்டினால் கோபுவுக்கு உண்மை தெரிந்து உன்னை நிச்சயம் 'எதுவும்' செய்துவிடுவான் என்று சந் தேகப்பட்டேன். எனவே உன் உயிருக்குத் தகுந்தபாதுகாப்புத்தரும் பொருட்டு, பங்களாவைச் சுற்றிலும், தோட்டத்துப் பக்கத்திலும் இரவில் காவல் போடுவதற்காக நானே போலீஸ் காரர்களுடன் வந்தேன். அவர்களைத் தகுந்த இடங்களில் நிறுத்திவிட்டுத் திரும்ப லாம் என்பதுதான் என் நோக்கம். அதற்குள் இந்த நிகழ்ச்சி நடந்தது!" என்றார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"உங்களுக்கு ரொம்பவும் நன்றிபாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன் ஸார்!", என்றான் ராஜு.

"நீ நன்றி செலுத்தவே வேண்டியதில்லை. சொல்லப்போனால் நான்தான் நன்றி செலுத்தவேண்டும். துஷ்டர்களைப் பிடிக்கும் கடமை எங்களுடையது. அதில் உன் போன்ற ஒரு சிறுவன், உயிரையும் பொருட்படுத்தாமல், உதவிசெய்ய முன் வந்ததற்கு எங்கள் இலாகாவே உனக்கு நன்றி செலுத்தும். உன் உயிர் எங்களுக்கு மிகவும் முக்கியமானது. உன்னால் ஒரு மாபெரும் கொலைகாரன் சிக்குவதற்கு வழி ஏற்பட்டிருக்கிறது!" என்றார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"ரொம்பப் புகழ்கிறீர்கள் ஸார்!" என்றான் ராஜு.

"இல்லை! எனக்குப் புகழவே தெரியாது. என் மனதில் பட்டதை மறைக்காமல் சொன்னேன்!" என்றார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"கோபுவைக் கைது செய்ததால் நமக்கு ஒன்றும் இடைஞ்சல் ஏற்பட்டு விடாதே!" என்று சந்தேகமாகக் கேட்டான் ராஜு.

"நிச்சயமாக இல்லை. ஏனென்றால் நாம் நம்மைச் சுற்றிலும் கிடைக்கக்கூடிய துப்புகளையெல்லாம் துழாவிக் கண்டுபிடித்த பிறகே கோபுவைக் கைது செய்திருக்கிறோம். அதனால் அவன் சகாக்கள் இனி உஷாராகி விடமுடியாது. மேலும் பத்மாவின் கொலையில் முக்கியமான கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். இந்தச் சமயத்தில், கோபுவுக்கு நம் ஏற்பாடுகளில் துளியத்தனை தெரிந்துவிட்டாலும், நமக்குத் தடையமே கிடைக்காதபடி செய்துவிடுவான். ஆகவே அவன் இந்தச் சமயத்தில் சிறைக்குள்ளே இருப்பதுதான் நல்லது!" என்றார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"அது சரி! நீங்கள் இங்கே வந்ததும் எனக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்!" என்று கேட்டான் ராஜு.

"நானும் போலீஸ்காரர்களும் ரகசியமாக பங்களாவுக்குள் நுழைந்து 'அவுட் ஹவுஸ்' பக்கமாக மறைந்து வந்தோம். உள்ளே பங்களாவில் விளக்கு எரிந்தது. அவுட் ஹவுஸுக்குள் யாரோ கையையும் காலையும் உதைத்துப் போராடுவதுபோல சத்தம் கேட்டது. உடனே உள்ளே நுழைந்து, கோபுவைப் பிடித்து விட்டோம்! "கொலை செய்ய யத்தனித்த" குற்றத்தில் சிக்கிக்கொண்டான்!" என்று அவர் கூறிக்கொண்டிருக்கும் பொழுது போலீஸ்காரர்கள், ஸீதாவைக் கைதுசெய்து அழைத்து வந்தார்கள்.

உடனே ஸப்-இன்ஸ்பெக்டர் அவளை ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகும்படி கூறிவிட்டு, ராஜுவிடம், "சரி, ராஜு! நீ போய் பங்களாவில் கதவைத் தாளிட்டுக் கொண்டு தூங்கு!" என்று கூறிப் புறப்பட்டார்.

ராஜு பங்களாவுக்குள் பயப்பிராந்தியுடனே போனான். தன் அக்காளின் பெரிய 'என்லார்ஜ்மெண்ட்'-போர்ட்டோ படம், கோபுவின் படுக்கையறையில் எப்பொழுதும் மாட்டி இருக்கும். அந்தப் படத்தைப் போய் வணங்கிவிட்டுப் படுக்கலாம் என்று போய்ப் பார்த்தான். அந்தப் படம் அங்கு இல்லை! அது இருந்த "பிரே"மில், ஸீதாவின் படம் பொருத்தி வைக்கப்பட்டிருந்தது! ராஜுக்கு அழுகையும் ஆத்திரமும் தாங்கவில்லை. "என் நன்மைக்காக, இந்தக் கிராதகன் கையில் நீயாக வலுவில் வந்து சிக்கிக் கொண்டாயே, அக்கா!" என்று தேம்பித் தேம்பி அழுதான்.



## 10. மனச்சாட்சி?

மறுநாள் காலை பொழுதுவிடிந்ததும், ராஜு நேராக போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றான். ஸப்-இன்ஸ்பெக்டர் அதற்குள்ளாக பிரேத பரிசோதனை நிலையத்திற்குத் தகவல் அனுப்பி, பத்மாவைக் கடித்தபாம்பு, எந்த வகையைச் சேர்ந்தது என்று கேட்டனுப்பி இருந்தார்.

ராஜுவைக் கண்டதும், "இரவு நன்றாகத் தூங்கினாயா?" என்று சிரித்தபடி விசாரித்தார். ராஜு தலையை ஆட்டினான்.

"அடுத்தாற்போல நான் என்ன ஸார் செய்யவேண்டும்? நீங்கள் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"பிரேத பரிசோதனை நிலையத்து டாக்டர், பத்மாவைக் கடித்த பாம்பு, விரியன் பாம்புதான் என்று தகவல் அனுப்பினால், நான் முதலில் போய், பாம்பாட்டியை 'அரெஸ்ட்' செய்துகொண்டு வந்து விடுவேன். அவனை விசாரித்த பின்தான், மேற்கொண்டு என்ன செய்யவேண்டுமென்று முடிவு செய்யவேண்டும்" என்றார்.

"நான்?" என்று கேட்டான் ராஜு.

"நீ பள்ளிக்கூடத்திற்குப் போ!" என்ருர் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"இன்று பள்ளிக்கூடம் கிடையாது சார்! ஞாயிற்றுக்கிழமை!" என்ருன் ராஜு.

"அப்படியாஞல், பங்களாவை நன்ருகத் துருவிப்பார்! ஏதாவது தடயம் கிடைத்தால் கொண்டுவா !" என்ருர்.

இந்தச் சமயத்தில் பிரேத பரிசோதனை நிலையத்திலிருந்து தகவல் வந்தது. பத்மாவைக் கடித்தது 'கட்டுவிரியன் பாம்பு' என்று டாக்டர் கூறி இருந்தார்.

உடனே ஸப்-இன்ஸ்பெக்டர், "சரி! நாம் சரியான பாதையில் தான் சென்று கொண்டிருக்கிறேம்! நான் உடனே போய், பாம் பாட்டியை "அரெஸ்ட்" செய்துகொண்டு வந்துவிடுகிறேன்!" என்று, போலீஸ்காரர்களோடு புறப்பட்டார்.

ராஜு நேராக தன் நண்பன் விச்சுவிடம் போஞன். அவனை யும் அழைத்துக்கொண்டு, பங்களாவைச் சோதனை செய்யப் புறப்பட்டான்.

* * * *

அன்று காலையிலிருந்து, மத்தியானச் சாப்பாட்டு நேரம்வரையில், பங்களா முழுவதும் 'துருவித் துருவி' தேடிப் பார்த்தார்கள். ஒன்றுமே கிடைக்கவில்லை. தோட்டத்தில் செடிகள் காடுபோல வளர்ந்திருந்த இடத்தையெல்லாம் சோதனை செய்தார்கள். ஓர் இடத்தில் ஒரு பிராணியின் எலும்புக்கூடு கிடந்தது. என்ன பிராணியென்று பார்த்தார்கள். அது ஒரு முயலின் எலும்புக் கூடு! அந்த பங்களாவுக்கு முயல் வரவே சாத்தியமில்லை. பிறகு எலும்புக்கூடு எப்படி வந்தது? 'எதற்கும் இருக்கட்டும்' என்று ராஜு அதை ஜாக்ரதையாக வைத்துக்கொண்டான்.

பிறகு கிணற்றுப்பக்கம் போய்ப் பார்த்தார்கள். கிணறு பாழடைந்துபோய் வரண்டு கிடந்தது. அதில் தண்ணீரே இல்லை. சில செடிகள்கூட முளைத்திருந்தன.

ராஜு மெதுவாக அந்தக் கிணற்றுக்குள் இறங்கிஞன். கீழே மேடிட்டிருந்த மண்ணை காலால் சீய்த்துக்கொண்டே கிணற்றுச் சுவர்களையெல்லாம் பார்த்தான். அந்தச் சமயத்தில் அவன் காலில் ஏதோ தட்டுப்பட்டது. குனிந்து, கைகளால் மண்ணைச் சீய்த்தான். ஒரு மரப்பிடி ஒன்று அவன்கையில் பட்டது. அவசர அவசரமாக இன்னும் தோண்டிஞன். கொஞ்சம் ஆழமாகத் தோண்டியதும் ஒரு துருவேறிய கோடரி கிடைத்தது! கோடாரியின் தலைப்பாகத்திலே, வஜ்ஜிரம் போன்ற ஏதோவொன்று ஒட்டிக்

கொண்டிருந்தது. அதைச்சுற்றி நீளமான தலைமயிர்கள் கொத்துக் கொத்தாக இருந்தன!

ராஜு‍க்கு விஷயங்கள் விளங்க ஆரம்பித்தன. இந்தக் கோடாரியால் தான், கோபு தன் முதல் மனைவியை அடித்துக் கொன்றிருக்கவேண்டும். பிறகு வெகுநாள் வரை இதை எங்கோ மறைத்துவைத்திருந்துவிட்டு, பிறகு பாழடைந்துபோன இக்கிணற்றில் அதைவீசி எறிந்திருக்கவேண்டும்! அப்பொழுதே இதைப் போட்டிருந்தால், மக்கி மண்ணுகப் போயிருக்கும். அப்படிப் போட்டால் ஒருக்கால் போலீஸார் சந்தேகப்பட்டு கிணற்றைச் சோதனை போட்டால் மாட்டிக்கொள்வோமென்று நினைத்து, வேறு இடத்தில் பதுக்கி வைத்திருந்துவிட்டு, வெகுநாள் கழித்து கிணற்றில் போட்டிருக்கிறான். அப்போது கிணறு வற்றிப்போய் இருந்திருக்க வேண்டும் என ராஜு நினைத்தான். அதை ஜாக்கிரதையாக எடுத்துக்கொண்டு, மேலே ஏறி வந்தான்.

தனக்குக் கிடைத்த இந்த இரண்டு 'தடய'ங்களை எடுத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றான் ராஜு. அதற்குள் ஸப்-இன்ஸ்பெக்டர், பாம்பாட்டியைக் கைது செய்துகொண்டு வந்து ஸ்டேஷனில் வைத்திருந்தார்.

பாம்பாட்டி உண்மைகளை ஒப்புக்கொண்டு ஒரு விரிவான வாக்குமூலம் எழுதிவைத்தான். அதில், மூர்த்தி தன்னிடம் ஒரு நாள் வந்து இரண்டு விரியன் பாம்புகள் விலைக்குக் கேட்டதாகவும், அவன் தன் வசம் இருந்த கிழப்பாம்புகள் இரண்டைக்கொடுத்து இருபது ரூபாய் வாங்கிக்கொண்டதாகவும், அதை மூர்த்தி ஒரு கண்ணாடிப்பெட்டியில் வைத்து எடுத்துக்கொண்டு போனதாகவும், அன்றுமாலையே திரும்பிவந்து, அந்தப் பாம்புகள் உபயோக மற்றவை என்று கூறி திருப்பிக் கொடுத்துவிட்டு, வேறு பாம்புகள் பிடித்துத் தரும்படி கூறியதாகவும், தான், காட்டில்போய் இரண்டு புது விரியன் பாம்புகளைப் பிடித்து வந்து கொடுத்ததாகவும், அந்தப் பாம்புகளை மறுநாள் காலை தன்னிடம் திருப்பிக் கொண்டுவந்து மூர்த்தி கொடுத்துவிட்டு, பதிலுக்கு பத்து ரூபாய் வாங்கிக்கொண்டு போனதாகவும் வாக்கு மூலத்தில் கண்டிருந்தான். அந்தப் பாம்பு கள்தான் இப்பொழுது போலீஸ் ஸ்டேஷனில் இருக்கின்றன என்றும் ஒப்புக் கொண்டிருந்தான்.

அவனை 'லாக்-கப்'பில் வைத்துவிட்டு, ஸப்இன்ஸ் பெக்டர் மெல்ல ராஜுவை, "நீ போன சமாச்சாரம் என்ன?" என்று கேட்டார். ராஜு, அந்தக் கோடாரியையும், முயலின் எலும்புக் கூட்டையும் கொடுத்தான். அதை வாங்கி வைத்துக்கொண்டு, ஸப்இன்ஸ்பெக்டர், தான் மூர்த்தியைக் கைது

செய்து கொண்டுவரப் போவதாகவும், ராஜுவை கொஞ்ச நேரம் அங்கேயே இருக்கும்படி கூறிவிட்டுப் புறப்பட்டார்.

* * * *

ஒரு மணி நேரங்கழித்து, மூர்த்தியைக் கைது செய்துகொண்டு ஸப்இன்ஸ்பெக்டர் வந்து சேர்ந்தார். மூர்த்தி பேயறைந்தது போல இருந்தான்.

"எதற்காக ஸார், என்னைக் கைது செய்துகொண்டு வந்தீர்கள்?" என்று படபடப்பாகக் கேட்டான் மூர்த்தி.

"பத்மாவின் கொலை விஷயமாக!' என்று அமரிக்கையாகக் கூறினர் இன்ஸ்பெக்டர்.

"பத்மாவா? யார் சார் அது?" என்று ஆச்சரியப்பட்டவன் போல் நடித்தான் மூர்த்தி.

"உங்கள் நண்பர் கோபுவின் மனைவி!" என்று கிண்டலாகக் கூறினர் ஸப்இன்ஸ்பெக்டர்.

"கோபுவா? என் நண்பனு?" என்று வியந்தான் மூர்த்தி.

"மூர்த்தி!" என்று ஒருமாதிரியாகப் பார்த்தார் ஸப்இன்ஸ்பெக்டர். மூர்த்தியின் உடம்பு நடுங்கியது. அதிலிருந்து அவன் ஒரு கோழை என்று ராஜு புரிந்து கொண்டான்.

"மூர்த்தி! வீணுக என் நேரத்தைப் போக்கவேண்டாம்! நீயும் கோபுவும் சேர்ந்து பத்மாவைக் கொலை செய்தீர்கள் என்பதற்கு என்னிடம் சாட்சி இருக்கிறது!" என்ருர் ஸப்இன்ஸ்பெக்டர்.

"சாட்சியா!" என்று பிரமிப்போடு கேட்டான் மூர்த்தி.

"ஆம்! பாம்பாட்டி!" என்று அழுத்தந்திருத்தமாக ஸப்இன்ஸ்பெக்டர் கூறினர். மூர்த்தியின் முகம் சவம்போல வெளுத்துவிட்டது. ஸப்இன்ஸ்பெக்டர் ஒரு கான்ஸ்டபிள் பக்கம் திரும்பி "அந்தப் பாம்பாட்டியை அழைத்துக்கொண்டு, அந்தக் கண்ணுடிப் பெட்டியையும் எடுத்துவா!" என்ருர்.

கான்ஸ்டபிள், பாம்புப் பெட்டியை எடுத்துக்கொண்டு, பாம்பாட்டியை அழைத்து வந்தான். மூர்த்திக்கு ஒரேயடியாக வியர்த்துக் கொட்டியது. கைகால்களெல்லாம் உதறலெடுத்தன. உடனே ஸப்இன்பெக்டர், "இதோ அவன் வாக்குமூலம் கொடுத்திருக்கிருன் பார்!" என்று அதை முழுதும் படித்தார்.

மூர்த்திக்கு உடம்பு நடுங்கியது. "சார்! நான் பாம்பு வாங்கியது உண்மை! ஆனால் பத்மா கொலை செய்யப்பட்டதைப் பற்றி எதுவுமே தெரியாது சார்!" என்றான்.

"பிறகு ஏன் பாம்பு வாங்கினாய்?"

"கோபு என்னிடம் சொல்லி பாம்பு வாங்கி வரச்சொன்னான். யாரோ, மிருகநூல் (zoology) ஆராய்ச்சியாளர் ஒருவர் கேட்டதாகக் கூறினான். நான் வாங்கி வந்து கொடுத்தேன். அந்த ஆராய்ச்சியாளர் ஆராய்ச்சியை முடித்துவிட்டதாகக் கூறி என்னிடம் பாம்புகளைக் கோபு திருப்பிக்கொடுத்தான். அவற்றை நான் பாம்பாட்டியிடம் கொண்டுபோய்க் கொடுத்து விட்டேன். அவ்வளவுதான் சார், எனக்குத் தெரியும்! என்னை விட்டு விடுங்கள் சார்! நான் கௌரவமானவன். கொலை களவு முதலிய எந்த பஞ்சமா பாதகத்துக்கும் நான் போக மாட்டேன். எனக்குத் தெரியாது !" என்று கெஞ்சினான்.

"ஆனால் ஒரு பாதகம் மட்டும் நன்றாகச் செய்யத் தெரியுமோ?" என்றார் ஸப்இன்ஸ்பெக்டர்.

"என்ன பாதகம் சார் !" என்று பயத்தோடு மூர்த்தி கேட்டான்.

"பொய் சொல்வது!...இப்பொழுது நீ சொன்னதெல்லாம் பொய்!" என்றார் ஸப்-இன்பெக்டர்.

"சத்தியமாக உண்மை சார்!" என்று சாதித்தான் மூர்த்தி.

"ஓஹோ!" என்று ஆத்திரமாகக் கூறிவிட்டு ஸப்இன்ஸ்பெக்டர் கொஞ்ச நேரம் யோசனையில் ஆழ்ந்தார். மூர்த்தி 'பயங்கொள்ளி' என்பது அவருக்கு நிச்சயமாகத் தெரிந்தது. அதோடு அவன் இப்பொழுது சொல்வதெல்லாம் வடிகட்டிய புளுகு என்பதும் அவருக்குத் தெரிந்தது. அவனுக்குச் சரியானபடி பயங்காட்டினால், உண்மையைச் சொல்லி விடுவான் என்று நினைத்தார். எப்படிப் பயங்காட்டுவது ?

சட்டென்று ஸப்இன்ஸ்பெக்டருக்கு ஒரு யோசனை தோன்றியது. "மூர்த்தி! நீ சொல்வது பொய் என்று நான் சொல்லவில்லை..." என்று இழுத்தார். "ஆமாம்...சார்! ஆமாம் சார்!" என்று ஆவலாகக் கூறினான் மூர்த்தி. ஸப்இன்ஸ்பெக்டர் இலேசாகப் புன்னகையோடு, "உனக்குக் கொஞ்சம் ஞாபகமறதி என்று எனக்குச் சந்தேகம். ஒரு இடத்திற்கு நாம் இப்பொழுது போகலாம். அங்கிருந்து யோசனை செய்து பார். ஏதேனும் நினைவு வந்தால் சொல்!" என்றார்.

"எங்கு வேண்டுமானாலும் வருகிறேன் சார் ! நிரபராதிக்கு என்ன பயம் !" என்று ஜம்பமாகக் கூறினான் மூர்த்தி. ஸப்-

இன்ஸ்பெக்டர் 'ஜீப்' காரைக் கொண்டு வரச் சொல்லி, அந்தக் காரில் மூர்த்தியை ஏற்றிக் கொண்டு, ராஜூவையும் ஏறும்படி கூறினார். மற்றும் சில போலீஸ்காரர்களும் ஏறிக் கொண்டதும் 'ஜீப்' கார் கோபுவின் பங்களாவுக்கு விர்ரென்று பாய்ந்து சென்றது. அப்பொழுது நன்றாக இருட்டி விட்ட நேரமானதால், வெறிச் சோடிக் கிடந்த பங்களாவும், அங்கே ஒரு கொலை நடந்தது என்ற எண்ணமும் அதைப் பயங்கரமாகக் காட்டியது.

பங்களாத் தோட்டத்தில் அடி எடுத்து வைத்ததுமே, மூர்த்தியின் நடுக்கம் அதிகமாக மாறியது. பங்களாவின் உள் நுழைந்ததும் ஒரு புகைப் படத்தை எடுத்து ஸப்-இன்ஸ்பெக்டர் மூர்த்தியிடம் காண்பித்து, "இதுதான் பத்மா ?" என்றார். மூர்த்தி தன் வசமிழந்து "ஆமா......ம்" என்று உளறினன். புகைப் படத்தில் இருந்த பத்மாவின் முகம் சவக் களையுடன் புன்முறுவல் பூப்பது போலிருந்தது. மூர்த்திக்கு என்னென்னவோ மனப் பிரமைகளால் சர்வாங்கமும் கிடுகிடுவென நடுங்கின.

அவனை நேராக, பத்மா இறந்து கிடந்த தண்ணீர்த் தொட்டியருகே அழைத்துக் கொண்டு போனார் ஸப்-இன்ஸ்பெக்டர். மூர்த்தி சிறிது தூரத்திலேயே நின்று கொண்டான். ஸப்-இன்ஸ்பெக்டர் அவன் கையைப் பிடித்து இழுத்து; முன்பு பத்மாவின் சவம் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் நிறுத்தினார். அவன் கால்கள் 'வெட வெட'வென்று நடுங்கின. மூர்த்தியின் கால்கள் நடுக்கத்தால் அந்த இடத்தில் நிலைபாவவில்லை. அங்கு இன்னும் பத்மாவின் பிரேதம் அழுகல் நாற்றத்துடன் பேய் ரூபமாகப் படுத்துக் கிடப்பது போலவும், அதை மொய்த்துக் கொண்டிருக்கும் ஈக்கள் அவனை நோக்கிப் படையெடுப்பது போலவும் பயங்கரப் பிரமைகள் உண்டாயின.

"இப்பொழுது யோசித்துப் பார், மூர்த்தி !" என்றார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"வேறு ஒன்றும் எனக்குத் தெரியாது ஸார் ! நான் சொன்னது தான் உண்மை !" என்று அழாக் குறையாகக் கூறினன்.

சட்டென்று ஸப்-இன்ஸ்பெக்டர் அவன் பிடரியைப் பிடித்து தண்ணீர்த்தொட்டிக்குள் அமுக்கிவிடுவதைப்போல, தண்ணீரின் அருகாமையில் அவன் தலையை அமுக்கிப் பிடித்துக் கொண்டு "உன்னை பார் ! இறந்துபோன பத்மாவின் ஆவியைப் பார் ! அவளை நீ இப்படி அமுக்கிக் கொன்றாயா ? கோபு கொன்றானா ? நினைவுபடுத்திச் சொல்லு !" என்று கடுமையாகக் கேட்டார்.

"நான் செய்யவில்லை சார். நான் அவளைக் கொல்லவில்லை சார் !" என்று கூச்சலிட்டான் மூர்த்தி. அவன் உடல் இன்னும் அதிகமாக நடுங்கியது.

தண்ணீர் தொட்டிக்குள்ளிருந்து பத்மாவின் பிரேதம் பயங்கர விழிகளுடன் எழுந்து வருவது போலவும், மூர்த்தியின் முகத்தில் பிறாண்டி விரல் நகங்களைப் பயங்கரமாய் நீட்டுவது போலவும், அந்தப் பயங்கரமான இடமெங்கும், "ஹா...ஹா...ஹா...!" என்ற பேய்ச் சிரிப்புக்கள் அதிர்வது போலவும் என்னவோ ஒரு பயப் பிராந்தி உணர்ச்சி மூர்த்தியின் நெஞ்சுக் குறுத்துக்குள் ஜில்லிட்டது.

"சார்! சார்! என்னால் இங்கே நிற்க முடியவில்லை! என்னை விட்டு விடுங்கள்!" என்று மேலும் கத்தினான்.

"நீ சொன்னால்தான் விடுவேன்!" என்றார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

மூர்த்தியின் உடல் கிடுகிடுவென நடுங்கியது. தண்ணீர் தொட்டிக்குள் பயங்கரமாக பத்மாவின் முகம் கொக்கரிப்பதைப் போலிருந்தது. அவளது ஆவி பழி வாங்குவதற்காக அவன் முகத்தை நெருங்கி வருவதைப் போலிருந்தது.

"விடுங்கள் சார் என்னை!" என்று துள்ளினான் மூர்த்தி.

ஸப்-இன்ஸ்பெக்டர் விடும் வழியாக இல்லை. அவர் பிடி இரும்புப் பிடியாக இருந்தது.

மூர்த்தியால் அந்தத் தொட்டிக்குள் பார்க்க முடியவில்லை! அவன் முகமெல்லாம் வியர்த்துக் கொட்டியது! மார்பு ரொம்ப வேகமாக அடித்துக்கொண்டது! கொஞ்சநேரம் அப்படியே இருந்தால் இருதயம் வெடித்து விடும் போல இருந்தது. உயிருக்குப் போராடும் மிருகத்தைப் போல ஒரு முரட்டு வேகத்தோடு உந்திச் சிறிது தூரத்தில் போய் விழுந்தான் மூர்த்தி.

ஸப்-இன்ஸ்பெக்டர் மீண்டும் அவனைப் போய்ப்பிடித்து, "வா, தொட்டி அருகில்! நிரபராதிக்கு என்ன பயம்?" என்று இழுத்தார்.

"வேண்டாம் சார்! நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன்! இங்கேயே சொல்லி விடுகிறேன்! என்னால் தொட்டி அருகே வரமுடியாது!" என்று கதறினான். ஸப்-இன்ஸ்பெக்டர் "சரி! சொல்லு!" என்றார்.

மூர்த்தி சொல்ல ஆரம்பித்தான்.



## 11. கொலை நடந்தபோது...?

மூர்த்தி, அந்தப் பயங்கர நிகழ்ச்சிகளைச் சொல்லச் சொல்ல ஸப்இன்ஸ்பெக்டா, சுருக்கெழுத்தில் குறிப்புகள் எழுதிக் கொண்டே வந்தார். மூர்த்தியின் குரல் நடுங்கியது. சொல்லும் பொழுதே விழிகள் மிரட்சியோடு தோன்றின. அவன் சொன்னதாவது:

"சுமார் ஒரு மாதத்திற்கு முன் எனக்கு ரொம்பவும் பண நெருக்கடி ஏற்பட்டது. கோபுவை அவனது ஆபீஸில் போய்ப் பார்த்து, நூறு ரூபாய் கடன் கேட்டேன்...

"அவன் என்னைத் தனியாக ஓர் இடத்திற்கு அழைத்துக் கொண்டு போனான். 'எதற்காக நீ இப்படி கடன் வாங்கிக்கொண்டு திரிகிறாய். உனக்கு ஒரு சுலபமான வேலைக்கு, இருநூறு ரூபாய் வாங்கித் தருகிறேன்!' என்றான். நான், 'அது என்ன வேலை?' என்று கேட்டேன்...

"அதற்குக் கோபு, 'என் நண்பர் ஒருவருக்கு உயிரோடு இரண்டு 'கட்டு விரியன்' பாம்பு வேண்டுமாம். அதைக் கொண்டு வந்து கொடுத்தால் இருநூறு ரூபாய் தருகிறேன் என்கிறார். நீ எங்காவது எவனையாவது பிடித்து ஏற்பாடு செய்து இரண்டு பாம்புகள் கொண்டு வா. உனக்கு, சினிமா லயனில் வரும் பாம் பாட்டிகளைத் தெரிந்திருக்குமே. அவர்கள் மூலம் நீ சுலபமாகப் பாம்பைக் கொண்டு வரச் செய்யலாமே' என்று அக்கறையோடு கூறினான்.

"வாஸ்தவத்தில் எனக்கு ஒரு பாம்பாட்டியைத் தெரியும். அவனிடம் பத்தோ, பதினைந்தோ கொடுத்து இரண்டு பாம்புகளைக் கொண்டுவரச் சொல்லி விடலாம். அதற்கு இருநூறு ரூபாய் கிடைப்பதென்றால் பெரிய லாபம்! அதுவும் இப்பொழுது நம் சினிமாத் தொழில் அடியோடு படுத்துப் போயிருக்கும் சமயத்தில் இது நல்ல வருமானம் என்று எண்ணினேன். "என்ன யோசிக்கிறாய் ?" என்று கேட்டான் கோபு.

"ஒன்றுமில்லை ; சரி!' என்று ஒப்புக் கொண்டேன். உடனே கோபு ஆறு ஐந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து என்னிடம் கொடுத்தான். 'இதில் பத்து ரூபாய்க்கு, ஒரு கண்ணாடிப்பெட்டி தயார் செய்துகொள். மேல்பக்கம் 'உருவு பலகை'வைத்துத் திறப்பது போலச் செய்யச் சொல். வாய்ப் பக்கம் ஒரு அடி அகலமும் ஒன்றறை அடிக்குமேல் நீளமும் இருக்க வேண்டும். பாக்கி ரூபாயை அட்வான்ஸாக வைத்துக்கொள்!' என்று கூறினான். நான் 'சரி'யென்று புறப்பட்டேன்...

"எனக்குத் தெரிந்த பாம்பாட்டியிடம் போய் பாம்புக்கு சொல்லி'வைத்துவிட்டு, ஒரு தச்சுப் பட்டறையில் கண்ணாடிப்பெட்டி செய்தேன். பிறகு அதை எடுத்துக்கொண்டு போய் வீட்டில் வைத்திருந்தேன். அன்றுமாலை பாம்பாட்டி வந்தான். பாம்புகள் தயாராக இருப்பதாகவும், பெட்டியைக் கொடுக்கும்படியும் கேட்டான். நான் பெட்டியைக் கொடுத்தேன்...

"அரைமணி நேரங்கழித்து பாம்பாட்டி அதில் இரண்டு கட்டு விரியன் பாம்புகளைப் போட்டு எடுத்து வந்தான். நான் அவனுக்கு இருபது ரூபாய் கொடுத்துவிட்டு அந்தப் பாம்புகளை காரில் வைத்துக்கொண்டு, கோபுவின் ஆபிஸிற்குப் போனேன். அவன் பெட்டியை வாங்கிக்கொண்டு, 'ஸீதா ஸீதா!' எனக் கூப்பிட்டான். அவனது டைபிஸ்டான ஸீதா வந்தாள். 'அந்தக் கூண்டை இங்கே எடுத்து வா!' என்று கூறிவிட்டு, வாசற் கதவைத் தாளிட்டான்.

"ஸீதா ஒரு கூண்டை எடுத்து வந்தாள். அதில் ஒரு முயலும் அதன் குட்டிகள் இரண்டும் இருந்தன. பாம்புப் பெட்டியை

மேஜைமேல் வைத்துவிட்டு கோபு கூண்டைத் திறந்து ஒரு முயல் குட்டியைக் கையில் பிடித்துக்கொண்டான். பிறகு கூண்டை மூடி விட்டு என் பக்கம் திரும்பி, இந்த முயலை அக் கூண்டிற்குள் போடு வேன். இந்தப் பாம்புகள் இதைக் கடித்துக் கொன்று விட்டால் இந்தப் பாம்புகளை எடுத்துக் கொள்வேன். இல்லாவிட்டால் வேறு பாம்புகள்தான் வாங்கிவர வேண்டும்!' என்றான். நான் 'அது நியாயந்தானே!' என்று ஒப்புக்கொண்டேன்.

"பாம்புப்பெட்டியின் மேல் மூடியை இலேசாக நகர்த்தித் திறந்துகொண்டு, முயலைத் 'தொங்'பென்று உள்ளே போட்டுக் கதவை மூடினான் கோபு. எனக்கு மயிர்க் காம்புகளெல்லாம் சிலிர்த்தன. இந்தக் கொடூரக் காட்சியைப் பார்க்கக் கூடாதென்று கண்களை மூடிக்கொண்டேன்.

சில நிமிஷங்கள் கழிந்தன. நான் கண்களைத் திறக்கவே இல்லை. கோபு என் தலையில் 'பட்'டென்று தட்டி, "பாரடா உன் பாம்பின் வீரத்தை!" என்று காட்டினான். நான் மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தேன். என்ன ஆச்சரியம்! பாம்புகள் இரண்டும் பழுதைக் கயிறு போல அசையாமல் கிடந்தன. அவற் றின் மீது முயல் குட்டி துள்ளி விளையாடியது.

கோபுவுக்கு ஆத்திரமாக வந்தது. 'எங்கிருந்தடா இந்த ஜாக்குப் பூச்சிகளைக் கொண்டு வந்தாய்?' என்று சீறினான். நான் சமாளித்துக்கொண்டு எல்லாம் தெரிந்தவன்போல, "அவைகளுக்கு கோபம் வரவில்லை போலிருக்கிறது" என்று சரடு விட்டேன். 'அதையும் செய்து பார்த்து விடுவோமே!' என்று கூறிக்கொண்டே கோபு ஒரு பென்ஸிலை எடுத்து, அந்தப் பாம்புகள் மீது பல இடங் களில் குத்தினான். கோபத்தோடு சீறிக் கிளம்புவதற்குப் பதிலாக, அந்தப் பாம்புகள் 'மரவட்டை'ப் புழுவைப்போல, சுருட் டிக் கொண்டன! ஆத்திரமாக கோபு பாம்புப் பெட்டிக்குள் கையை விட்டு, முயல் குட்டியை வெளியே எடுத்துக் கொண்டான். பிறகு 'படார்' என்று மேல் மூடியைச் சாத்தினான், 'இதைக் கொண்டு போய் எறிந்துவிட்டு வேறு பாம்பு வாங்கி வா!' என்றான். வேறு வழியில்லாததால், நானும் 'சரி'யென்று ஒப்புக்கொண்டு கிளம்பி னேன்.

மறுபடியும் பாம்பாட்டியைச் சந்தித்து, என் ஆத்திர மெல்லாவற்றையும் அவனிடம் காட்டினேன். பாம்பாட்டி ரொம் பவும் மன்னிக்கும்படி கெஞ்சிவிட்டு, கொடூரமான பாம்புகளாக இரண்டைக் கொண்டு வருவதாகக் கூறிப் புறப்பட்டான். மறுபடி யும் கோபுவைப் போய்ச் சந்தித்து அன்று இரவே நான் வேறு பாம்புகளோடு வருவதாகவும், எனக்காகக் காத்திருக்கும்படியும் கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

அன்று இரவு எட்டு மணிக்குத்தான் பாம்பாட்டி இரண்டு கட்டு விரியன் பாம்புகளைக் கொண்டு வந்தான். அவற்றைக் காரில் வைத்துக் கொண்டு புறப்பட்டேன். கோபு எனக்காக ஆபீஸில் காத்திருக்கவில்லை. ஆபீஸ் கதவு மூடி இருந்தது. நேராக கோபுவின் பங்களாவிற்குக் காரை ஓட்டிக் கொண்டு போனேன். பங்களா வெளி வராந்தாச் சாய்மான நாற்காலியில் கோபு தனியாக உட்கார்ந்திருந்தான். அவன் மனைவியும் ஸீதாவும் ஏதோ ஸினிமாவுக்குப் போயிருப்பதாகத் தெரிந்து கொண்டேன்.

கோபுவும் நானும் தோட்டத்துப் பக்கம் போனோம். அங்கே ஒரு இடத்தில் சமையலறை வெளிச்சம் ஜன்னல் வெளியாக விழுந்து கொண்டிருந்தது. நேற்று ஆபீஸில் நான் பார்த்த முயல் கூண்டை, காரின் 'டிரங்' கிலிருந்து கோபு எடுத்து வந்தான். அதில் பெரிய முயல் ஒன்று மட்டுந்தான் இருந்தது.

"நேற்றுப் போலவே கோபு அந்த முயலைத் தூக்கி, பெட்டிக்குள் போட்டு மூடியைச் சாத்தினான். முயல் உள்ளே விழுந்ததும் இரண்டு பாம்புகளும் கோபாவேசமாகச் சீறி அதைப் பாய்ந்து கடித்தன. என் உடல் சிலிர்த்தது. கோபு அவசரமாக உள்ளே ஓடி ஒரு 'கொறடு' எடுத்து வந்தான். மெதுவாக அதைப் பெட்டிக்குள் விட்டு, அந்த முயலைப் பிடித்து வெளியே இழுத்தான். இதற்குள் பாம்புகள் அதில் பாதியைச் சாப்பிட்டு விட்டன! மெதுவாக செத்துப் போன முயலை வெளியே இழுத்த கோபு, 'இந்தப் பாம்புகளுக்கு இப்பொழுது ஆகாரம் போடக் கூடாது! அவைகளுக்கு 'ரோஷம்' போய்விடும்" என்று கூறிக்கொண்டே, அந்த முயலை ஒரு புதர்ப்பக்கம் வீசி எறிந்தான். பிறகு பாம்புப் பெட்டியில் கொஞ்சம்கூட இடுக்கு இல்லாதபடி ஜாக்கிரதையாக மூடினான். மூடிமேல், பாம்புக்கு மூச்சுக்காற்று விடுவதற்காக வைக்கப்பட்டிருந்த மூன்று ஓட்டைகள், ஒன்றைத் தவிர, மற்ற எல்லாவற்றையும் அடைத்து விட்டான்.

"இந்த வேலைகளெல்லாம் முடிந்ததும், கோபு என்னிடம் நூற்று எண்பது ரூபாய் கொடுத்தான். அதை நான் வாங்கிக் கொண்டதும், 'மூர்த்தி! இந்தப் பாம்புகள் எதற்கென்று புரிகிறதா?' என்று கேட்டான். ஓரளவு புரிகிறது!' என்று கூறினேன். "பூரா விவரமும் உனக்கு நாளைக்குப் புரியும்! நீ மட்டும் என்னோடு இந்த வேலையில் ஒத்துழைத்தால் உனக்கு ஐயாயிரம் ரூபாய் தருகிறேன்!' என்றான். 'ஐயாயிரம்', என்றதும் எனக்கு பிரமை தட்டிப் போய் விட்டது. 'என்ன செய்ய வேண்டும்? சொல்! செய்கிறேன்!' என்று பதறினேன்.

"கோபு இலேசாகச் சிரித்தான். 'ஒன்றும் பிரமாத மில்லை! இந்தப் பாம்புகளை நீ எடுத்துக்கொண்டு போய் இன்று இரவு உன் வீட்டில் வைத்துக்கொள். நாளை விடிய சாம இருட்டில் சரியாக நாலரை மணிக்கு அவற்றை இங்கே எடுத்து வா. அதற்குமேல், மேற்கொண்டு பேசிக் கொள்ளலாம்' என்றான்.

"நான் சந்தோஷத்தோடு பாம்புகளை என் இருப்பிடத்திற்கு எடுத்துக்கொண்டு போனேன். விடியற் சாமத்தில் சரியாக நாலு மணிக்கே அவற்றைத் திரும்பவும் காரில் எடுத்து வைத்துக் கொண்டு கோபுவின் பங்களாவிற்குச் சென்றேன். 'காம்பவுண்டு'க்குள் நுழைந்ததும் 'ஹார்ன்' அடித்தேன். கோபு கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

"காரிலிருந்து நான் இறங்கினேன். 'அவற்றைக் கொண்டு வந்திருக்கிறாயா ?' என்று கேட்டான். 'ஆம்!' என்றேன். 'எடுத்துக்கொண்டு வா!' என்று கூறிவிட்டு உள்ளே நுழைந்தான். அவன் முகத்தில் ஒரு கோர வெறி தாண்டவ மாடியது. நான் பாம்புப் பெட்டியை எடுத்துக் கொண்டு ஹாலில் நுழைந்தேன். அவன் வெளிக் கதவைச் சாத்தித் தாளிட்டான்.

"இருவரும் உள்ளே சமையலறைக்கு அடுத்த சாப்பாட்டுக் கூடத்திற்குச் சென்றோம். உள்ளே நுழையுமுன் கோபு என்னை நிறுத்தி என் காதருகில் ரகசியமாக் 'இதை நாம் இருவரும் சேர்ந்தே செய்கிறோம். உனக்கு ஐயாயிரம் ரூபாய் கிடைக்கிறது! உன் தரித்திரம் தீர்ந்து விடும்! வா,' என்று என் பதிலுக்கு எதிர் பாராமல் உள்ளே நுழைந்தான். என்ன நடக்கப் போகிறதென்று புரியாமல் நானும் உள் நுழைந்தேன். என் மனம் பீதியால் அலறிக் கொண்டிருந்தது.

"உள்ளே நான் கண்ட காட்சி என்னை நடுநடுங்கச் செய்தது. சாப்பாட்டுக் கூடத்தில் போடப்' பட்டிருந்த நீளமான சாப்பாட்டு மேஜையின்மேல் அவனுடைய மனைவி பத்மாவை 'மல்லாக்க' படுக்க வைத்து முரட்டுக் கயிற்றால் கட்டப் பட்டிருந்தது. அவள் கண்களுக்கு ஒரு கைக் குட்டையால் மறைப்புக் கட்டிஇருந்தது. கூச்சலிட முடியாமல் அவள்வாயில் ஒரு துணிப் பந்து அடைக்கப் பட்டிருந்தது. அவள் கைகள் இரண்டும் தலைப்பக்கமாக உள்ள மேஜைக் காலில் இழுத்துக் கட்டப் பட்டிருந்தது. கால்கள் மேஜையின் ஒரு பக்கமாக தொங்கவிடப் பட்டிருந்தன. அவளது முழங்கால் மேல் வரை சேலை சுருக்கி மேலே செறுகப் பட்டிருந்தது. பத்மா இப்படியும் அப்படியும் முண்டிப் பார்த்தாள். அவளால் எதுவும் செய்ய முடியவில்லை. வாயில் துணிப்பந்து அடைக்கப்பட்டிருந்ததால் கூச்சலிடவும் முடியவில்லை.

கோபு என் கையிலிருந்த பெட்டியை வாங்கி அவள் கால் பக்கம் வைத்தான். ஒரு சிறு குச்சியை எடுத்து, அந்தப் பெட்டியின் மேல் மூடியை இலேசாகத் திறந்து அக் குச்சியால் உள்ளே குத்தினன். பாம்புகள் இரண்டும் ஆவேசம் வந்தவைகளைப் போலச் சீறிக் குதித்தன. இதைச் செய்யும்பொழுது அவன் பத்மாவைத் திட்டிக் கொண்டே இருந்தான். 'உனக்குத் தான் கர்ப்பமாக இருப்பதைச் சமாளிக்க முடியவில்லை. சதா அவதிப் படுகிருய். இந்தப் பாம்பு விஷம் கர்ப்பத்தைக் கலைத்து, உன் கஷ்டத்தை யெல்லாம் போக்கிவிடும்! சும்மா இரு!' என்று சீறினன். பத்மா பலங்கொண்ட மட்டும் முரண்டிப் பார்த்தாள். ஆனல் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

"அதன் பிறகு கோபு பெட்டியை அவள் காலருகில் நகர்த்தினன். என் ரத்தம் உறைந்து விடுவதைப் போலிருந்தது. உடம்பெல்லாம் மழையில் நனைந்தது போல் வியர்த்துக் கொட்டியது. பேச நாவெழவில்லை. கோபு மெதுவாக மூடியைத் திறந்தபடி அவள் கால்களில் ஒன்றை இழுத்து அப்பெட்டிக்குள் திணித்தான். அளவு கடந்த பயத்தால் நான் கண்களை மூடிக்கொண்டேன். பத்மா பயங்கரமாக ஒரு முனகு முனகுவது கேட்டது. மேஜையிலிருந்து விடுதலைபெற அவள் போராடியதால், மேஜை ஆட்டங் கண்டு 'கிரீச்' 'கிரீச்' என்று அசைவதும் கேட்டது. நான் பயத்தால் கண்களைக்கூடத் திறக்கவில்லை.

"கோபு 'டக்' கென்று பாம்புப் பெட்டியை மூடும் சப்தம் கேட்டது. மெதுவாகக் கண்திறந்தேன். கோபு பெட்டியை என்னிடம் 'நீட்டி இதைக்கொண்டு போய்த்தொலைத்துத்தலை முழுகிவிடு' என்று கூறினன். நான் நடுங்கிய கைகளில் அதை வாங்கிக் கொண்டு விரு விரு என்று என் காருக்கு வந்தேன். காரில் ஏறி உட்கார்ந்ததும், அந்தப் பாம்புகளை என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை. பாம்பாட்டியிடமே கொண்டுபோய் எறிந்து விடுவதே மேல் என்று பட்டது. உடனே காரைக் கோடம்பாக்கம் பக்கமாக விட்டேன். பாம்பாட்டி வீட்டை நெருங்க நெருங்க எனக்கு இன்னெரு யோசனையும் தோன்றியது.

"பாம்பாட்டி தன் வீட்டில் கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பதாகக் கேள்விப் பட்டிருந்தேன். புதுச்சேரிப் பக்கத்திலிருந்து பிராந்திப் பாட்டில்களும் அவன் வீட்டில் ஒளித்து வைக்கப்பட்டு விற்பனையாவதாக என் தோழர்கள் சிலர் சொல்லி இருந்தார்கள். எனக்கு அப்பொழுதிருந்த மனக் கலவரம் சொல்லி முடியாது. நடந்த விஷயங்களெல்லாம் பயங்கரமான உருவில் தோன்றி என்னை வதைத்தன. அந்த நினைவுகளைச் சிறிது நேரம் மறந்து நிம்மதி

யாக இல்லாவிட்டால், பைத்தியம் பிடித்து விடுமோ என்று பயந்தேன். ஆகவே, அந்த நினைவுகளை மறப்பதற்கு என் மனச்சாட்சியை அடியோடு அடக்கிப் புதைத்து விடுவதற்குக் கள் குடிப்பதுதான் வழி என்று தீர்மானித்து, பாம்பாட்டியிடம் பாம்புகளைத் திருப்பிக்கொடுத்து, அவற்றின் சரிபாதி விலையான பத்து ரூபாய்க்கு ஒரு பாட்டிலை வாங்கிக்கொண்டு நேராகத் தாம்பரத்திற்குக் காரை விட்டேன்.

"தாம்பரத்தை நெருங்கியதும், டிரங்க் ரோடைவிட்டு ஒரு கிளை ரோட்டில் காரைத் திருப்பி ஒரு மலைச்சாரல் மறைவிலே காரை நிறுத்தினேன். அந்த மறைவிலே பகல் பூராவும் கார்ல் சாய்ந்தபடி ஒரு பாட்டில் மதுவையும் குடித்துத் தீர்த்தேன். மாலையின் 'ஜிலு ஜிலுப்பான' காற்றில் என் போதை இலேசாகத் தெளிய ஆரம்பித்தது. போதை தெளியத் தெளிய, என் நினைவுகள் புத்துயிர் பெற்றன. மறுபடியும் கலவரம் வந்து சூழ்ந்து கொண்டது. இதற்கு என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் ஒரு அல்ப சமாதானம் மாத்திரம் என் மனதில் தோன்றி, என் கலவரத்தை மாற்ற முயன்றது. பத்மாவுக்கு இந்தப் பாம்பின் கடியால் மரணம் ஏற்பட்டிருக்காது. அப்படி ஏற்படா விட்டால் நாம் ஏன் இவ்வளவு கலவரப்படவேண்டும் என்று நினைத்தேன். ஆனால் அவள் மரண மடைந்திருந்தால்...?...? அதை எண்ணியதும் என் நெஞ்சு அலறியது. எதற்கும் நேரில் போய் கோபுவைப் பார்த்து சந்தேகத்தைத் தீர்த்துக் கொண்டால் கொஞ்சம் நிம்மதியாக இருக்கும் என்று தோன்றியது. காரைத் திருப்பி சென்னையை நோக்கி வேகமாக விட்டேன். 'கடவுளே, அவள் மரணம் அடைந்திருக்கக் கூடாது. அடைந்திருக்கக் கூடாது' என்று மனம் தவியாய்த் தவித்தது.

"பல்லாவரத்தின் அருகில் வரும்பொழுது, கார் டயரில் லாடம் அடித்து 'பஞ்சராகி' விட்டது. மாற்றுச் சக்கரம் இல்லாததால், 'பஞ்சர்' ஒட்டவேண்டி நேர்ந்துவிட்டது. தேவையான சாமான்களை, ரோடில் போவோர் வருவோரிடம் கெஞ்சிக் கூத்தாடி வாங்கி, 'பஞ்சர்' ஒட்டிக்கொண்டு நான் கிளம்ப இரவு மணி 11-30 ஆகிவிட்டது. கோபுவின் பங்களாக் காம்பவுண்டில் நான் நுழைந்த போது கடிகாரத்தைப் பார்த்தேன். சரியாக இரவு 12-5 ஆகி இருந்தது!

"கார், காம்பவுண்டில் நுழைந்த சத்தம் கேட்டதும் எனக்காகக் காத்திருந்தவன் போல, கோபு வெளியே கதவைத் திறந்துகொண்டு வந்தான், எனக்கு காரைவிட்டு இறங்கவே பயமாக இருந்தது. இதற்குள் கோபுவே என் கார் அருகில் வந்துவிட்டான். என் காதருகில் ரகசியமாக 'மூர்த்தி! அந்தப் பாம்பின் கடியால் பத்மா இன்னும்

இறக்கவில்லை. வேதனை தாங்காமல் கத்திக்கொண்டு கிடக்கிறாள். ஆனால் நல்ல வேளையாக நான் ஒரு வேலைசெய்து வைத்திருக்கிறேன். அவள் கைப்பட ஒரு கடிதம் எழுதச் செய்திருக்கிறேன். அதைப் போலீஸார் பார்த்தால், ஏதோ யதேச்சையாக அவளைப் பாம்பு கடித்ததாகவே நினைப்பார்கள். அதிலிருந்து நாம் தப்பித்து விட்டோம்!...ஆனால் அவளைத் தீர்த்துவிடவேண்டும்!...சரி; நீ இங்கேயே இரு; அவளை ஸ்நான அறையிலுள்ள தண்ணீர் தொட்டிக்குள் தலையை அமுக்கித் தீர்த்து விடுகிறேன்! பிறகு மேற்கொண்டு திட்டம் போடலாம்!' என்று வேகமாக (ஆனால் மிகவும் ரகசியமாக) விடாமல் பேசிவிட்டு, என்பதிலைக்கூட எதிர்பாராமல் 'சரே' லென்று வீட்டுக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

"எனக்கு அந்த இடத்திலிருந்து தப்பித்து ஓடிவிட வேண்டுமென்று துடிப்பாய் இருந்தது. ஆனால், அளவுகடந்த பீதியால் என் கைகால்கள் செயலற்றுப் போய்விட்டன. என்னால் எதுவுமே செய்ய முடியவில்லை. கோபு ஒரு மனிதப் பிறவியா; அல்லது ஒரு ரத்தப் பேயா என்று நினைத்ததும் என் ரத்தமே உறைந்துவிடும் போலிருந்தது. என் இஷ்ட தெய்வங்களை யெல்லாம் ஜபித்துக் கொண்டேன். பகல் முழுவதும் ஆகாரமில்லாமல் போதையில் கிடந்து களைத்துப் போயிருந்த என் உடம்பு இப்பொழுது நகரக்கூட முடியாமல் தத்தளித்தது. தலையில் ஏதோ பெரிய பாரத்தை வைத்து அழுத்துவது போலிருந்தது. அப்படியே கண்களை இறுக மூடிக்கொண்டு "ஸீட்"டில் சாய்ந்து விட்டேன்.

"எவ்வளவு நேரம் அந்த நிலையில் சாய்ந்து கிடந்தேனென்று எனக்கே தெரியாது. கோபு என்னைத்தட்டி எழுப்பினான். திடுக்கிட்டு எழுந்தேன். 'இறங்கி வா!' என்று கூறிவிட்டு மேலே நடந்தான். மந்திரவாதியைப் பின்தொடரும் குட்டிச் சாத்தனைப்போல, செயலற்று, கோபு பின்னால் வீட்டுக்குள் நுழைந்தேன். கோபு முன் கதவைத் தாளிட்டபடி, 'தண்ணீரில் அமுக்கித் தீர்த்துவிட்டேன்! அவளைத் தூக்கிக்கொண்டு போய் தோட்டத்திலிருக்கும் தண்ணீர் தொட்டிக்குள் தலையை அமுக்கிப் போட்டுவிடலாம். அவளுக்கு அடிக்கடி வாந்தியும் மயக்கமும் வருமென்று என் குடும்ப டாக்டருக்குத் தெரியும். அப்படி மயக்கம் வந்து விழுந்து விட்டாளென எல்லோரும் நினைத்துக் கொள்வார்கள்! வா' என்று என் கையைப் பிடித்துப் 'பரபர' வென்று ஸ்நான அறைக்கு இழுத்துச் சென்றான்.

"சுய நினைவே அற்றுப்போன நிலையில் நான் அவனுக்கு உதவியாக, பத்மாவின் பிணத்தைத் தூக்கிக்கொண்டு, இதோ இந்தத் தோட்டத்துக்கு வந்தேன். அவன்தான் பத்மாவின் தலையைத் தண்ணீரில் அமுக்கினான். அந்தச் சமயத்தில் ஒரு ஆந்தை பயங்கரமாக

அலறியது. என் உடல் 'கிடுகிடு' வென நடுங்கியது. வாய்விட்டு அலறியதாக என் நினைவு. ஆனல் அந்த அலறல் தொண்டைக் குள்ளேயே மக்கி மடிந்துவிட்டது. அந்தச் சப்தம் என் காதில் கூட விழவில்லை! அவ்வளவு பயம்!

"இதற்குள் கோபு என்னை மீண்டும் அழைத்துவந்து வெளியே என் காரில் ஏற்றிவிட்டான். 'உன் உதவிக்கு நன்றி!' என்று என் கைகளைப் பற்றிக் குலுக்கினன். எனக்கு ஒன்றும் பேசவே முடிய வில்லை. 'சர்' ரென்று காரைத்திருப்பிக் கொண்டு வீட்டிற்குப் போனேன். அன்று இரவு முழுவதும் தூங்க முடியவில்லை. வீடு முழுவதும் எலக்ட்ரிக் விளக்கைப் போட்டுக்கொண்டு, ஒரு சோபா வில் நடுங்கியபடி உட்கார்ந்திருந்தேன். பொழுது விடிந்ததும், இனி சென்னையில் ஒருநாள் தங்கி இருந்தாலும் பைத்தியம் பிடித்துவிடும் என நினைத்துப் பெங்களூருக்குப் போய், ஒரு வாரம் தங்கிவிட்டு சென்னை திரும்பினேன். அதன் பிறகு தான் என்னல் கொஞ்சம் தைரியமாக இங்கே இருக்க முடிந்தது. இதுதான் நடந்த விஷயம்!" என்று மூர்த்தி கூறி முடித்தான். முடிக்கும்போது அவன் உடல் 'கிடுகிடு' வென நடுங்கியது.

இந்த வரலாற்றைக் கேட்டுக்கொண்டிருந்த ராஜுவின் கண் களிலிருந்து கண்ணீர் 'மள-மள' வெனக் கொட்டியது. ஸப்-இன்ஸ்பெக்டர் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். சிறிது நேரம் அங்கு அமைதி நிலவியது.

தலைகுனிந்தபடி உட்கார்ந்திருந்த மூர்த்தியைப் பார்த்து ஸப்-இன்ஸ்பெக்டர், "ஆமாம், நீ பெங்களூரிலிருந்து வந்தவுடன் கோபு விடம் போய் உனக்குச் சேரவேண்டிய ஐயாயிர ரூபாயைக் கேட்டு மிரட்டினயா?" என்ருர்.

"நான் ஐயாயிர ரூபாய் கேட்கவில்லை. இந்தக் கொலையால் எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியைப் போக்கிக்கொள்ள நான் பெங்க ளூர் போயிருந்தேனல்லவா? அங்கு கண்ணை மூடிக்கொண்டு காசை அள்ளி வீசிச் செலவு செய்து என் மனதிற்குச் சாந்தி தேட முயன்றேன். அதில் எனக்கு ஆயிரத்து எண்ணூறு ரூபாய் செல வானது. அதற்குப் பணம் வாங்க என் காரை ஒரு 'ஷேட்'டிடம் நிபந்தனை அடமானம் வைத்து வாங்கினேன். "ஷேட்"டிற்கு குறுகிய காலத் தவணையில் பணம் தருவதாகச் சொல்லி வாங்கி னேன். அந்தப் பணத்தை மாத்திரம் கொடுக்கும்படி நான் கோபு வைக் கெஞ்சினேன். மிரட்டினேன். அவன் எதற்கும் அசைய வில்லை. அந்தக் காரையும், நேற்று இரவு "ஷேட்" வந்து கொண்டு போய்விட்டான்!" என்று பெருமூச்சோடு கூறினன்.

"சரி! போகலாம்!" என்ருர் ஸப்-இன்ஸ்பெக்டர். எல்லோ ரும் புறப்பட்டார்கள்.

# 12. ஸீதாவின் ரகசியம்?

போலீஸ் ஸ்டேஷனை அடைந்ததும் ஸப்-இன்ஸ்பெக்டர் உடனே ஸீதாவைத் தனியே அழைத்துவரச் சொன்னார். ஸீதா கண்ணீருங் கம்பலையுமாக அங்கு வந்து சேர்ந்தாள்.

ஸப்-இன்ஸ்பெக்டர் அவளை ஏற இறங்கப் பார்த்தார். பிறகு ஆதரவான குரலில், "ஸீதா! நீ சிறுவயதுப் பெண்! இன்னும் எவ்வளவோ வருஷங்கள் இந்த உலகில் சுகமாக வாழவேண்டியவள். அதோடு படித்தவள். உன் அறியாமையால் ஒரு கொலைகாரன் வலையில் சிக்கிக் கொண்டாய்! அதுவும் எப்படிப்பட்ட கொலைகாரன்? பணத்திற்காகத் தன் பேதை மனைவியையே கொலைசெய்யக் கூடியவன். அவன் தரும் காதல் போதையில் நீ என்ன நிம்மதி கண்டிருக்கமுடியும்?" என்று சொல்லிக்கொண்டே வரும்பொழுது, ஸீதா, தேம்பித் தேம்பி அழுதாள்.

ஸப்-இன்ஸ்பெக்டர் இன்னும் ஆதரவான குரலில், "அழாதே! அழுகையின் மூலம் நீ நிரபராதி ஆகிவிட முடியாது. நீ அகப்பட்டுக் கொண்டிருக்கும் வழக்கு, மிகவும் பெரிய வழக்கு! கொலை வழக்கு! இதில் உனக்குத் தெரிந்த எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டால், சர்க்கார் உன்னை மன்னிக்கவும் கூடும்! ஆகவே உனக்குத் தெரிந்ததை ஒளிக்காமல் சொல்லிவிடு! கோபுவை நீ எப்போது சந்தித்தாய்?" என்று கேட்டார்.

"ஒன்றரை வருஷங்களுக்கு முன்!" என்று கூறினாள் ஸீதா.

"எங்கே?"

"மூர்த்தியின் சினிமாக் கம்பெனியில்!"

"மூர்த்தியின் சினிமா கம்பெனிக்கு நீ எப்படிச் சென்றாய்?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"நான் இயற்கையாகவே நல்ல அழகுள்ளவள்! நான் எடுத்துக் கொள்ளும் போட்டோக்களில், என்முகவெட்டு என்னைக் கண்டே நான் மயங்கும் படியாக இருக்கும். அதனால்...சினிமாவில் நடித்தால் நிறையப் பணங் கிடைக்குமென்று நம்பி மூர்த்தியின் மகாமேரு புரொடெக்ஷன் சினிமாக் கம்பெனிக்குப் போனேன். என்னைப் பார்த்துவிட்டு மூர்த்தி, என்னைத் தன் படத்தில் கதாநாயகி வேஷத்தில் போடுவதாகச் சொல்லி, கொஞ்சகாலம் தன் கம்பெனியில் நிர்வாக வேலைகளைக் கவனிக்கும்படிச் சொன்னார். அதன் பிறகு யாரோ பணம் போடுவார்களென்றும், உடனே படம் எடுக்க ஆரம்பித்துவிடப் போவதாகவும் கூறினார். நான் 'சரி' யென்று

ஒப்புக்கொண்டு அங்கு வேலைக்குச் சேர்ந்தேன்! ஆனால் சினிமாவில் நடிக்கலாம் என்று ஆசைப்பட்டு வரும் புதுப் புதுப் பெண்களை பணக்காரர்களுக்குக் காட்டிப் பணம் பறிப்பதுதான் மூர்த்தியின் தொழில் என்பதைப் பிறகு தான் தெரிந்துகொண்டேன். ஆனால் என்வரையில் ஜாக்கிரதையாக நடந்துகொண்டு வந்தேன். சினிமாவில் நடித்தாலொழிய வேறெதற்கும் இணங்குவதில்லை யென்று மூர்த்தியிடம் கூறியும் விட்டேன்."

"மூர்த்தியின் சினிமாக் கம்பெனிக்கு வரும் முன் நீ எங்கு இருந்தாய்? உன் பெற்றோர்கள் யார்?" என்று ஸப்-இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"என் பெற்றோர்கள் மதுராந்தகத்திற்கு அருகே ஒரு கிராமத்தில் இருக்கிறார்கள். நாங்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எனக்கு மூத்த சகோதரிகள் இருவர் இருக்கிறார்கள். அவர்களுக்குத் திருமணம் ஆகிவிட்டது. இருந்தபோதிலும் வரதட்சணை கொடுக்காததால் அவர்கள் இருவரையும் கணவன் வீட்டார் திருப்பி அனுப்பிவிட்டார்கள்...

"என்னையும் மணம் செய்து கொடுத்து வரதட்சணை கொடுக்க இயலாமல் வீட்டில் வைத்துக் கொள்வதைவிட படிக்க வைத்து வேலைக்கு அனுப்பிவிட்டால், என் வாழ்நாளை நான் எப்படியாவது கழித்துக் கொள்வேனென்று நினைத்து, என் தந்தை என்னை 'ஸ்கூல் பைனல்' வரை படிக்க வைத்து, டைப்ரைட்டிங்கும் பழகச் செய்தார்...

"என்னை ஒரு சாதாரண டைபிஸ்டாக மாற்றி விட்டால், என்னைப் பற்றிய தன் கவலைகள் மறைந்துவிடும் என்று தான் என் தந்தை எண்ணி இருந்தார். ஆனால் என் எண்ணம் வேறு விதமாக இருந்தது...

"என் சகோதரிகள் இருவர் மீதும் எனக்கு அளவு கடந்த பாசம் இருந்தது. அவர்கள் நல் வாழ்வு நடத்த என்னால் என்னென்ன தியாகம் செய்ய முடியுமோ, அவ்வளவும் செய்யத் தயாராக இருந்தேன். என் சகோதரிகள் இருவரும் படிக்காதவர்கள். அவர்களால் சம்பாதிக்க முடியாது. தங்கள் வாழ் நாள் பூராவும் ஒருவர் தயவில் தான் அவர்கள் கழிக்கவேண்டும். ஆனால் அவர்கள் கணவர் வீட்டை விட்டு வெளியே எங்கும் போய் இருக்கவும் முடியாது. இந்த நிலையில், அப்பாவால் தன் வாழ்நாளில் சம்பாதித்து அந்த வரதட்சணையைக் கொடுக்க முடியாது! இதற்கு நான் தான் ஏதாவது வழி செய்யவேண்டும் என்று தீர்மானித்தேன்...

"டைபிஸ்ட் வேலை பார்ப்பதன் மூலம் என் சாப்பாட்டுச் செலவிற்கே என்னால் சம்பாதிக்க முடியாது என்றும் எனக்குத் தெரியும்.

ஆகவே, நான் ஏதாவது நிறைய பணம் கிடைக்கும் வேலையில் சேர்ந்து சம்பாதிக்க வேண்டும்! ஒரே வருஷத்தில் பல்லாயிரக் கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்து ஆகவேண்டும்! அப்பொழுது தான் என் சகோதரிகளுக்கு தேவையான வரதட்சிணை கொடுத்து அவர்களைக் கணவர் வீட்டுக்கு அனுப்பி அவர்களை வாழ வைக்க முடியும்! அவ்வளவு பெரும் பணம் ஒரே வருஷத்திற்குள் நான் சம்பாதிக்காவிடில் என் சகோதரிகள் ஆயுள் முழுதும் வாழா வெட்டிகளாகப் பிறந்தகத்திலேயே அழுது வாட நேரிடும்...

"இதற்கு ஏற்ற வேலை எதுவும் எனக்குப் புலப்படவில்லை. கடைசியில் சினிமா ஒன்று தான் நிறையப் பணம் சம்பாதிப்பதற்குச் சரியான தொழில் என்ற முடிவுக்கு வந்தேன். சினிமாவில் சேருவதன் மூலம் என் கௌரவத்திற்குக் களங்கம் ஏற்படுவது மட்டுமல்ல, என் அழகைச் சூதாட்டக் காயாக வைத்துக் கற்பை பலிகொடுக்க நேரிடலாம் என்பதும் எனக்குத் தெரியும். இருந்தபோதிலும் என் சகோதரிகளின் நல் வாழ்வுக்காக, நான் எத்தகைய தியாகத்திற்கும் தயாராக இருந்தேன். இந்த முடிவை நான் என் தந்தையிடம் கூறியபோது அவர் ஒரேயடியாக மறுத்து விட்டார். இருந்தாலும் என் அளவற்ற ஆசையைப் பார்த்து அம்மா மாத்திரம் கொஞ்சம் ஆதரவு காட்டினாள்...

"இந்தச் சமயத்தில் தான், மூர்த்தி தனது சினிமாப் படத்தில் நடிக்க கதாநாயகி வேண்டுமென்று விளம்பரம் செய்திருந்தான். நான் என் அப்பாவுக்குத் தெரியாமல் புறப்பட்டு இங்கு வந்து சேர்ந்தேன்." என்று நிறுத்தினாள் லீதா.

பிறகு ஒரு பெரு மூச்சு விட்டு தொடர்ந்து பேசினாள்:

"அதனால் தான் மூர்த்தி ஏமாற்றுப் பேர்வழி என்று தெரிந்தும் அவனுடைய பராமரிப்பைப் புறக்கணித்துவிட்டு வேறெங்கும் போக முடியவில்லை. வீட்டை விட்டு வெளியேறி விட்ட குடும்பப் பெண்ணை மறுபடி வீடும் சமூகமும் வரவேற்றுக் கொள்ளுமா? பருவத்தின் பொலிவில், பார்த்தவர் ஏங்கும்படியான அழகு ஜொலிப்புள்ள ஒரு பெண்ணுக்கு வேறெந்த இடத்தில் தான் நேர்மையான பாதுகாப்பு கிடைக்க முடியும்? மேலும் எனக்குச் சினிமாவில் நடித்து நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டுமென்று அவசரத் தேவை. மூர்த்தியும் அப்படிப் படமெடுக்கக் கூடிய முதலாளியான ஒரு "பைனான்ஷிய"ரைத் தான் தேடிக் கொண்டிருப்பதாகச் சொல்லி வந்தான்."

"பிறகு?"

"ஒரு நாள் கோபு அவனிடம் வந்தார். அவர் தான் படமெடுக்கப் பணம் தரப்போகிறார் என்று மூர்த்தி என்னிடம் ரகசியமாய்க்

கூறினன். பிறகு இருவரும் தனியாக ஓர் அறைக்குள் போய் என்னவோ வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். மூர்த்தி என்னைக் கூப்பிட்டு, நான் கோபுவுடன் பேசிக் கொண்டிருக்கும் போது பட்டென்று கதவைச் சாத்திக் கொண்டு போய் விட்டான். என் சர்வாங்கமும் நடுங்கியது. ஜன்னல் கதவுகளெல்லாம் சாத்தப் பட்டிருந்தன. நான் கீறிச்சிட்டு கூச்சலிட்டாலும் பலனிராது. அன்றிரவு என் கற்புப் பலவந்தமாகச் சூறையாடப்பட்டு விடும் என்று பயந்து விம்மி விம்மி அழுது கொண்டிருந்தேன். ஆனல் கோபு என்னைப் பார்த்துக் கனிவுடன் புன்னகை செய்தாரே தவிர என்னைத் தொடக்கூட இல்லை. அதிலிருந்து கோபுவின் முகந்தான் குரூரமே தவிர, உள்ளம் குரூரமானதல்ல என்று நினைத்தேன். மிதமிஞ்சிய ஸ்திரீ வேட்டை யாடித் திரிந்து சலித்துப் போனவராத லால் தான் அவரிடம் அவ்வளவு துடிப்பில்லை. அதனல் தான் கண் ணியமான மனிதர் போல் நடந்துகொள்ள முடிகிறது என்பதை அப்போது நான் உணரவில்லை. அதனல் மூர்த்தியிடம் என்னவோ எனக்கு ஒரு பற்றுதலும், அவருக்கு இரண்டு மனைவிகள் தவறிப் போய் விட்டார்கள் என்று கேட்டபோது எனக்குப் பரிதாபமும் உண்டாயிற்று. நான் கோபுவை உள்ளூர விரும்பினேன். அதன் பின்னர் மூர்த்தி என்னிடம் வந்து, "கோபுவின் ஆபிஸில் கொஞ்ச நாளைக்கு ஒரு டைப்பிஸ்ட் வேண்டுமாம். அதோடு அத்தகைய பெண் தனக்கு அந்தரங்கக் காரியதரிசினியாகவும் வேலை பார்த்தால் தேவலை என்கிறன். அதனல் நீ போய் அங்கே வேலை பார்! சமயம் கிடைக்கும் போதெல்லாம் அவனைத் தூண்டிவிட்டு, சினிமாப் படம் எடுக்க உடனே ஆரம்பம் செய்யும்படி சொல்லு! இது நமக்கு நல்ல சந்தர்ப்பம்! விடக் கூடாது!" என்றுன். நான் சரியென்று ஒப்புக் கொண்டு கோபு ஆபிஸில் வேலைக்கு வந்து சேர்ந்தேன்!" என்ருள் ஸீதா.

"பிறகு?"

"பிறகு என்ன? என் மனம் பூரணமாக கோபுவின் பேச்சை நம்பிவிட்டது. சினிமாவில் நடிக்க வேண்டுமென்ற ஆசை மறந்து அவனுக்கு மனைவியாக வாழ வேண்டுமென்ற ஆசை பிறந்தது. ஆனல் நாங்கள் ஒன்று சேர்வதற்குத் தடையாய் அவனுக்கு பத்மா என்ற ஒரு மனைவி இருக்கிருள் என்பதை அறிந்தபோது என் மனம் சொல்லொணு வேதனைப்பட்டது. பத்மாவின் ஜாதகப்படி அவள் சீக்கிரம் இறந்துவிடுவாள் என்று ஜோசியம் பார்த்ததாக் கோபு என்னிடம் கூறி என்னைச் சமாதானப் படுத்த முயன்றர். வேறு வழியில்லாமல் அதுவரை அவருக்கு இரகசியக் காதலியாக இருந்து வரவும் சம்மதித்தேன். ஏனெனில் அவர் மீது எனக்கு அவ்வளவு தூரம் காதல் இருந்தது. அவரை மனிதன் என்று

மதித்து வந்தேனே தவிர, பணத்திற்காக மனைவிமாரைக் கொல்லும் மிருகமாய் இருப்பார் என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை!" என்று ஓவென அழுதாள் ஸீதா.

ஸப்-இன்ஸ்பெக்டர் கொஞ்ச நேரம் ஒன்றும் பேசாமல் யோசனையாக இருந்தார். பிறகு அலட்சியமாக ரொம்ப சாதாரணமாகக் கேட்பவர் போல ஸீதாவிடம், "கோபு தன் மனைவி பத்மாவைக் கொலை செய்தானே, அவனுடைய காரியங்களுக்கு உடந்தையாக இருக்க நீ அவனை எவ்வளவு ஆயிரம் ரூபாய் கேட்டாய்?" என்றார்.

"நான் ஒரு தம்பிடி கூடக் கேட்கவில்லை! அவர் செய்த காரியம் எதுவும் எனக்குத் தெரியாது!" என்று அழுகையோடு கூறினாள் ஸீதா.

"பாம்புகளைக் கொண்டு வந்து சோதனை செய்து பார்த்த பொழுது நீ அவைகளை எதற்குக் கொண்டு வந்தான் என்று கேட்கவில்லையா?" என்று கேட்டார்.

"கேட்டேன்! யாரோ ஒரு மிருக நூல் ஆராய்ச்சியாளருக்காக வாங்கிக் கொண்டு போவதாகக் கூறினார்."

"கொலை நடந்தது உனக்கு எப்போது தெரியும்?"

"நான் கோபுவின் பங்களாவிற்கு வந்த பிறகு சில விஷயங்களை அவர் கூறித் தெரிந்து கொண்டேன். ஆனால் முழு விவரமும் சத்தியமாகத் தெரியாது!" என்று கூறிவிட்டு அழுதாள்.

"போலீஸுக்கு உடனே ஏன் தகவல் கொடுக்கவில்லை?"

"என்னால் அவரைக் கொலைகாரன் என்று காட்டிக் கொடுக்க முடியவில்லை. ஒரு புறம் பயம்; இன்னொரு புறம் காதல். என் வியவகாரமும் வெளியாகுமே என்ற அவமானம் வேறு!"

ஸப்-இன்ஸ்பெக்டர் அவள் வார்த்தையை ஓரளவு நம்பினார். ஏனென்றால், அவள் அந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் கூறும் பொழுது தங்கு தடையில்லாமல் சொல்லிக் கொண்டே சென்றாள். இடையில் தன்னைத் தயார் செய்து கொண்டு அவள் 'பொய்' சொல்லவே இடமில்லாமலிருந்தது. எனினும், அவளை 'லாக் அப்'பிற்கு அனுப்பி விட்டு, ஸப்-இன்ஸ்பெக்டர் தம் ஆபீஸ் அறைக்குத் திரும்பினார்.

# 13. பிஞ்சிலே பழுத்தது !

ஆபீஸ் அறையை வந்தடைந்ததும், ஸப்-இன்ஸ்பெக்டர், சிறையிலிருந்து கோபுவை அங்கு கொண்டு வரச் செய்தார். கோபு உள்ளே வந்தான். அங்கு மூர்த்தி, ராஜு முதலியவர்கள் இருப்பதைப் பார்த்துத் திடுக்கிட்டான். பிறகு சமாளித்துக் கொண்டு ஒன்றும் அறியாதவன் போல முகத்தை வைத்துக் கொண்டான்.

ஸப்-இன்ஸ்பெக்டர் அவனை உட்காரச் சொன்னார். எந்தவிதச் சலனமு மில்லாமல் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான்.

"கோபு! உன் மூன்றாவது மனைவி பத்மாவைக் கொன்றது நீ தான் என எனக்குத் தெளிவாக நிரூபணமாகி விட்டது!" என்று கூறிவிட்டு, ஸப்-இன்ஸ்பெக்டர் அவனிடம் ஏதாவது மாறுதல் ஏற்படுகிறதா என்று கவனித்தார்.

கோபு சாவதானமாக அவரைப் பார்த்தான். "சரி!" என்று சாதாரணமாகப் பதில் கூறினான்!

ஸப்-இன்ஸ்பெக்டர் திகைத்துப் போய் விட்டார். அதைக் காட்டிக் கொள்ளாமல், "அதை நீ மறுக்கிறாயா?" என்றார்.

"ஒப்புக் கொள்கிறேன்!" என்றான் கோபு!

சிறிது நேரம் ஒரு பயங்கர அமைதி நிலவியது.

"உன் முதல் மனைவியைக் கொன்றதும் நீ தானே?" என்று கேட்டார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"உங்களால் நிரூபிக்க முடியுமா?" என்று எதிர்க் கேள்வி கேட்டான் கோபு.

ஸப்-இன்ஸ்பெக்டர் சிறிது நேரம் யோசித்தார்,

"அதை நிரூபிக்க நான் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நினைக்கவில்லை. ஏனென்றால், இந்தக் கொலைக்கே உனக்குத் தூக்குத் தண்டனை கிடைக்கும். அந்தக் கொலையை நிரூபித்து உனக்கு இன்னொரு மரண தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஏனென்றால் ஒருவனை இரண்டு தடவை தூக்கில் போட முடியாது! ஆனால் நான் கேட்பது வேறு காரணத்திற்காக!" என்று நிறுத்தினார்.

"எதற்காக?" என்று அலட்சியமாகக் கேட்டான் கோபு.

"உன் மனச் சாந்திக்காக! தூக்கு மேடையில் ஏறும்போது நாம் செய்த எல்லா பாவங்களுக்கும் பரிகாரம் கிடைத்து விட்டது என்ற நிம்மதியோடு நீ இறப்பதற்காக!" என்று நிதானமாகக் கூறினார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

கோபு இலேசாகச் சிரித்தான். ஒன்றும் பேசவில்லை.

"என்ன கோபு ?" என்று பரிவாகக் கேட்டார் ஸப்-இன்ஸ்பெக்டர்.

"அவளையும் நான் தான் கொன்றேன்! அவளை மட்டுமல்ல, இரண்டாவது மனைவியையும் நான் தான் கொன்றேன்! ஆத்திரத்திலோ, ஆவேசத்திலோ கொல்லவில்லை; திட்டமிட்டே கொன்றேன்!" என்று தீர்க்கமாகக் கூறினான் கோபு.

ராஜுவின் உடல் சிலிர்த்தது.

ஸப்-இன்ஸ்பெக்டர் கொஞ்ச நேரம் கோபுவையே பார்த்துக் கொண்டிருந்தார். பிறகு மெதுவாக, "எதற்காக கோபு இப்படிக் கொலை செய்தாய்? நீ படித்தவன். உலக ஞானமுள்ளவன். நல்ல குடும்பத்தில் பிறந்தவன். ஏன் கொலை செய்தாய்?" என்று ஆதரவாகக் கேட்டார்.

இதுவரை முரட்டுத்தனமாகப் பதில் கூறிக் கொண்டு வந்த கோபுவின் கண்களிலிருந்து இப்பொழுது 'மள-மள' வெனக் கண்ணீர் கொட்ட ஆரம்பித்தது. "என்னைப் பற்றிப் பேசுங்கள்! என் குடும்பத்தாரை இழுக்காதீர்கள்!" என்று தழு தழுத்த குரலில் கூறினான்.

ஸப்-இன்ஸ்பெக்டர், "அது சரி! எதற்காக நீ இப்படிச் செய்தாய்?" என்று மீண்டும் வற்புறுத்திக் கேட்டார்.

கோபு சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்திருந்தான். பிறகு தொண்டையைக் கனைத்துக் கொண்டான். சுற்றிலும் இருந்தவர்களை ஒரு முறை பார்த்தான். பிறகு அவன் பார்வை வெட்ட வெளியிலே லயித்திருந்தது. மெதுவாகப் பேச ஆரம்பித்தான்.

"கௌரவமான குடும்பத்தில் பிறந்த எனக்கு எப்படி இந்தப் பஞ்சமா பாதகப் புத்தி ஏற்பட்டு கொலை செய்தேன் என்று கேட்டீர்கள். நியாயமான கேள்வி. அதற்குக் காரணம் என் குடும்பம் அல்ல. நான் தான் காரணம்!...

"கல்லூரியில் படிக்கும் காலத்தில் எனக்கு ஏற்பட்ட சேர்க்கை ரொம்பத் தகாததாக இருந்தது. ஆனால் அப்பொழுது அதைத் தான் நான் விரும்பினேன். எங்கள் பழக்க வழக்கங்களெல்லாம் ரொம்பவும் ஆட்சேபகரமாக இருந்தன, கெட்ட சகவாசத்தினால் எனக்குப் பெண்ணாசை அதிகமாயிற்று. அந்த செலவுகளுக்கெல்லாம், எங்கள் வீட்டினர் அனுப்பும் பணம் போதாததாக இருந்தது. அதற்காக நாங்கள் சொந்தமாக பணம் சம்பாதிக்க வேண்டி

"அதற்காக நாங்கள் சூது ஆடப் பழகிக் கொண்டோம். ஏத ஆட்டத்திலும் 'சூது' செய்து சம்பாதிக்கும் மார்க்கங்களையும் கற்றுக் கொண்டோம். அதில் வந்த வருமானம் பிரமாதமாக இருந்தது...

"கல்லூரிப் படிப்பு முடிந்ததும் நான் சென்னையில் ஒரு கம்பெனியில் குமஸ்தாவாகச் சேர்ந்தேன். நாளொன்றுக்கு எட்டு மணி வீதம், மாதத்தில் (ஞாயிற்றுக் கிழமைகள் நீங்கலாக) இருபத்தாறு நாட்கள், அதாவது இருநூற்று எட்டு மணி நேரம் 'மாடாக' உழைத்த எனக்குச் சம்பளம் நாற்பது ரூபாய்தான்! அதாவது, சூதாட்டத்தில் பதினைந்து நிமிஷத்தில் சம்பாதிக்கும் பணம்! இதை நினைக்க நினைக்க என் மனம் அளவு கடந்த வேதனை அடைந்தது. சுலபமாக உடல் நலுங்காமல் ரூபாய்களைச் சம்பாதித்து "கனா" கண்ட எனக்கு இந்த மாதிரி அவதிப்பட்டு சம்பாதிக்கும் முறையில் வெறுப்பு ஏற்பட்டது. ஆகவே குமாஸ்தா வேலைபார்க்கும் பொழுதும் ஒரு பிரபல பத்திரிகை நடத்தி வந்த போட்டிப் பந்தயங்களுக்குத் தவறாமல் விடை எழுதி வந்தேன்...

"எதிர்பார்த்தபடி எனக்கு ஒரு நாள் மிகப் பெரிய பரிசு விழுந்தது! முப்பதாயிரம் ரூபாய்! அந்தப் பணத்தில் இருபதாயிர ரூபாய்க்கு மாம்பலத்தில் ஒரு பங்களா வாங்கினேன். ஐயாயிர ரூபாயில் ஒரு கார் வாங்கினேன். பாக்கி ஐயாயிர ரூபாயில், இரண்டாயிர ரூபாய் செலவு செய்து மணம் செய்து கொண்டேன். இவ்வளவு அந்தஸ்து வந்த பிறகு, குமாஸ்தா வேலை பார்ப்பது கேவலம் என்று அந்த வேலையை விட்டு விட்டேன்...

"மணமாகி ஆறு மாதங்கள் கழிந்தன. மீதி இருந்த பணத்தில் கிட்டத் தட்ட இரண்டாயிரம் ரூபாய் செலவாகி விட்டது. பாங்கில் ஆயிர ரூபாய் சில்லறைதான் இருந்தது...

"வருங்காலத்தைப் பற்றி என்ன செய்வது என்று என் மனம் அலறியது. மாம்பலம் பங்களாவும், சொந்தக் காரும் எனக்கு சமூகத்தில் ஒரு போலி அந்தஸ்தை ஏற்படுத்தி விட்டன. நான் யாரிடமும் வேலை பார்க்கவும் முடியாது. எனக்காகத் தொழில் செய்யவும் தெரியாது. நான் கஷ்டப்படவும் தயாராக இல்லை! எப்படியும் பணம் சம்பாதிக்க வேண்டும்! அதுவும் சுலபமாகச் சம்பாதிக்க வேண்டும்! அதற்கு என்ன வழி ?...

"இந்தச் சமயத்தில் செய்திப் பத்திரிகையில் மேல் நாட்டில் நடந்த ஒரு விசித்திரமான வழக்கு விபரத்தைப் படித்தேன். அதில் ஒருவன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியை ஏமாற்றிப் பணம் பறித்து விடுகிறான் என்று எழுதி இருந்தது. அங்கு ஏமாற்று வேலை நடத்தியவன், 'இன்ஷ்யூர்' செய்திருந்த தன் தொழிற்சாலையைக்

...கூரு நத்தி விட்டுப் பணம் வாங்கிஞன் என்று எழுதப் பட்டிருந்தது. அது போல் நாமும் சுலபமாகச் சம்பாதித்தால் என்ன என்று எனக்குத் தோன்றியது...

எனக்குக் கொளுத்துவதற்கு தொழிற்சாலை கிடையாது. ...டை 'இன்ஷ்யூர்' செய்து விட்டுக் கொளுத்தலாம் என்ருலோ, ...ான் அதற்குக் கிரயமாகக் கொடுத்த இருபதாயிரம் ரூபாய் நஷ்டமாகிவிடும். அந்த நஷ்டங் கூட இல்லாமல், பணம் திரட்ட வேண்டுமென்று முடிவு செய்தேன். அதற்கு ஒரே வழி மனைவி மீது இன்ஷ்யூர் செய்து, அவளைத் தீர்த்து விடுவதுதான் என்று தோன்றியது...

"மனைவியைக் கொலை செய்ய, சாதாரணக்கணவனுக்கு மனம் வராது. ஆனல், நான் மணம் செய்து கொண்டது காதலுக்காக அல்ல. சமுதாயத்தில் ஒரு கௌரவம் வேண்டும் என்பதற்கே அவளை மணந்து கொண்டேன். ஆகவே என் முதல் மனைவி மீது எனக்கு பாசமோ, பற்ருே கிடையாது...

"நான் பிஞ்சிலே பழுத்து பிஞ்சிலே வெம்பிப் போனவன். கட்டிளம் வயசில் பெண் பித்துப் பிடித்து, வித விதமான பெண்களையெல்லாம் நாடித் திரிந்ததிலே, அந்த இன்பமே விரைவில் சலித்துப் போய் பெண் மீது இயற்கையாக ஏற்படக் கூடிய மோகமே தீர்ந்து போயிற்று. அதற்காக, பழைய சுகத்தைக்காண வேண்டும் என்ற ஆசைக்காக, தீய நண்பர்கள் கூறிய ஆலோசனைப்படி குடிப்பழக்கத்தையும் கைக் கொண்டு பார்த்தேன். இந்த அபரிமிதமான கேளிக்கைகளினல் எனக்கு விரைவிலே எதிலும் சலிப்புத் தட்டிப் போய் எதிலும் ஒரு விரக்தி உணர்ச்சிதான் மிஞ்சியது. இந்த நிலையில் என் முதல் மனைவி என் ஆசையைக் கவர முயற்சி செய்திருந்தாளாஞல் நான் ஓரளவு திருந்தி குடும்ப வாழ்க்கையில் பிடிப்புள்ளவனைய் இருந்திருப்பேன். ஆனல் அவள் அவ்வாறு எந்த முயற்சியும் செய்யவில்லை. அவள் மிகவும் அசடாக இருந்தாள். என் ஆசைக்கு ஏற்றவளாய் இல்லை. அதோடு மட்டுமல்ல, ... முகமும் ஆசைக்குரியதாய் இல்லை. எனக்கு அம்மை வா... தழும்புகள் நிறைந்த முகமென்றும் எந்தப் பெண்ணும் ... கூடிய சுந்தரமுகம் அல்ல என்றும் என்னவோ ஒரு தாழ்வு... தோன்றி என்னை வதைத்துக் கொண்டு வந்தது. ... என் முகம் கவர்ச்சியாய் இராது என்ற நினைப்பே, ... ளன்மீது என்னவோ ஒருவித வெறுப்பையும் உண்ட...

"ஒரு நாள் நானும் என் முதல் மனைவியும் ... கொண்டிருந்த போது எங்களுக்கு முன் சீட்டி... அமர்ந்திருந்தான். அவனுக்கு அழகான பெண்... அவனுடைய முகத்தைத் தற்செயலாக எதிர்...

மனைவி, ஒரு கணம் குறு குறுவென்று தன்னை மறந்து ... பார்த்து விட்டு, சட்டென்று தலை தாழ்த்திக் கொண்ட... போது அவள் முகம் வியர்ப்பதைக் கண்டேன். அப்படி பார்த்ததில் தவறோ, விபரீதமான எண்ணமோ எதுவுமில்லை. ஆனாலும் அந்த வாலிபனின் முகம் என்னை விட அழகானது ... என் நெஞ்சை என்னவோ ஒன்று உறுத்துவது போலிருந்த அவளது பார்வை. அது முதல் என் முதல் மனைவியின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே கூசி வந்தேன். அவள் மீது என்னால் இன்ன தென்று விவரிக்க முடியாத என்னவோ ஒரு வெறுப்பும் வளர்ந்து வந்தது...

• "அவளை அப்படியே முகத்தில் பிறாண்டி கழுத்தை நெறித்துவிட வேண்டும் என்பது போன்ற என்னவோ ஒருவித இரத்த வெறியும் உண்டாகும். இந்த நிலையில், சமூகத்தில் என் அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ளப் பணத் தேவை ஏற்படவே, அதற்காக அவளைத் தொலைத்து விடலாம் என்ற எண்ணமும் தலை தூக்கியது...

"என் திட்டப்படியே அவளுக்கு 'இன்ஷ்யூர்' செய்தேன். ஒரு நாள் நல்ல மழை பெய்து கொண்டிருந்தது. எனது (முதல்) மனைவி தூங்கிக் கொண்டிருந்தாள். அன்றைய தினம் பாங்கில் என் இருப்பு நூற்று எழுபது ரூபாய்தான் இருந்தது. இன்னும் காலந் தாழ்த்த என் மனம் துணியவில்லை. இன்றே அவளுக்கு முடிவுகட்ட வேண்டுமெனத் தீர்மானித்தேன்...

"தீர்மானித்தேனே தவிர, அந்த வேலையை நிறைவேற்றுவது அவ்வளவு சுலபமாக எனக்குத் தோன்றவில்லை. ஏனென்றால் நான் அதுவரை கொலை செய்ததில்லை. கொலைகாரர்களோடு பழகியதும் இல்லை. அப்படியிருக்க அவளை நேரடியாக, எப்படிக் கொல்வது என்று என் மனம் நடுங்கியது...

"ஆனால் எப்படியும் அக் கொலை நடைபெற்றாகவேண்டும்! ...து இயற்கையான சாவு போலவும் தெரியவேண்டும். என்ன ...வது என்று தீவிரமாக யோசித்தேன். தூங்கி விழித்ததும், ..., "டீ" போட்டு எனக்குக் கொடுப்பதற்காக அடுக்களைக்குப் ...ாள். அடுக்களையில் ஒரு பரணி கட்டப்பட்டிருந்தது. அதன் ...கள் அடுக்கப் பட்டிருந்தன. அவற்றைக் கீழிருந்தபடியே, ...டு அவள் உருவி எடுப்பாள். அப்பொழுது ...வள் தலையில் எதுவும் விழுந்தால்......?

...சனை எனக்குச் சரியாகவே பட்டது. அவசரமாக ...க்குச் சென்றேன். அங்கிருந்த விறகு பிளக்கும் ...த்துப்போய், அடுக்கி வைக்கப்பட்டிருந்த விறகு... ...த்திக் கொண்டிருக்கும் ...